கல்கி



KALKI 24-3-1957 4 அணா


மலர் 16
இதழ் 34

கல்கி

துன்முக[illegible]
பங்குனி [illegible]

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


தீண்டாமை
விலக்கு
காந்திமகான் எர்வாடா சிறையிலிருந்து சபர்மதி ஆசிரமத்திற்கு எழுதிய கடிதத்தில்....
உலகில் "தீண்டாதவர்" என்று
எவருமே யில்லை. ஏனெனில் ஒரே நெருப்
பின் ஜ்வாலைதான் ஒவ்வொருவரும்.
ஆகவே மனித ஜன்மம் எடுத்தோர்
எவரையும் தீண்டத் தகாதவர் என்று
ஒதுக்கி வைப்பது தவறு.
தீண்டாமை என்பது ஹிந்து தர்மத்தின்
பிரிவன்று. கட்டாயமன்று. தீண்டாமை
என்பது "நல்ல மரத்தைக் கெடுக்க
வந்த புல்லுருவி" என்றே கூற வேண்
டும். உண்மை ஹிந்து ஒவ்வொருவனும்
இந்தக் கொடுமையை ஒழிக்கக் கடமைப்
பட்டிருக்கிறான். இதைப் பாபமென்று
கருதி ஒவ்வொரு ஹிந்துவும் ஹரிஜனங்க
ளோடு சகோதரத்துவம் பாராட்ட
வேண்டும். அவர்களிடம் அன்பு பூண்டு
அவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும்.
அவர்கள் துயர்களைக் களைவதால், தான்
புனிதமாவதை உணர வேண்டும்.
தமிழ் நாடு
ஹரிஜன சேவக சங்கம்



மலர் 16 } தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற { துன்முகி
இதழ் 34 } தாயென்று கும்பிடடி பாப்பா – பாரதியார் { பங்குனி 4உ

திராவிடத்தைக் காப்போம்!

இந்தியாவில் அன்னிய ஆட்சி ஒழிந்து சுதந்திர ஆட்சி ஏற்பட்டுப் பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன. சுதந்திரம் பெற்றதில் உண்டான மகிழ்ச்சி பரவசங்கள் பொங்கி ஆறி. இப்போது புது உணர்ச்சிகளும் கவலைகளும் உண்டாகியிருக்கின்றன. இவற்றை ஆராய்ந்து வேண்டியவற்றைச் செய்வதும் கூடாதனவற்றை நீக்குவதும் தலைவர்களுடைய பணி. மக்களை அவ்வழியில் அழைத்துச் செல்வதும் தலைவர்களின் கடமையாகும்.


தனிப்பட்ட மனிதனுடைய சுதந்திரத்தையும் வாழ்க்கைச் சந்தோஷத்தையும் கொன்று எல்லாரையும் அடிமைகளாக்கும் தத்துவத்தைக் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் பரப்பி வந்தார்கள். "வறுமையை ஒழிக்கப் போகிறோம்" என்று ஏழைகளை ஏமாற்றி வந்தார்கள்.

"அந்த அராஜகக் கட்டம் 1953-ம் ஆண்டோடு நம்முடைய ராஜ்யத்தில் முடிந்து விட்டது. ஆந்திராவிலும் அப்படியே முடிந்து மறைந்து போயிற்று. தற்போது கேரளத்திலும் "நாங்கள் அராஜகக் காரியங்களைச் செய்யமாட்டோம்; அரசாங்கத்தை எங்களிடம் ஒப்புவியுங்கள்" என்று கம்யூனிஸ்ட் பிரதிநிதிகள் வாக்குறுதி தருகிறார்கள். ராஜாஜி 1953-ல் சொல்லிய வண்ணம் கம்யூனிஸ்ட் கட்சி சட்ட சபைகளில் சிறைப்பட்டு ஜனநாயக மார்க்கத்துக்கு வந்து விட்டது. இது கம்யூனிஸ்ட் இயக்கத்திலேயே ஒரு சிறந்த மாறுதல். மற்ற அரசியல் கட்சிகளைப் போலவே கம்யூனிஸ்ட் கட்சியும் அராஜகமும் அபாயமும் அற்ற ஒரு அரசியல் கட்சியாகி வேலை செய்யலாம் என்று இந்தியாவில் நிரூபணமாகி வருகிறது.

கம்யூனிஸ்ட கட்சியின் முக்கிய தத்துவமாகிய பொதுஉடைமை முறையைக் காங்கிரஸ் அறுபது சதவிகிதம் அங்கீகரித்துத் தன்னுடைய திட்டத்துக்குள் சேர்த்துக் கொண்டு விட்டது. அராஜக முறையைக் கையாண்டு பொதுஉடைமையை நிலைநாட்டுவதை கம்யூனிஸ்ட் கட்சி விட்டு விட்டது. எனவே, இனிமேல் காங்கிரஸுக்கும் கம்யூனிஸ்ட்களுக்கும் யுத்தம் கிடையாது.

தற்போது இந்தியா முழுதும் இரண்டு வேகங்கள் வேலை செய்து வருகின்றன. ஒன்று பயிர்த் தொழிலைப் பற்றியது; மற்றொன்று அந்த அந்த ராஜ்யங்களின் முன்னேற்றத்தைப் பற்றியது.

தொழில்களுக்குள் எல்லாம் பயிர்த் தொழில்தான் இந்திய மக்களுக்கு முக்கியமானது. அது சரியான நிலையில் இருந்தால்தான் மற்றத் தொழில்கள் எல்லாம் முன்னேற்றம் அடையும். இந்த உண்மையை எல்லாரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். தற்போது பயிர்த் தொழில் விவகாரங்களை தேர்தல்—லாப—நஷ்டங்களைக் கருதிச் செய்து வருவது வருந்தத்தக்கது. பயிர்த் தொழிலின் அபிவிருத்திக்கும் நிலத்தின் செழிப்புக்கும் எந்த முறை மேலானது என்று மட்டுமே பார்த்து நிலத்தைப் பற்றிய சட்டங்களைச் செய்யவேண்டும். வோட்டுகளுக்காக விவசாயத்தைப் பாழ்படுத்தலாகாது. நாட்டில் மறுபடியும் மளிகைக் கடைகளில் விற்பனைக்கு அரிசி இல்லாமல் பங்கீடு முறைகளை ஏற்படுத்தி மக்கள் கஷ்டப்படும்படி செய்யலாகாது. "மற்ற அட்டூழியங்கள் ஏதாயினும் பொறுத்துக் கொள்ளலாம், கண்ட்ரோல் வேண்டாம்" என்று கிராமங்களிலும் நகரங்களிலும் ஆண் பெண், எல்லாருமே ஒரு முகமாய் அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள்.



இந்தத் தேர்தலில் பணமே அதிக செல்வாக்குப்பெற்று விளங்கியதாகப் பேசிக்கொள்கிறார்கள்.

விவசாயச் சட்டங்களைக் கண்டபடி மாற்றிவிட்டு, ''அரிசி இல்லை, வியாபாரிகள் மோசடி செய்கிறார்கள்'' என்றெல்லாம் சமாதானம் சொல்லிப் பயனில்லை. ஒரு நாட்டில் விவசாயத்தைப் பற்றி வழக்கத்திலிருக்கும் மாமூல்களை அவசரப்பட்டு மாற்றலாகாது. காரணமில்லாமல் வழக்கங்கள் எந்த மக்கள் சமுதாயத்திலும் ஏற்படுவதில்லை. சீர்திருத்தம் செய்வது அவசியம்தான். ஆனால் எதைச் செய்ய வேண்டும், எவ்வளவு செய்யவேண்டும் என்பதை யெல்லாம் ஆராய்ந்து பாரபட்சமில்லாமல் செய்ய வேண்டும். பயிர்த்தொழில் சீர்திருத்தத்தை வோட்டுப் பெட்டி லஞ்சமாக்கக் கூடாது. இந்தப் பிரச்னை இந்தியா முழுவதிலும் மக்கள் கருத்தைப் பற்றி நிற்கும் ஒரு பிரச்னை. பிரதேசத்துக்குப் பிரதேசம் விவசாய விஷயத்தில் மாறுபட்ட பழக்க வழக்கங்கள் உண்டு. ஆகவே எல்லா ராஜ்யங்களுக்கும் ஒரே சட்டம் என்று செய்ய முடியாது. ஒரு ராஜ்யத்திலேயே நிலத்தின் சாகுபடி முறைகளில் இடத்துக்கு இடம், பூமியின் தரத்தைப் பொறுத்தும் மக்களின் உழைப்புத் திறமையைப் பொறுத்தும் வேறுபாடுகள் இருக்கும். ஆகவே ராஜ்ய முழுமைக்கும் ஒரே சட்டம் என்கிற தத்துவத்துக்குள் விவசாயம் அடங்காது.

இரண்டாவதான பெரிய பிரச்னை தற்போது பாஷாவாரி ராஜ்யம் என்கிற வேஷத்தில் நடமாடுகிறது. உண்மையில் எந்த விவகாரமும் மக்களைப் பற்றியதே யொழிய பாஷை அல்லது வேறு அசேதனப் பொருள்களைப் பற்றியதல்ல. இந்தியா ஒரு ஆட்சியாயினும் பாரதநாட்டின் மக்கட் தொகை மிகப் பெரியது. எல்லாப் பிரதேசங்களிலுள்ள மக்களும் முன்னேற்றம் அடைய வேண்டும். ஒற்றுமை உணர்ச்சி இருப்பினும் மிகப் பெரிய ஜன *சமூகத்தைப் பரிபாலிக்கும் போது எல்லாப் பிரதேசங்களையும் அவற்றின் முன்னேற்றத்தையும் கவனிக்க வேண்டும். மொத்தக் கணக்கைப் பார்த்து மக்கள் சந்தோஷப்பட மாட்டார்கள்.

நம்முடைய தென்னாட்டின் முன்னேற்றத்தைப் பாரத சர்க்கார் கவனித்து வருகிறார்கள் என்பதில் ஐயமில்லை. ஆயினும் சிலர் ஐயப்படுகிறார்கள் என்பதும் உண்மை. காவலிருந்தால்தான் எந்தக் காரியமும் சரியாக நடைபெறும். ராஜ்ய சர்க்காருடைய சுதந்திரங்களும் செல்வாக்கும் குறைந்து போகவிடலாகாது. பாரத சர்க்காருக்கே எல்லா பலமும் அதிகாரமும் ரத்தஓட்டமும் சென்றுவிடுவது பிரதேச முன்னேற்றத்துக்குப் பாதகம் விளைவிக்கும்.

திராவிடம் என்பது தென்னாட்டின் பெயர். அதன் முன்னேற்றத்தை முக்கியமாகக் கவனிக்கும் கூட்டம் ஒன்று இருப்பது அவசியம். திராவிடம் என்றால் உடனே ஜாதிபேதம், பிராமண துவேஷம் என்று எண்ணத் தோன்றும். இதற்குக் காரணம் நம்முடைய ''பெரியா''ரின் பேச்சும் திருவிளையாடல்களும்தான். இதை மூட்டைக் கட்டிக் கடலில் போட்டு மறந்து விட்டு, திராவிட நாட்டின் முன்னேற்றத்தைக் கவனிப்போமாக. ''ஜன கண'' என்று நாம் பாடும் நாட்டு வணக்கப் பாட்டில் சொல்லப்பட்ட 'திராவிட'த்தைக் கவனித்துக் காத்து வருவோமாக. இதை ஜாதித் துவேஷக் கூட்டத்தாருக்கு மட்டும் மான்யமாக விட்டுவிடாமல் எல்லாருமே அக்கறை செலுத்தி ஒன்றுபட்டு வேலை செய்ய வேண்டும். பிரதேசங்களின் முன்னேற்றத்தைக் கவனிப்பது மத்ய அரசாங்கத்துக்குப்

பகைமையாகாது. பாரத சர்க்காருக்குப் பிரதேச ராஜ்யங்கள் பலமும் அதிகாரமும் தரவேண்டும். இது நியாயமே யொழிய, பாரத சர்க்காரிடமிருந்து ராஜ்யங்கள் பலமும் அதிகாரமும் பெறுவது முறையல்ல. ''இந்திய யூனியன்'' என்பதற்குப் பொருள் பல பிரதேசங்கள் தங்களுக்கு இயற்கையில் இருக்கும் அதிகாரத்தில் ஒரு பங்கை மத்திய சர்க்காருக்குத் தருவதாகும். ''மாகாணம்'' என்பது போய், 'ராஜ்யம்' என்று பெயர்வைத்திருக்கிறோம். பாரத சர்க்காருக்கு யூனியன் என்று பெயர் வைத்திருக்கிறோம். யூனியன் தட்டில் அதிகாரம் அதிகமாகி ராஜ்ய சர்க்கார் தட்டில் நிறை குறைந்து போகலாகாது.

இலங்கை இந்தியப் பிரதிநிதிகள் யார்?

இலங்கையில் உள்ள இந்தியப் பிரதிநிதிகள் யார் யார்?

இலங்கை சர்க்காருக்குத் திடீரென ஞானோதயம் உண்டாகி, இலங்கை இந்தியர் பிரச்னையைத் தீர்ப்பதற்காக இந்தியப் பிரதிநிதிகளுடன் கலந்து பேச விரும்பினால், யாரை அழைத்துப் பேசுவது?

இந்தப் பலமான சந்தேகம் இப்போது இலங்கை இந்தியர்களுக்குத் தொல்லை கொடுக்கத் தொடங்கி யிருக்கிறது.

பிரஜா உரிமைக்காகவும் மொழி உரிமைக்காகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இலங்கை இந்தியர்கள் இப்போது மேற்படி போராட்டத்தை நடத்தும் தலைவர்கள் யார் என்பதைத் தெரிந்து கொள்ள முடியாமல் தத்தளித்து வருகிறார்கள்.

இது பெரிய விந்தை அல்லவா? விந்தை மாத்திரமல்ல, விபரீதமுங்கூட.

இலங்கையிலே ஜனாப் ஏ. அஸீஸ் தலைமையில் உள்ள ஜனநாயக காங்கிரசின் வருடாந்திரக் கூட்டம் சென்ற வாரம் நாவலப்பிட்டியில் நடந்தது.

அப்போது ஜனாப் அஸீஸ் நிகழ்த்திய தலைமைப் பிரசங்கத்தில் இலங்கை இந்தியர் பிரச்னை சுமுகமாகத் தீருவதற்கான சில யோசனைகளைக் கூறினார்.

அவர் கூறிய யோசனைகளில் மிகவும் முக்கியமானது இதுதான்: ''இலங்கை இந்தியர் பிரச்னை தீர உதவி புரியக் கூடியவர்கள் இலங்கை இந்தியப் பிரதிநிதிகளே தவிர, இந்திய அரசாங்கம் அல்ல. எனவே அப் பிரச்னைக்கு முடிவு காண இலங்கை சர்க்கார் இந்தியப் பிரதிநிதிகளுடன் சமரசப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்.''

ஜனாப் அஸீஸின் யோசனைகள் ஏட்டளவில் நன்றாக இருக்கின்றன. ஆனால் செயலில் கொண்டு வரும்போதுதான் சங்கடம்.

நற்பணிகள் புரிந்த நல்ல மனிதர்

தேசபக்தரும் பொதுநலத் தொண்டருமான திரு பி. எஸ். குமாரசாமி ராஜா தமது ஐம்பத்தெட்டாவது வயதில் உயிர் நீத்தார் என்ற செய்தி எல்லோருக்கும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும். ஸ்ரீ குமாரசாமி ராஜா 1932-ம் ஆண்டிலும் பிறகு 1941-லும் நடந்த சுதந்திரப் போராட்ட இயக்கங்களில் கலந்து கொண்டு சிறை சென்ற தேசபக்தராவார்.



காங்கிரஸ் ஸ்தாபனத்தில் பல முக்கிய பதவிகளைத் திறம்பட வகித்த திரு ராஜா, பாரத நாடு சுதந்திரம் பெற்ற பின் சென்னை ராஜ்யத்தின் பிரதமராகவும் ஒரிஸ்ஸாவின் கவர்னராகவும் இருந்து நிர்வாகத்தில் தமக்குள்ள நேர்மையையும் சாமர்த்தியத்தையும் நிரூபித்தார். மக்களின் சுபிட்ச வாழ்வுக்கு முக்கியமான கூட்டுறவு ஸ்தாபனங்களின் முன்னேற்றத்துக்காகவும் அவர் தமது ஆயுட்காலத்தில் புரிந்த அரும் பணியை யாரும் மறக்க முடியாது. அவர் ராஜபாளையத்தில் உள்ள தமது இல்லத்தைத் தேசத் திருப்பணிக்காக அர்ப்பணம் செய்தது அவரது தொண்டின் சிகரமாக அமைந்தது. எல்லோரும் போற்றுதற்குரிய நற்பண்புகளுடன் நல்வாழ்வு வாழ்ந்து வழிகாட்டி மறைந்த திரு குமாரசாமி ராஜாவைத் தமிழ் மக்கள் என்றும் மறவாமல் நினைவுகூர்ந்து போற்றி வருவார்கள் என்பது நிச்சயம்.

ஏனெனில் அஸீஸ் கோஷ்டியினர் தாங்கள் தான் இலங்கை இந்தியப் பிரதிநிதிகள் என்று பிரகடனம் செய்து கொண்டு மகாநாடு கூட்டியுள்ள அதே சமயத்தில், தொண்டமான் கோஷ்டியார் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

"எங்கள் கோஷ்டியார் அடங்கிய ஸ்தாபனமே ஜனநாயக காங்கிரஸ் என்று வழங்கப்பட்டு வருகிறது. ஜனநாயக காங்கிரசுக்கும் இப்போது நாவலப்பிட்டியில் கூடிப் பேசுகிறவர்களுக்கும் எவ்விதச் சம்பந்தமும் கிடையாது. காங்கிரசின் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் மீறித் தான்தோன்றித்தனமாக நடந்து கொண்டதற்காக, காங்கிரசிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களே இப்போது நாவலப்பிட்டியிலே கூடிப் பேசியிருக்கிறார்கள்" என்று தொண்டமான் கோஷ்டியினரின் அறிக்கை கூறுகிறது.

இலங்கையில் உள்ள இருபத்தைந்து லட்சம் தமிழர்கள் உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இச் சமயத்தில் தலைவர்கள் இரண்டு கோஷ்டிகளாகப் பிரிந்து நிற்பது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும்.

அந்த இரண்டு கோஷ்டியினருக்குள் இலட்சியத்தில் வேற்றுமை எதுவும் இல்லை.

இலங்கை இந்தியர்கள் பிரஜா உரிமை பெறவேண்டும்; அந்த நாட்டில் ஏற்கெனவே பல ஆண்டுகளாக இருந்து வந்தது போல் சிங்கள பாஷையுடன் தமிழும் அரசாங்க மொழியாக வேண்டும்—இவைதான் அவ்விரு கோஷ்டியினருடைய குறிக்கோள்களாகும்.

இலட்சியம், இலட்சியத்தை அடையவேண்டிய முறைகள் எதிலும் இலங்கை இந்தியத் தலைவர்களுக்குள் அபிப்பிராய பேதம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

அப்படியிருக்க, அவர்கள் ஏன் இரு கோஷ்டிகளாகப் பிரிந்து நிற்க வேண்டும்?

சென்ற சில ஆண்டுகளில் சுமார் ஐம்பதாயிரம் இலங்கை இந்தியர்களுக்கு மாத்திரமே பிரஜா உரிமை வழங்கப்பட்டுள்ளது.

ஐந்து லட்சம் பேருக்கு அவ் வுரிமை மறுக்கப்பட்டு விட்டதால், அவர்கள் நாடற்ற அனாதைகளாகி யிருக்கிறார்கள்.

இந்த உண்மையை அஸீஸ் கோஷ்டியினரும் அவர்களுடைய மகாநாட்டில் எல்லோரும் அறிய ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கை இந்தியர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியான கட்டத்தில், அவர்களுக்கு வழிகாட்ட வேண்டிய தலைவர்கள் சொந்த விருப்பு வெறுப்புச் சுழலிலும் கட்சிப் போட்டியிலும் உழன்று கொண்டிருப்பது பெரும் தவறு என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

அவர்கள் இலங்கை இந்தியர் பிரச்னையைத் தீர்க்க முயற்சி எடுத்துக் கொள்ளுமுன், தங்களிடையே ஏற்பட்டுள்ள பிரச்னையைத் தீர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம் அல்லவா? எனவே, இலங்கை இந்தியத் தலைவர்கள் தங்களுடைய மகத்தான பொறுப்பை உணர்ந்து கோஷ்டி மனப்பான்மையை விட்டொழித்து, ஒற்றுமைப்படுவார்கள் என்றும் இலங்கை இந்தியர்களின் மனவேதனையைத் தீர்மானிக்க முற்படுவார்கள் என்றும் எதிர்பார்க்கிறோம்.

ஆகாச வெடி

"நாம் முன்னமேயே கூறியபடி தேர்தலில் நேருஜியை எதிர்த்துப் போட்டியிட்ட மூவரும் தோற்று, ஜாமீனைப் பறி கொடுத்திருக்கிறார்கள்." —ஒரு சோதிடர் செய்தி

"அல்ல அல்ல. தோல்விக்குக் காரணம், மூன்று பேராக ஒரு காரியத்தில் இறங்கியதன் பலன்தான்!" என்று சகுனத்தில் நம்பிக்கையுள்ள ஒருவர் கூறுகிறார்.

★

"பிறக்கப் போகும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதை இனி எட்டு மாதங்களுக்கு முன்னதாகவே கூறி விடலாம் என்று வைத்திய ஆராய்ச்சியாளர் ஒருவர் அறிவிக்கிறார்." —பத்திரிகைச் செய்தி

ஆனால், குழந்தைக்கும் பெயரிடும் விஷயத்தில் தம்பதிகளிடையே சில சமயங்களில் நடக்கும் சண்டை, இந்த எட்டு மாதங்களுக்குள் முடிந்து விடும் என்று ஆராய்ச்சியாளரால் கூறமுடியுமா?

"கிழக்கு பாகிஸ்தானில் எங்கு இனி கல்யாணங்கள் நடந்தாலும் அங்கு 'பில் கலெக்டர்களை' அனுப்பி, ரூ. 15 கல்யாண வரி வசூலிப்பதென்று சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்." —தினசரி

தாங்கள் செல்லும் இடங்களிலெல்லாம் மேளதாளங்கள், விருந்து உபசாரங்களுக்கிடையே வரி வசூலாவதை நினைத்து அந்த பில் கலெக்டர்கள் கல்யாண வீடுகளில் மூர்ச்சித்து விழாமல் இருக்க வேண்டும்!

★

"ஒரு குறிப்பிட்ட அபேட்சகர் தேர்தலில் வென்றால் தாம் மொட்டை அடித்துக் கொள்வதாகச் சபதம் கூறியவர், கடைசியில் அவ்வாறே செய்து கொள்ள வேண்டியதாயிற்று." —ஒரு செய்தி

இவ்விதச் சபதங்களை வழுக்கைத் தலை நண்பர் ஒருவரைக் கொண்டு செய்யச் சொல்லி அவர் தப்பித்துக் கொண்டிருக்கலாமே!

வையகம் துயர் தீர வழி



ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள், பொன் விழா தினத்தன்று கல்கி நேயர்களுக்கு அனுப்பிய விசேஷ ஆசிச் செய்தி.

★

சென்ற ஐம்பது வருடங்களுக்குள் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்குமுன் ஐயாயிரம் வருடங்களில் ஏற்பட்ட மாறுதல்களை விட இந்த ஐம்பது வருஷங்களில் ஏற்பட்ட மாறுதல்கள் அதிகம் என்றே சொல்லலாம். இந்த ஐம்பது வருஷ மாறுதல்களிலிருந்து நமக்கு ஏற்பட்ட அனுபவம் மிகப் பெரிது. இவ்வளவு அனுபவங்களினின்றும் ஒரு விஷயம் மாத்திரம் தீர்மானமாகத் தெரிகிறது. மனிதர்கள் எவ்வளவுக் கெவ்வளவு பகவானிடத்தினின்றும் அவருடைய ஆக்ஞைகளான தர்ம நூல்களினின்றும் விலகுகிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு துன்பங்களுக்கு உள்ளாகிறார்கள். அறிவுச் சக்தியோ ஆற்றலோ அதிகப்படப்பட உலகத்துக்கு ஆபத்தும் அதிகரிக்கிறது. பக்தியும் சாந்தமுமே இவைகளுக்கு எல்லாம் உற்ற மருந்து. உண்மை பக்தியும் சாந்தமும் உலகில் பரவப் பரவ போலீஸுக்கும் நீதிமன்றங்களுக்கும் சைன்யங்களுக்கும் வேலை குறையும். ஆதலால் ஆட்சி மன்றத்தின் முதற்கடமை பக்தியையும் சாந்தத்தையும் பரவச் செய்வதே.

ஆனால் ஆட்சி மன்றத்தினரோ தாம் மதச் சார்பற்றவர்கள் என்று தீர்மானித்துக் கொண்டிருக்கிறபடியால் பக்தி பிரசாரம் அத்தீர்மானத்துக்கு மாறுபட்டதாகி விடுமோ என்று சந்தேகித்து இவ்வழி திரும்பாதிருக்கலாம். எப்படியிருப்பினும் மக்களில் அறிந்தோருடைய கடமை மக்களுக்கு உண்மையான நலனைக்கோருவதே.

மக்களுக்கு உண்மையான நலன் நம்மை விட்டுப் பிரிய முடியாத பேர் உறவினரான ஆண்டவனிடம் அன்பு செலுத்துவதனாலேயே வளரும். இது ஐம்பதாண்டுகளில் நம் முன்னோர்களைவிட நமக்கு ஏற்பட்ட அனுபவத்தின் சாரம்.

ஒவ்வொரு ஊரிலும் அனேக சங்கங்கள், குழுக்கள் நிறுவப்படுகின்றன. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு குறிக்கோள் உண்டு. ஒவ்வொன்றும் சிற்சில சமயங்களில் மற்றவைகளுடன் முரண்பட்டு ஊரிலும் நாட்டிலும் வெறுப்பு, கசப்பு முதலியவைகளுக்குக் காரணமாக முடிகிற நிலையில் நிகழ்வதாகப் பார்க்கிறோம். ஆதலால் எல்லாக் கசப்பையும் இனிப்பாக மாற்றக் கூடியதும், எல்லாப் புரட்சிகளையும் அன்பாக மாற்றக்கூடியதும் உண்மை உறவான பக்தி மார்க்கம் என்னும் வழிபாட்டைப் பரப்பும் கழகங்களே இப்போதும் எப்பொழுதுமே தேவை. மற்ற எல்லா அம்சங்களையும் கழகங்களையும் சாந்த முறையில் சீர்ப்படுத்தும் சாதனம் வழிபாட்டுக் கழகங்களே. ஏழு கோடி கிராமங்களிலும் சாந்த முறையில் கிராமம் ஒன்றுக்கு வார வழிபாட்டுக் கழகம் நிறுவ நாம் எல்லோரும் முனைந்து முயற்சித்து ஈசன் அருளைத் துணை கொண்டு அப்பணியை முடித்தோமானால், நாமும் சீர்ப்பட்டு, நம் நாட்டிலுள்ள எல்லாக் கட்சிகளும் சீர்ப்பட்டு நாடும் ஒரே அன்பு மயமாகும். ஒரு நாட்டின் மூலம் உலகமும் சாந்தியாகி, "லோகாஸ்ஸமஸ்தா சுகினோ பவந்து" "வையகம் துயர் தீர்க்கவே" என்ற நமது வேதநெறியின் சிறப்புக் கொள்கை புத்துயிர்பெற்று நிலவும், நிலவவும் வேண்டும்.

நவீன விஞ்ஞான வளர்ச்சிகளாலேயோ, பணவீக்கம் முதலியவைகளாலேயோ, பரஸ்பர அவநம்பிக்கைகளாலேயோ ஏற்படக் கூடிய எந்தப் புரட்சிகளையும் வெகு சாந்தமான முறையில் சமாளிக்கக் கூடிய வார வழிபாட்டுக் கழகங்களை நிறுவும் பணியில் நாம் எல்லோரும் ஒன்றுபட்டு எஞ்சியிருக்கும் நமது வாழ்நாட்களைப் பயன்படுத்தித் தொண்டு புரிவோமாக.

"நம் கடன் பணி செய்து கிடப்பதே!"



[நமது விசேஷ நிருபர் சரடு]

"உம்! புறப்படு சீக்கிரம்!" என்றார் விநாயகர், தமது வாகனம், மூஞ்சூறைப் பார்த்து. "கிர்ச்..கிர்ச்" என்று தமது மகிழ்ச்சியை வெளியிட்டு விட்டு, "சுவாமி! எங்கே புறப்பட வேண்டும், தங்களை ஏற்றிக் கொண்டு?" என்று மூஞ்சூறு வினவிற்று.

"அட அதிகப் பிரசங்கி! புறப்படும்போது எங்கே என்று கேட்பது? இனிமேல் இப்படிக் கேட்பாயா?" என்று விநாயகர் அதட்டவும், "தப்பு. தப்பு! இதோ தோப்புக்கரணம் போட்டு விடுகிறேன். மன்னித்துக் கொள்ளுங்கள்!" என்று எழுந்து நின்றது.

"தோப்புக்கரணங்களை எண்ணுவதற்கு இப்போது நேரமில்லை. போகட்டும். இந்தத் தடவை உன்னை விட்டு விடுகிறேன். கிளம்பு புது தில்லிக்கு!" என்றார் விநாயகர்.

"நான் நினைத்த இடத்துக்குத்தான் நீங்களும் போகச் சொல்லி விட்டீர்கள். ஹோலி பண்டிகையின்போது நேருஜியைப் பார்த்தால் பல வர்ணங்களில் தோற்ற மளிப்பார்!" என்று கூறிற்று வாகனம்.

"உன்னுடைய இஷ்டப்படி அங்கேயே நாம் போவோம்!" என்று விநாயகர் சொன்னதுதான் தாமதம் நேருஜியின் மாளிகையும் வந்து விட்டது.

வாசலில் நின்று கொண்டிருந்த காவற்காரர்கள் விநாயகரைக்கண்டதும், "சுவாமி! நல்ல சமயத்துக்குத்தான் நீங்கள் வந்தீர்கள்! நேருஜிமீது ஹோலித் தண்ணீரைக் கொட்டி அவரைக் குழந்தைகளும் மற்றவர்களும் படாதபாடு படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து நீங்கள் உள்ளே சென்று நேருஜியை மீட்க வேண்டும்!" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள்.

"அதைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்!" என்று சொல்லி விட்டு, விநாயகர் உள்ளே புகுந்தார். அங்கு ஒரு பெரிய பாத்திரத்தில் இருந்த சாயத் தண்ணீரைத் தமது துதிக்கையில் நிரப்பிக் கொண்டு நேருவைத் திணற அடித்தவர்கள் மீதெல்லாம் வாரி அடித்தார்.

விநாயகரை உட்காரச் சொல்லி, "எப்படி இருக்கிறது பார்த்தீர்களா இந்தப் பண்டிகை அமர்க்களம்!" என்று கேட்டுவிட்டு, "உங்கள் மீதும் கொஞ்சம் சாயத் தண்ணீரை அபிஷேகம் செய்யட்டுமா?" என்று வினவினார்.

"வேண்டாம், வேண்டாம். நான் இந்தச் சாயத் தண்ணீரைத் தாங்கினாலும் தாங்குவேன். மூஞ்சூறினால் தாங்க முடியாது. அரச மரத்தடியிலே உட்கார்ந்திருந்து எனக்கும் கால் மரத்துப் போச்சு. அரசியல் உலகத்தில் சஞ்சரித்து வருவதென்று கிளம்பி விட்டேன். இவை யெல்லாம் இருக்கட்டும். பொதுத் தேர்தல்கள் எல்லாம் ஒருவழியாக முடிந்து ....!" என்று விநாயகர் இழுத்தார்.

"ஆமாம். அநேகமாக முடிந்து விட்டதென்றே கூறலாம். பார்லிமெண்டு சபையும் தனது கடைசிக் கூட்டத்தைச் சுபமாக முடித்துக் கொண்டது. அதற்காகத் தனிச் சடங்குகள் எல்லாம் மிக அமர்க்களமாக நடந்தன. காங்கிரஸின் பெரிய தலைவர்கள் கூடி எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே போகலாம் வருகிறீர்களா?" என்று கேட்டார் நேருஜி.

"பேஷாகப் போவோம்!" என்று விநாயகர் கூறவும் நேருஜி அங்கிருந்து கிளம்பினார்.

விநாயகரும் நேருஜியும் அங்கிருந்து புறப்பட்டு ஒரு கட்டடத்துக்குள் நுழைந்தபோது அங்கு ஆசாத், தேபர், பந்த் போன்ற மேலிடத் தலைவர்கள் நேருஜியிடம் ஏதோ காகிதத்தைக் காட்டிப் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டார்.

"என்ன அந்தக் காகிதம்? பிரிட்டிஷ் அரசுக்குத் தாங்கள் தெரிவித்த வருத்தத்தின் விவரமா?" என்று ஸ்ரீ தேபரைக் கேட்டார்.

"இல்லை, இல்லை; இதுவும் சற்று வருத்தத்தைத் தரக்கூடிய விவரங்கள்தான். அதாவது தேர்தல் முடிவுகள்....!" என்றார் தேபர்ஜி.

"ஏன், தேர்தலில்தான் காங்கிரஸ் பொதுவாக ஐந்துக்கு நான்கு பழுதில்லை என்ற மாதிரி வெற்றி அடைந்திருக்கிறதே!"

"ஐயா, விநாயகரே! 'உங்களுக்கென்ன நீங்கள் சொல்லுவீர்கள். ஆனால்..எங்களுக்கென்னமோ..திருப்திகரமாக..!" என்று தேபர்வார்த்தைகளை முடிக்காமல் நிறுத்தினார்.

"கேரளம்..ஒருவேளை காரணமா?" என்றார் விநாயகர்.

"ஓரிடத்தில் 'கம்யூனிஸம்வெற்றி, இன்னோரிடத்தில் கம்யூனலிஸத்தின் வெற்றி, இன்னோரிடத்தில் இன்னுமொரு இஸத்தின் வெற்றி கிர்ச் கிர்ச்!" என்று இதுவரை பேசாமலிருந்த மூஞ்சூறு குறுக்கிட்டுப் பேசத் தொடங்கவே, ஆஸாத்ஜி அதை ஆச்சரியத்தோடு பார்த்தார். "மூஞ்சூறின் அபிப்பிராயத்தில் உண்மையும் இருக்கிறது!" என்று கூறினார்.

"எல்லாம் தெரிந்ததுதானே! இப்போது ஆகவேண்டிய காரியம் நம்முன் மலை போன்ற உருவில் காத்திருக்கிறது. ஆகவே விநாயகருக்கு விடைகொடுத்து விட்டு நாம் அவற்றையெல்லாம் ஆராய்வோம்!" என்றார் நேருஜி.

அடுத்தவிநாடியே வாகனம் அவரை ஏற்றிக் கொண்டு அரச மரத்தடியை அடைந்தது!

வம்புச் சாவடி

"கொக்கி"

ஆசைகள் எல்லாவற்றிலும் மோசமானது 'பதவி ஆசை'. 'எம்.எல்.ஏ,' 'எம்.பி.' என்ற பதவிகளை அடைவதற்காகச் சிலர் வீடு வாசல் மனைவி, மக்கள், உறவினர் முதலிய அனைத்தையுமே மறந்துவிடத் தயாராகி விடுகிறார்கள். பாருங்கள், இந்தத் தேர்தல்களில். ''மனைவி, கணவன் போட்டி, மனைவி தோல்வி!'' என்ற செய்தி வந்தது.

''அண்ணனைத் தோற்கடித்துத் தம்பி வெற்றி!'' என்ற செய்திகளைப் பார்த்தோம்.

''மகனைத் தோற்கடித்த தந்தை'' என்ற செய்தியைப் பார்த்தோம்.

''மாப்பிள்ளையுடன் மாமனார் கடும் போட்டி!'' என்றும், ''பள்ளிக்கூடச் சேவகரை எதிர்த்துப் பேராசிரியர் நிற்கிறார்'' என்றும் ''குரு, சீடன் போட்டி, குரு தோல்வி'' என்றும் விதம் விதமான விநோதச் செய்திகளைப் பற்றிக் கேள்விப்பட்டோம். இவை எல்லாவற்றுக்கும் காரணம்; மேலே சொன்னதுதான். பதவி ஆசைதான். பதவி ஆசை இருக்க வேண்டியதுதான். அதற்காக மனைவி, மக்கள், உறவு, தன்மை எல்லாவற்றையும் மறந்து விடக் கூடாதல்லவா ?

தேர்தலில் மாப்பிள்ளையைத் தோற்கடிப்பது மாமனாருக்குச் சுலபமாயிருக்கலாம். ஆனால் தேர்தல் முடிந்தபின் அப்பேர்ப்பட்ட மாமனாரை இலேசில் விடுவாரா மாப்பிள்ளை? மனைவிக்குத் தேர்தலில் தோல்வி புகட்டுவது கணவனுக்குச் சுலபமாய் இருக்கலாம். ஆனால் அப்பேர்ப்பட்ட மனைவி கையால் அளிக்கப்படும் காப்பியில் சர்க்கரை எப்போதும் இராதென்பதைக் கணவன் உணர வேண்டும் !

★

தேர்தலுக்கும் பஞ்சாங்கத்துக்கும் சில ஒற்றுமைகள் அமைந்திருப்பதாக என் நண்பர் ஒருவர் கூறுகிறார். பஞ்சாங்கத்தில் மேஷம், ரிஷபம், கும்பம், துலாம் முதலியன இருப்பதே போல், தேர்தலிலும் ரிஷபம், கும்பம், துலாம் முதலியன இடம் பெற்றிருப்பதை அவர் சுட்டிக் காட்டினார். ''ஆனால், தேர்தலில் மேஷத்திற்கு 'ஆடுகளுக்கு' இடம் அளிக்கப்படவில்லையே?'' என்று கேட்டேன்.

''தேர்தல் சின்ன ரூபத்தில் மேஷங்கள் வெளிப்படாமல் இருக்கலாம். கட்சித் தலைமைக்கு ஆங்காங்கு தேர்தல்கள் நடைபெறப் போகின்றனவல்லவா? அப்போது கை உயர்த்தச் சொல்வதற்காக இவர்களை அழைத்துச் செல்லும்போது பார்க்கலாம் மேஷக் கூட்டங்களை!'' என்றார் நண்பர். இவ்வாறு கூறிப் பஞ்சாங்கத்துக்கும் தேர்தலுக்குமுள்ள சம்பந்தத்தை விளக்கினார்.

★

நண்பர் அவர்கள் எந்தப் பஞ்சாங்கத்தைக் குறிப்பிடுகிறார் என்பது எனக்குத் தெரியவில்லை. நாட்டிலே இப்போது முப்பதுக்கும் மேலாக அநேகவிதமான பஞ்சாங்கங்கள் பழக்கத்தில் இருந்து வருகின்றனவாம்! இவற்றிலுள்ள முரண்பாடுகளைப் போக்கிப் புதிய தேசிய பஞ்சாங்க முறை ஒன்றை வகுத்து அதை இரண்டு தினங்களுக்கு முன் அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் தேசியப் பஞ்சாங்கத்தைக் கண்டு பயப்பட வேண்டாமென்றும், பெரிய மாறுதல்கள் ஒன்றும் செய்துவிடவில்லை என்றும் இந்திய சர்க்கார் சமாதானம் கூறியிருக்கிறார்கள். '''இப்போதுள்ள பஞ்சாங்க முறைகளில் தொடர்ந்து ஏற்பட்டு வந்த கணிதப் பிழை காரணமாக மாதப் பிறப்புக்கள் எல்லாம் இரண்டு மூன்று நாட்கள் வரை தள்ளி ஆரம்பமாகின்றன ! பண்டிகை தினங்களும் இருபத்துநான்கு நாட்கள் தள்ளிப் போகின்றன. இந்தத் தவறுகளைத் திருத்த வேண்டாமா?' என்று கேட்கிறார்கள். இதைப் பற்றி உம்முடைய அபிப்பிராயம் என்ன? தேசிய பஞ்சாங்கத்தை அநுசரித்துச் சரியான நாளில் பண்டிகைகளைக் கொண்டாடப் போகிறீரா ? அல்லது ஒவ்வொரு பண்டிகையையும் மூன்று நான்கு வாரங்கள் சென்றவுடன் பழைய பஞ்சாங்க முறையில் கொண்டாடப் போகிறீரா?'' என்று கேட்டேன்.

''நான் இப்போது ஒன்றும் சொல்லவே மாட்டேன். சம்பளம் வாங்கும் சமயத்தில் எந்தப் பஞ்சாங்கத்தின் அடிப்படையில் பண்டிகைகள் வருகின்றனவோ அந்தப் பஞ்சாங்கத்தை அப்போது பின்பற்றுவேன் !'' என்றார் அந்த எமகாதகப் பேர்வழி !

★

''பஞ்சாங்கம் பார்த்துப் பயன் என்ன? அவரவர் தலைவிதிப்படிதான் எல்லாம் நடக்கும். அதை ஒருவராலும் தடுக்க முடியாது!'' என்று சொல்வோரும் உண்டு. ஆனால், தலைவிதியைப் பற்றி எதுவும் நிச்சயமாகக் கூற முடியாது. உதாரணத்துக்கு, இதோ தமது சென்னை ராஜ்ய 'ரெவின்யூ' மந்திரி ஸ்ரீ மாணிக்கவேலு நாயகர் தமது தலைவிதியை நொந்துகொண்டு சமீபத்தில் ஒரு தேர்தல் கூட்டத்தில் பேசியிருப்பதைப் பார்த்தால் விதியின் விசேஷங்கள் வெளிப்படும்.

''நான் காங்கிரஸில் சேர்ந்தது என் தலைவிதியே தவிர வேறல்ல. வேறு பலமான எதிர்க்கட்சி இல்லாததினால்தான் அவ்வாறு நான் காங்கிரஸை ஆதரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது!'' என்று கூறினாராம். இதைத்தான் தலைவிதியின் விசேஷம் என்று குறிப்பிட்டேன். தலைவிதி எப்படியெல்லாம் அரசியலிலும் தலையிடுகிறது பாருங்கள்.

வட்ட மேஜை

தர்மம் வெல்லும்!

தமிழ் நாட்டின் துரதிருஷ்டத்தை எண்ணி மிகவும் மனம் நொந்துபோன நிலையில் இக் கடிதத்தைத் தங்களுக்கு எழுதுகிறேன்.

காரைக்குடித் தொகுதியில், தர்மத்தின் பெயரால், சத்தியத்தின் பெயரால் தேர்தலுக்கு நின்று மக்களுடைய புறக்கண்களுக்குத் தோல்வியடைந்து போனதாகக் கருதப்படும் பழம்பெரும் தேசபக்தர், தியாகி, உத்தம மனிதர் திரு சா. கணேசன் உண்மையாகத் தோல்வி யடையவில்லை என்பதை மற்ற வாசகர்களோடு பங்குகொள்ள விரும்புகிறேன்.

தேச முன்னேற்றத்தில் நம்பிக்கை கொண்டுள்ள ஒவ்வொரு தமிழனும் திருசா. கணேசன் தோல்வியடைந்ததாகக் கருதமாட்டான்.

'தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்' என்று சொன்னாரே பாரதியார் அது பொய்த்துப் போய்விட வில்லை. மீண்டும் ஒருநாள் தர்மம் ஜெயிக்கும்; சத்தியம் வெற்றிபெறும்.

நமது மதிப்புக்குரிய ராஜாஜி சொன்னார், 'தேர்தல் ஜனநாயக முறையில் நடைபெற வேண்டும்' என்று. அப்போது நிச்சயம் தர்மம் வெல்லும். அதுவரை காத்திருப்போம்.

பெரம்பூர்
6-3-57 ஜடாதரன்

திரை போட முடியுமா?

மனம் செறிந்த துயரத்துடன் இதை எழுதுகிறேன். தேர்தலில் காங்கிரஸ் நல்ல வெற்றி பெற்று விட்டது. ஆனால் உண்மைக் காங்கிரஸ் அனுதாபிகள் உள்ளம் புழுங்கி வேதனையுறுவதை எவ்வளவு நாள் திரைபோட்டு மறைத்துவைக்க முடியும்! நமது நிதியமைச்சர் திரு சுப்ரமணியம், காமராஜருக்கும், திராவிடக் கழகத்தினருக்கும் ஏதும் சம்பந்தம் இருப்பதாக ருசுவானால் தம் பதவியை ராஜிநாமா செய்துவிடுவதாகச் சொல்கிறார். அவரைவிட விஷயம் தெரிந்தவர்கள் யாரும் இருக்க முடியாது. அவருடைய தர்மசங்கடத்தை யாவரும் புரிந்து கொள்ள முடியும். காங்கிரஸை ஆதரித்துப் பிரசாரம் செய்த திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கர் திரு சுப்ரமண்யத்தை ஆதரிக்காததோடு, எதிர்த்துப் பிரசாரம் செய்ததைச் சாதாரண மக்களும் அறிவர். பிரஜா சோஷலிஸ்டும், முஸ்லிம் லீகும் தேர்தலுக்காக நட்பு பூண்டதைக் கண்டனம் செய்யும் ஜவாஹர்லால் நேரு அவர்கள் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் ஸ்தாபனம் வகுப்புவாத ஸ்தாபனமாகி வருவதை எப்போது தெரிந்து கொள்வாரோ?

பாரதப் பண்பாட்டுக்கே இழிவுதரும் முறையில் செயலாற்றிவரும் வகுப்புவாதக்கும்பலின் ஆதரவு பெற்றுக் காங்கிரஸ் வெற்றி பெற்றதை எண்ணியபோது, எண்ணற்ற நல்லோர் இதயங்கள் கூசுகின்றன. இன்று திராவிடக் கழகத்தின் பெயரால் காங்கிரஸுக்கு 'விழுந்திருக்கும் ஒவ்வொரு வோட்டும், காங்கிரஸுக்கு வைக்கப்பட்ட வேட்டு என்பதில் சந்தேகமில்லை. இதை யெல்லாம் ஆயிரம் மைலுக்கப்பால் இருந்து கொண்டு, நிமிஷமும் ஓய்வின்றிப் பல வேலைகளுக்கிடையே, காங்கிரஸ் ஸ்தாபனத்தை வகுப்புவாத வெறியினின்றும் கணமும் அயராது காக்க வேண்டும் என்று செயலாற்றும் நேருஜிக்குத் தெரிய வேண்டியது அவசிய மில்லையா?

வெற்றிபெற்ற காங்கிரஸ் அபேட்சகர்களுடன் ஈ.வெ. ரா.வின் உருவப் படத்தையும் வைத்து ஊர்வலம் விடும்போது தலை குனிகின்றனர்; மக்கள் அக்காட்சியைக் கண்டு. காங்கிரஸ் வெற்றிபெற்றது என்று சொல்லிக் கொள்ளவே வெட்கப்படுகின்றனர். சத்தியத்துக்கும். நேர்மைக்கும் உறைவிடமான திரு சா. கணேசன் அவர்கள் சிறு வோட்டுக்களின் வித்தியாசத்திலேதான் ஜெயிக்க முடியாமல் போயிற்று. ஆனால், நியாயத்தின் பெயரால் நின்ற அந்த உத்தமருக்கு, எந்தவிதமான ஆசை வார்த்தைகளுக்கும் அசைந்து கொடுக்காமல் உறுதியுடன் அவருக்கே வோட்டுப் போட்ட இருபத்திரண்டாயிரத்து மூந்நூற்றறுபத்தைந்து பேர்களும், தருமம் அழிந்து போகவில்லை என்பதை நிரூபித்து விட்டனர். அதோடு, சா. கணேசனைப் போன்றவர்களின் உறுநிலையையும் பற்றி நினைக்கும்போது மனம் பூரிப்படைகிறது. எதனால்? அதுதான் நல்லுணர்ச்சி. அந்த நல்லுணர்ச்சி அழியாமல் காக்க இறைவனை வேண்டுவோமாக!

திருச்சி
10-3-57 எஸ். ஸீதா

சர்க்கார் கடைப்பிடிக்குமா?

ராஜாஜி அவர்கள் சென்னை லஷ்மிபுரம் கூட்டத்தில் பேசிய சொற்பொழிவானது இந்நாட்டுத் தேர்தல் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய முக்கியமான ஒரு விதி. அதாவது தேர்தலுக்கு முன் மந்திரி சபை ராஜிநாமா செய்துவிட வேண்டும் என்று கூறினாரல்லவா? அதுதான் நியாயம். அப்படி ராஜிநாமா செய்தால்தான் தேர்தல் நேர்மையான முறையில் நடைபெற முடியும். ஆளும் கட்சி தன்னுடைய அதிகாரத்தின் மூலம் சில சலுகைகளை இந்தத் தேர்தலில் பெற்றதை யாவரும் அறிவர். அதனால் மக்களிடையே தேர்தல் சரியான முறையில் நடைபெறவில்லை என்ற தப்பு அபிப்பிராயம் எங்கும் நிலவி வருகிறது. இந்த எண்ணத்தை மாற்ற ஒரே வழி, ராஜாஜி கூறிய யோசனையே.

கீழக்கண்டார்கோட்டை வி. சுவாமிநாதன்
11—3—57 பஞ்சாயத்துத் தலைவர்

தேர்தல் குழப்பம்

ஊரிலுள்ள அத்தனை கடிகாரமும் நின்று விட்டாலும் பாதகமில்லை. சூரியன் நின்று விட்டால் உலகத்துக்கு வாழ்வுண்டா? காங்கிரஸ் ஸ்தாபனம் கெட்டுப் போனால் பொது வாழ்வுக்கு ஆதாரம் எங்கே?

'கோ' வென்று ஒரு குரல் அழலா மென்று தோன்றுகிறது. தசரதன் இறந்ததைக் கேட்டு ராமன் அழுதானும்:

நந்தா விளக்கனைய நாயகனே நானிலத்தோர்
தந்தாய் தனியறத்தின் தாயே தயாநிதியே

எந்தாய் இகல் வேந்தர் ஏறே இறந்தனையே
அந்தோ இனி வாய்மைக்குயாருளரே மற்று.

இந்தப் பாடலைத் திரும்பித் திரும்பிப் படித்துப் புலம்பலாம். காங்கிரஸிலேயே கயமை புகுந்து விட்டால் பொது வாழ்வுக்கு எங்கே ஆதாரம் காண முடியும்? காந்திக்கும் காந்தியத்துக்கும் துரோகம் செய்த பின் நாம் என்ன வாழ்வு வாழ முடியும்?

பஞ்ச பாண்டவர்கள் சூதாட்டத்தில் தோற்று, பாஞ்சாலியும் பணயமான பின் அந்தக் கொடுமையைப் பாரதியாரால் தாங்க முடியவில்லை. வேதனைக் கோபம் வெள்ளமாகப் பொங்கி அந்த அநீதியை வர்ணிக்கிறார்.

"தருமம் அழிவெய்தச் சத்தியமும் பொய்யாக
பெருமைத் தவங்கள் பெயர்கெட்டு மண்ணாக
வானத்துத் தேவர் வயிற்றிலே தீப்பாய
மோன முனிவர் முறைகெட்டுத் தாமயங்க
வேதம் பொருளின்றி வெற்றுரையே
யாகிவிட
நாதம் குலைந்து நடுவையின்றிப் பாழாக
கந்தருவ ரெல்லாங் களையிழக்கச்
சித்தர்முதல்
அந்தரத்து வாழ்வோ ரனைவரும்பித்துறவே
நான்முகனார் நாவடைக்க, நாமகட்குப்
புத்திகெட
வான்முகிலைப் போன்றதொரு வண்ணத்
திருமாலும்
அறிதுயில் போய் மற்றங்கே ஆழ்ந்த
துயிலெய்திவிட
செறிதரு நற்சீரழகு செல்வ மெலாந்
தானாகுஞ்
சீதேவி தன் வதனம் செம்மை போய்க்
காரடைய
மாதேவன் யோகம் மதிமயக்க மாகிவிட....
சூரியனாந் தெய்வத்தின் முகத்தே இருள்
படர—

இன்று தேசத்தில் நிலவும் தேர்தல் குழப்பம் மேலே பாரதி வர்ணிக்கும் அதர்மக் குழப்பத்துக்கு இம்மியளவேனும் குறைந்ததா?

பேரம்பூர்
9—3—57

கி. சீனிவாசன்

சரியான திட்டம்!

'சத்தியமே வெல்லும்' என்ற தலையங்கமும், 'தென்னாடு முன்னேற வேண்டும்' என்று துணைத் தலையங்கத்தில் தாங்கள் தி. மு. க. இளைஞர்களுக்குக் கூறியுள்ள புத்திமதிகளும் போற்றத் தக்கவை.

தேர்தல் முடிவுகளில் காங்கிரஸ் கட்சிக்கே பெரும்பான்மை வெற்றி கிடைத்திருப்பதை அறிந்து மகிழ்கிறோம். காரணம் கட்சியின் ஆதிகாலத் தியாகிகளின் பண்பாட்டால் இன்று வெற்றி கிடைத்திருக்கின்றதே தவிர தனிப்பட்டவர்களின் தகுதியின் தரத்தாலோ, மக்கள் அவர்கள்மீது நம்பிக்கை வைத்திருப்பதின் பிரதிபலிப்பினாலோ அல்ல என்பதை நாடு அறியும். அதோடு பெரும்பாலான காங்கிரஸ் வெற்றிகள் வைட்டமின் 'ப'வின் சக்தியினால் ஏற்பட்டவையேதான்.

தேர்தலில் வெற்றிபெற்ற திரு சி. என். அண்ணாத்துரை அவர்களும், அவரைப் பின்பற்றுகின்ற இளைஞர் பெருமக்கள், அனுதாபிகள் அனைவரும் தென்னாடு முன்னேறத் தாங்கள் கூறியுள்ள திட்டத்தை ஆதரித்துச் செயல்படுவார்கள் என்பதில் ஐயமில்லை. என்றைக்குமே பிற கட்சிகளின் வாதத்தை உணர்ந்த பின்பு, அழகாகப் பதில் கொடுக்க முனையும் திரு சி. என். ஏ. இந்தப் "பார்ப்பனீயம்" என்கிற அவர்கள் அகராதிச் சொல்லுக்குத் தாங்கள் தந்துள்ள இன்றையப் பதில் விளக்க உரையையும் சிந்தித்து, முடிவேற்று மக்களிடையேயும், இனி சட்டசபையிலேயும், சாதித் துவேஷப் பிரசாரத்தை அகற்ற முற்படுவாராக! அவருடைய ஈடு இணையற்ற சிந்தனை மேதைத் திறனைத் தமிழகம் உபயோகமான முறையில் பயன்படுத்திக் கொள்ள விரும்பி, அவரைத் தேர்ந்தெடுத்திருக்கின்ற இவ்வேளையில் தங்களது விளக்கம் காலத்தில் சிறந்து பயன்படுவதாக அமைந்து விட்டது.

"என்பொருளவாகச் செலச்சொல்லித் தான் பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு." — குறள்.

புதுதில்லி-5
8—3—57

ஏ. ஆர். ராஜாமணி

காலம் மாறும்!

மகாபாரதத்தில் குருக்ஷேத்திர போர்க்களத்தில் அபிமன்யுவின் வதத்தையும், அவன் வீழ்த்தப்பட்ட விதத்தையும் கண்டு, இரு தரப்புப் படையினரிலுமிருந்த நல்லோர் அனைவரும் கண்ணீர் வடித்தனர். இப்பொழுதும் காரைக்குடித் தேர்தல் போர்க்களத்தில் காங்கிரஸ் அபிமன்யுவின் வீழ்ச்சியையும்

அதற்குப் பின்னால் புகைப்புகைக இருந்த காரண காரியங்களையும் கண்டு தமிழ் நாட்டில் மனம் வருந்தார் எவருமிலர்.

சீலமும், ஒழுக்கமும், நாணயமும் மிகுந்த திரு சா. கணேசன் அவர்களுக்கு அவரது எதிரிகளின் பலே வேலைகள் ஒருபுறமிருக்க, அவர் இதுவரையிலும் போற்றி வளர்த்து வந்திருந்த 'இரட்டைக் காளை மாடுகள்' வேறு எதிரிகள் கையில் சிக்கி அவர் மேலேயே பாய விடப்பட்டன. இந்த நவீன அரிச்சந்திரர்கள், கிராமவாசிகளிடம் 'உங்கள் கணேசனுக்கே வோட்டுப் போடுங்கள். அவர் நல்ல காங்கிரஸ்காரர். காங்கிரஸ் சின்னம் காளை மாடுதான். அந்தப் பெட்டியிலேயே வோட்டுப் போடுங்கள்' என்று நாக்கூசாமல் பிரசாரம் செய்து, வெற்றிகண்டிருக்கிறார்கள்.

பொய்யை அடிப்படையாகக் கொண்டு அடைந்த வெற்றி நீண்ட நாட்கள் நிலைத்திருந்ததில்லை. இன்று கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் மாறும்.

மதுரை
9—3—57 கே. ஆர். டி. ராவ்

சாட்டையடி !

'சத்தியமே வெல்லும்' என்று தாங்கள் எழுதியுள்ள தலையங்கம் பொதுவாக அறம் தவறி மறத்துக்கு மதிப்பளித்துவிட்ட மக்களைச் சாட்டை கொண்டு அடித்துவிட்டது. இப்பொழுது தமிழகத்தில் நடந்த தேர்தல் மூலம் இம்மியளவாவது ஜனநாயகம் தென்படவில்லை. அதற்குப் பதில் பணநாயகம்தான் தலைவிரித்தாடுகிறது. இதற்குத் தக்கதோர் சான்று காரைக்குடியில் சமீபத்தில் வெளியான தேர்தல் முடிவு. பணத்தைப் பணமென்றே நினைக்காமல் மண்ணைப்போல் வீசியெறிந்து வாக்குகளைப் பெறுகின்ற மாமந்திரம் தான் வெற்றி பெற்றது! பணத்தைக் கொலைகாரன் கொடுத்தாலும் வாங்கிக் கொண்டு அவனுக்கு வாக்கு அளிக்கும் மகா இழிவான நிலை தமிழகத்துக்கு ஏற்பட்டது. தமிழகத்தில் ஏதோ ஒரு தீய சக்தி புகுந்து விட்டதற்கு அறிகுறியே என்று சொல்லலாம்.

எங்கெங்கு தோல்வியுற்று மறம் வெற்றியடைந்ததோ அங்கெல்லாம் இறையின் பார்வை விழாமல் போகாது. அறம் அழிந்த மதுரையைக் கண்ணகி தீக்கிரையாக்கினாள். அறத்தின் காவலன் அண்ணலார் காந்தி இருக்கையில் காங்கிரஸுக்குப் பிரசாரமே தேவையில்லாமல் இருந்தது. ஆனால் அறம் அழிந்தது. காந்தியார் மறைந்தார். இன்றையக் காங்கிரஸ்..வெற்றி பெற்றுத்தான் வருகிறது. பெரும்பாலோர் மகிழ்ச்சியடைகின்றனர். ஆனால் அவர்கள் வெற்றி சுலபமாகக் கிடைத்த வெற்றியே அல்ல. ஒவ்வொரு வோட்டும் ஒவ்வொரு தோப்புக்கரணம் போட்ட பின்பே கிடைத்தது.

சாட்டையடி போன்ற உங்கள் தலையங்கம் மரக்கட்டையான காங்கிரஸ்காரர்களைத் திருப்பியாவது விடும் என்று நம்புகிறேன்.

நரிக்கல்பட்டி
9—3—57 வெ. ரா. பாலசுப்ரமணியன்

பேனாமுனைக்கு வணக்கம்

'கல்கி' இதழில் 'சத்தியமே வெல்லும்' என்ற தலைப்பின் கீழ் எழுதியுள்ள தலையங்கத்தைப் படிக்கும் பொழுது என்னையுமறியாமல் நமது பழங்காலத் தமிழ்ப் புலவர்களில் பெரியார் நக்கீரர் அவர்களின் ஞாபகம் வந்தது. காரணம் சிவபெருமான் நெற்றிக் கண்ணைக் காட்டியும் அதைக் கண்டு அஞ்சாது குற்றங் குற்றமே என்று சொன்ன அந்தப் பெரியாரைப்போல் இன்று நம் தமிழ் நாட்டில், அதிலும் குறிப்பாக, சென்னையில் தங்களின் பேனாமுனை யாருக்கும் அஞ்சாது காங்கிரசின் குற்றங் குறைகளை எடுத்துக் கூறிக் குற்றம் செய்தவர்களையும் செய்கிறவர்களையும் திருத்திக் கொள்ளப் புத்தி கூறுகிறது.


பழங்கால ஆங்கிலேய சரித்திரத்திலே யாருக்கும் அஞ்சாத வீரனாகிய நெப்போலியன் சொன்னான். 'நான் யாருக்கும் அஞ்ச மாட்டேன், ஆனால் நான் அஞ்சுவது ஒன்றே ஒன்றைக் கண்டுதான். அது என்ன என்று கேட்டால் அது பத்திரிகையாளர்களின் பேனாமுனை' யென்று சொன்னான். அதையும் தங்களின் பேனாமுனை நிரூபித்திருக்கிறது. ஆகவே பெருமிதமடைகிறேன்.

சென்னை-13
12—3—57 டி. ஆர். சேஷாசலம்


சங்கீத மும்மூர்த்திகள் ஜன்ம தின விழா

அணிகலன்களுக்கு அழகு செய்பவை மாணிக்கம், வைரம், முத்து ஆகிய மூன்றுமே யாகும். அதுபோலவே இசையுலகத்தில் இன்றியமையாதவர்களாக விளங்கி, இணையற்ற சாகித்யங்களை இயற்றிப் பெரும்புகழ் பெற்றவர்கள் ஸ்ரீ தியாகப் பிரம்மம், ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர், ஸ்ரீ சியாமா சாஸ்திரி ஆகிய மூவரும்.

மேற்படி சங்கீத மும்மணிகள் அவதரித்த திவ்விய ஸ்தலமாகிய திருவாரூரில் அவ்விசைச் செல்வர்களுக்கு ஜன்ம தின விழா சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடாகியிருக்கிறது. திருவாரூர் சங்கீத மும்மூர்த்தி ஞாபகார்த்த சபையின் ஆதரவில் திருவாரூர், மேல வடம்போக்கித் தெரு, ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் அவதரித்த மனையில் அமைக்கப்பட்டுள்ள விசேஷப் பந்தலில் 4-4-57; 5-4-57 இரண்டு நாட்களும் முத்துஸ்வாமி தீக்ஷிதர் திருநாள் கொண்டாடப்படும். பிறகு 1-5-57 அன்று தொடங்கி 6-5-57 தினத்தில் ஸ்ரீ தியாகப்பிரம்மம், ஸ்ரீ சியாமா சாஸ்திரி இவர்களின் தினக் கொண்டாட்டம் பூர்த்தியாகும். விழா தினத்தில் உஞ்சவிர்த்தி, பஜனை முதலியவைகளும் பிரபல சங்கீத வித்வான்களின் கச்சேரிகளும் நடைபெறும். இசையன்பர்கள் பெருவாரியாகக் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பிப்பார்கள் என்று நம்புகிறோம்.



அட! ஜெயித்தவனைக் காணோமே!



அவன் **பாரியின்** மிட்டாய் வாங்கப்

போயிருக்கிறான்!

PRS 4816



குழந்தையும் தெய்வமும்

ரா.ஸ்ரீ

சந்திரமௌளீசுவரர் சந்நிதி. எதிரே பல விதமான பழவகைகள் தட்டில் நிவேதனத்துக்காக வைக்கப்பட்டிருந்தன.

ஒரு குழந்தை. வயது மூன்றிருக்கும். கையில் ஒரு சீப்பு வாழைப்பழத்தை எடுத்துக்கொண்டு 'குடுகுடு'வென்று தட்டை நோக்கி வேகமாக ஓடியது.

''இந்தா, இந்தா! அங்கே போகாதே! இங்கே வா!'' என்று பல குரல்கள். குழந்தை அதையெல்லாம் காதில் வாங்கிக் கொண்டால்தானே? ஒரே ஓட்டமாக ஓடித் தன் கையிலிருந்த வாழைப் பழச் சீப்பைத் தட்டில் வைத்தது. அந்தத் தட்டில் இருந்த சாத்துக்குடிப் பழம் ஒன்றைத் தன்னுடைய பிஞ்சுக் கையில் எடுத்துக் கொண்டது.

அதைப் பார்த்த எல்லோரும், ''பழத்தை எடுக்காதே! அங்கேயே வைத்து விடு, வைத்து விடு!'' என்று கூவினார்கள்.

சத்தம் கேட்டு, மறைவில் உட்கார்ந்திருந்த சங்கராச்சாரிய சுவாமிகள் எழுந்து வெளியே வந்தார்கள். கூட்டத்தை ஒரு முறை பார்த்தார்கள். குறுகுறுவென்ற அவரது விழிகள் விஷயத்தைப் புரிந்து கொண்டு முறுவல் பூத்தன. ஆகா! அவற்றில்தான் எத்தகைய அநுக்கிரக பாவம் தாண்டவமாடியது! ''எடுத்துக் கொள்ளட்டுமே!'' என்றார்கள்.

''இல்லே. பகவானுக்கு நிவேதனம் ஆவதற்கு முன்னால்....'' என்று இழுத்தார் அருகில் இருந்த ஒருவர்.

''ஆண்டவனே அவன் உருவத்தில் வந்து எடுத்துக் கொண்டிருக்கலாம் அல்லவா? நாம் தடுக்கலாமா? குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே என்று தெரியாமலா பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்?'' என்று கூறியவாறே அந்தக் குழந்தையின் கையில் இன்னொரு பழத்தை எடுத்துக் கொடுத்தார்கள். அந்த நேரமும் திகைத்து நின்ற குழந்தை முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடச் சிரித்தது.

* * *

திருவாதிரைத் திருநாள். ஆசாரிய சுவாமிகள் அப்பொழுது ஒரு கிராமத்துக்கு விஜயம் செய்திருந்தார்கள்.

கரும்பு அறுவடைக்காலம் ஆதலால் குழந்தைகள் கரும்பைத் துண்டம் போட்டு ருசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தன.

அந்தக் கிராமத்திலேயே ஒரு குழந்தை; நோஞ்சல் குழந்தை. கணை குலைக்கட்டி போன்ற நோய்களினால் பீடிக்கப்பட்டு அப்பொழுதுதான் தேறிய குழந்தை.

மற்றக் குழந்தைகள் கரும்பு தின்பதைக் கண்டதும் அதற்கும் கரும்பு தின்னவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. தாய் தந்தையரோ அதன் தேக நலத்தைக் கருதிக் கரும்பு கொடுக்க முடியாது என்று மறுத்தனர். அவர்கள் மறுக்க மறுக்க அதன் பிடிவாதம் அதிகமாயிற்று. அதன் பிடிவாதம் பெற்றோர்களுக்குக் கோபத்தை வருவித்தது.

ஆசாரிய சுவாமிகள் அதன் அழுகையின் காரணத்தைக் கேட்டு அறிந்தார்கள். உடனே குழந்தையைப் பார்த்து, ''இங்கே வா, குழந்தை! உனக்கு என்னவேண்டும்? கரும்பு தானே?'' என்று பரிவுடன் கேட்டார்கள்.

மந்திர வசப்பட்டதுபோல் குழந்தை அவரிடம் போய், ''ஆமாம்!'' என்றது.


''இதற்காகவா அழுகிறாய்? இப்படி வந்து என் அருகில் உட்காரு. நான் தருகிறேன்!'' என்று கூறிப் பெரிய கரும்புத் துண்டம் ஒன்றைக் கொண்டுவரச் செய்தார்கள்.

கரும்புத்துண்டம் கையில் வந்ததும் குழந்தைக்குச் சந்தோஷம் தாங்கவில்லை.

அது மகிழ்ச்சியில் மூழ்கியிருக்கும் அத் தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ''நீ நம் மடத்து யானையைப் பார்த்திருக்கிறாயோ?'' என்று சுவாமிகள் கேட்டார்கள்.

''ஓ! பார்த்திருக்கிறேனே!''

''அந்த யானைக்குக் கரும்புன்னா ரொம்பப் பிடிக்கும். நீ இந்தக் கரும்புத் துண்டத்தை அதற்குக் கொடுப்பாயோ?'' என்று கேட்டார்கள்.



''ஆமாம், அந்த யானை என்னை ஒன்றும் செய்யாதே!''

''ஒன்றும் செய்யாது. நான் கிட்ட இருக்கிறேன். பயப்படாதே!'' என்று கூறி அதற்குத் தைரியம் அளித்தார்கள்.

அந்தக் கரும்பைப் பத்திரமாக வைத்திருந்து யானைக்குக்

கொடுத்து மகிழ்ந்ததே ஒழிய அந்தக் குழந்தை, தான் அதைத் தின்ன விரும்பவில்லை.

ஆகா! ஆசாரிய சுவாமிகளின் குழந்தை உள்ளத்தைப் புரிந்து கொள்ளும் ஆற்றலை என்னவென்பது? குழந்தையை அதன்போக்கிலேயே விட்டுத் திருப்பிய பெருமையைத்தான் என்னவென்பது? குழந்தைக்குக் கரும்பைக் கொடுத்து, அது தின்னாமலே மகிழ்ச்சி யடையும்படி செய்து விட்ட மனப் பாங்கைத்தான் என்னவென்று கூறுவது?



கத் தெரியவில்லையென்றால், அது குழந்தையின் அறியாத் தனமா? நமது அறியாத்தனமா?'' என்று கூறியவாறே ஆசாரிய சுவாமிகள் ஸ்நானத்தை முடித்துக் கொண்டு கரையேறினார்கள். பிறகு மாற்றுடை தரித்துக் கொண்டு குழந்தையின் பக்கம் திரும்பினார்கள்.

''நம் சுவாமிகள்! சுவாமிகள்!!'' என்று கூறிக் குழந்தை முகத்தில் மகிழ்ச்சி பொங்கச் சிரித்தான்.

*

* *

ஒரு சமயம் ஆசாரிய சுவாமிகள் பாலாற்றிலே நீராடிக் கொண்டிருந்தார்கள். ஆசாரிய சுவாமிகளைத் தரிசித்துப் போகக் குழந்தையோடு வந்திருந்தார்கள் அந்தத் தம்பதிகள். ஆசாரிய சுவாமிகள் நீராடப் போயிருந்த பொழுது, எதேச்சையாக அவர்களும் ஆற்றுக்கு நீராடப் போனார்கள்.

ஆசாரிய சுவாமிகளது ஞாபக சக்திதான் உலகமறிந்த விஷயமாயிற்றே! குழந்தையைக் கண்டதும் அவர்கள் புரிந்து கொண்டு விட்டார்கள். நீராடியவாறே குழந்தையை அருகில் அழைத்து, ''உனக்கு என்னைத் தெரிகிறதோ?'' என்று கேட்டார்கள்.

ஒருமுறை அவர்களை ஏற இறங்கப் பார்த்து விட்டு, ''இல்லையே, தெரியவில்லையே!'' என்று பதில் அளித்தான் குழந்தை.

பக்கத்திலிருந்த அவன் தந்தை, ''ஏண்டா, தெரியவில்லை?'' என்று அதட்டாத தோஷமாகக் கேட்டார்.

''இதில் அவன் தவறு ஒன்றும் இல்லை. குழந்தையிடம் கேட்டு நமக்குப் பதில் வாங்

எல்லோருக்கும் ஒரே வியப்பு! சற்று முன், 'தெரியாது' என்று சொன்ன குழந்தை இப்பொழுது எப்படித் தெரியும் என்று சொன்னான்? ஒருவருக்கும் காரணம் விளங்கவில்லை. திகைத்துப் போய் வாய் பேசாமல் நின்றனர். அப்பொழுது சுவாமிகள், ''என்னை இந்த ரூபத்தில் தான் பார்த்திருக்கிறான். அந்த ரூபத்தில் பார்த்ததில்லை!'' என்று கூறிப் பொருள் பொதிந்த புன்னகை பூத்தார்கள்.

ஆம்; குழந்தை சுவாமிகள் ஸ்நானம் செய்யும் பொழுது பார்த்ததில்லை; சாதாரணமாகச் சம்பாஷித்துக் கொண்டிருக்கும் பொழுதுதான் பார்த்திருக்கிறான். அதனால் தான் அவனுக்கு அந்தத் தடுமாற்றம்.

அருவமான ஆண்டவனுக்கு உருவம் கொடுத்துப் பூஜிக்கும் முறையைக் குழந்தையின் மனப்பாங்கு எத்தனை அழகாகச் சித்திரித்துக் காட்டி விட்டது? 'குழந்தையாக இரு' என்ற உபநிஷத வாக்கியத்தைத் தம் வாழ்க்கையிலும் கடைப்பிடிக்கும் ஆசாரிய சுவாமிகள் குழந்தையோடு தாமும் குழந்தையாகி – தெய்வமாகி – அத்வைத சித்தாந்தத்தின் அருமை பெருமைகளை அநாயாசமாகப் போதிப்பதைக் காணும் பொழுது தெய்வ சந்நிதானத்தில் இருப்பது போன்ற பேரானந்தமே உண்டாகும்.



''சின்தோல்'' சோப் தயாரிப்பாளர்களான இந்துஸ்தான் லீவர் லிமிடெட் கம்பெனியார் ஒரு சின்தோல் பிரசார சுலோகன் போட்டி நடத்தினார்கள். அந்தப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்குப் புது 'ஸ்டாண்டர்ட்' காரும், பிலிப்ஸ் ரேடியோக்கள் நான்கும் பரிசுகளாக வழங்குவது என்று நிர்மானிக்கப்பட்டது. இந்தப் போட்டிக்கு வந்த 'சுலோகன்'களைப் பரிசீலிக்க ஒரு குழு அமைக்கப்பட்டது. ஸ்ரீமதி சரோஜினி வரதப்பன், இந்தியப் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் ஸ்ரீ. நரசிம்மன், ஜெயின் கல்லூரி பிரின்ஸிபல் ஸ்ரீ எஸ். நரசிம்மன். டி. ஆர். லைசென்ஸ் டைரக்டர் ஏ. எம். எம். அருணாசலம் அவர்கள். இந்துஸ்தான் லீவர் கம்பெனியைச் சேர்ந்த மானேஜர்கள் ஸ்ரீ. வி. பால். திரு எம். எம். மேனன் முதலியவர்கள் போட்டிக்கு வந்த சுலோகன்களைப் பரிசீலனை செய்வதை மேலே பார்க்கலாம். இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு இம்மாதத்தில் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

ஈழ நாட்டுப் பிரயாணம் (11)

மேல் நாட்டில் ஒரு பழமொழி உண்டு, "நேபிள்ஸைப் பார்த்து விட்டுச் செத்துப் போ" என்று. நமது தமிழ் நாட்டிலும் அப்படி ஒரு அருமையான இடம் இருக்கிறது என்று முற்றும் துறந்த முனிவர் ஒருவரே சொல்கிறார். "செத்துப் போவதற்கு முன்னால் குற்றாலத்தைப் பார்த்து விடு" என்கிறார் நமது பட்டினத்து அடிகள்.

" காலன் வருமுன்னே
கண்பஞ்சடை முன்னே
பாலுண் கடைவாய்
படுமுன்னே – மேல்விழுந்தே
உற்றார் அழுமுன்னே
ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே
கூறு!"



என்னும் பாடலில், ஒருவன் இறந்து போவதற்கு முன்னால் திருக் குற்றாலத்தைப் பார்த்து விடவேண்டியதன் அவசியத்தைப் பட்டினத்தார் குறிப்பாக உணர்த்துகிறார்.

" கொல்லை முல்லை
மெல்லரும்பீனும் குற்றாலம்"

" தேனருவித் திரையெழும்பி
வானின்வழி ஒழுகும்"

" கூதல்மாரி நுண்துளி தூங்கும் குற்றாலம்"

"ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்;
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்"

என்பது போன்ற அருமையான தமிழ்ப் பாடல்களைப் பெற்றது குற்றாலம். குற்றாலத்துக்குச் சென்று அருவி கொட்டும் அழகை ஒருதரம் பார்த்தவர்கள் மீண்டும் மீண்டும் அந்தக் காட்சியைப் பார்க்கத் துடித்துக் கொண்டிருப்பார்கள். அதில் நீராடி மகிழ்ந்தவர்களைப் பற்றியோ கூறவேண்டியதில்லை. தாங்கள் பிறவி எடுத்ததன் பயனை அடைந்து விட்டதாக மகிழ்வார்கள். குற்றாலத்து அருவி அவ்வளவு சுகமான அருவி. இங்கு வீசும் மலைச்சாரல், இது அமைந்திருக்கும் இடம், சூழ்நிலை எல்லாமே உடலுக்கும் உள்ளத்துக்கும் உவகை கொடுக்கும் சக்தி யுடையவை.

ஈழநாட்டில் நாம் இப்போது பார்க்கப் போகும் அருவி இவ்வாறெல்லாம் பாடல் பெற்ற அருவி அல்ல. அதில் யாரும் நீராடி மகிழ முடியாது. வானத்துக்கும் பூமிக்குமாக அருவி கொட்டும் அழகை வேண்டுமானால் பார்த்து மகிழலாம். பார்த்து வியந்து கொண்டே இருக்கலாம். தினம் தினம் பார்க்கலாம். ஒரு மணி இரண்டு மணி மூன்று மணி என்று நேரம் போவதில் நினைப்பின்றிப் பார்த்து மகிழலாம். அவ்வளவுதான்.

ரத்தின புரியிலிருந்து சதிர்காமம் செல்லும் வழியில் கொஸ்லாந்தைக்கும், வெள்ளவாயாவுக்கும் இடையில் இந்த அருவி விழுகிறது. இந்த அருவி விழும் இடத்துக்கருகில் தான் அப்புத்தளை என்ற ஊர் இருக்கிறது.

அருவி கொட்டும்



பூமிமட்டத்திலிருந்து சுமார் ஐயாயிரம் அடி உயரம் உள்ள இந்த அப்புத்தளை இரண்டு மலைகளுக்கு இடையில் அமைந்திருக்கும் கச்சிதமான சிறு நகரம். உலகத்திலுள்ள அழகுமிக்க இயற்கைச் சூழ்நிலைகளுக்கு மத்தியில் அமைந்துள்ள அழகான சிற்றூர் அப்புத்தளை என்றால் மிகையாகாது. இந்த ஊரில் இருந்து அடுக்கடுக்காக, ஒன்றன்பின் ஒன்ருக இருக்கும் மலைத் தொடரையும், பரந்து விரிந்து காணும் சமவெளிப் பிரதேசத்தையும் பார்க்கும்போது மனத்தில் ஏற்படும் ஆனந்த உணர்ச்சியை அங்கு நின்று பார்த்துத்தான் அநுபவிக்க வேண்டும். சில சமயங்களில் அங்கிருந்து பார்த்தால் சங்கிலித் தொடர்போல் வரிசையாகத் தோன்றும் ஐந்து மலைச்சிகரங்களைப் பார்க்கலாம். இந்த ஐந்து மலைகள் உள்ள புண்ணிய பூமிதான் அழகுத் தெய்வமான முருகன் எழுந்தருளி இருக்கும் கதிர்காமம். அப்புத்தளையிலிருந்து சுமார் ஐம்பது மைல்களுக்கு அப்பால் இருக்கும் கதிர்காமத்தைப் பார்க்கும்போது மனத்திலே ஒரு தெய்விக உணர்ச்சி ஏற்படுகிறது.

இந்த மலைக்கணவாயின் ஒரு பகுதியில் பிரசித்திபெற்ற அப்புத்தளை என்ற சிற்றூரும் மற்ருெரு பகுதியில் அழகுமிக்க தியாலுமா அருவியும் இருக்கின்றன.

ஈழநாடு ஒரு அபூர்வமான நாடு. இதில் இல்லாத அதிசயமே இல்லை என்று சொல்லி விடலாம். உலகில் எத்தனை எத்தனை இயற்கை விந்தைகள் உண்டோ அவ்வளவையும் கொண்ட அழகான நாடு ஈழநாடு. இந்த நாட்டில் எத்தனையோ அருவிகள் கொட்டுகின்றன. இந்த அருவிகளுக்கெல்லாம் முதன்மையான அருவிதான் இந்தத் தியாலுமா அருவி.

சுமார் இரண்டு மைல் தூரத்துக்கு அப்பால் இருக்கும் போதே தியாலுமா அருவியின் ஓசை காதில் விழுகிறது. 'ஓ!' என்ற பேரிரைச்சலுடன் விழும் இந்த ; அருவிச் சத்தம் கணத்துக்குக் கணம் அதிவேகத்துடனும் எத்தனை எத்தனையோ இனிய நாதத்துடனும் மாறி மாறி ஒலிக்கிறது. அருவியின் ஓசையை நெருங்க நெருங்க நமக்கு என்னவோ செய்கிறது. நெஞ்சு 'திக் திக்'கென்று அடித்துக் கொள்கிறது. ஈழநாட்டில் இருக்கும் மிகப் பெரிய தியாலுமா அருவியைப் பார்த்து ஆனந்திக்கப் போகிறோம் என்ற துடிதுடிப்பு அதிகமாகிறது.

அதோ தூரத்தில் பனித்திரைபோல் ஏதோ தெரிகிறது. இன்னும் சற்று நெருங்குகிறோம். ஆகாயமே பொத்துக் கொண்டது போல் நீல வானத்திலிருந்து நீர் கொட்டுகிறது. அதன் ஆரம்பம் எது என்றே தெரியவில்லை. அவ்வளவு உயரத்திலிருந்து அருவி விழுகிறது. சற்றுத் தூரம் வரையில்தான் வெள்ளியை உருக்கி ஊற்றுவதுபோல வெள்ளை வெளேரென்று தண்ணீர் தெரிகிறது. பிறகு ஒன்றும் தெரியவில்லை. கீழே பூமியிலிருந்து தண்ணீர், புகை போலப் பந்து பந்தாக எழும்பி அந்த அருவியின் அழகைத் தாவி அணைத்துக் கொள்ள முயலுவது போலிருக்கிறது. சுமார் அறுநூற்று மூப்பது அடி உயரத்திலிருந்து, வானத்திலிருந்தே விழுவது போலிருக்கும் இந்தத் தியாலுமா அருவியைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது நமக்குத் தலையைச் சுற்றுகிறது. நம்மை யறியாமலே நாம் சுழலுகிறோம். தியாலுமா அருவி அப்படியே சாய்ந்து வந்து நம் மீது விழுந்து விடுமோ என்ற பிரமை ஏற்படுகிறது. அடுத்த கணத்திலேயே இந்தப் பிரமை மாறுகிறது. நாமே பூமியிலிருந்து எழும்பி இந்த அருவிக்கு மத்தியிலேயே போய்ச் சிக்கிக் கொண்டு மூச்சுத் திணறுவது போன்ற மயக்கம் ஏற்படுகிறது. மாறி மாறித் தோன்றும் இந்த இனிய மயக்கத்தை அநுபவித்துக் கொண்டு மணிக்கணக்கில் நாள் கணக்கில், ஏன், வாழ்நாள் முழுவதுமே இருக்கலாம்.



அலுப்பு சலிப்பே ஏற்படாது. இந்த அருமை யான அருவி கொட்டும் அழகுக் காட்சியை விட்டுச் செல்லவே மனமில்லை. ஆனாலும் உடன் வந்த நண்பர்கள் விடுகிறார்களா? "நாழிகையாகி விட்டது. கதிர்காமத்தி லிருந்து திரும்பி வரும்போது மீண்டும் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொள்ளலாம், வாருங்கள்" என்று வற்புறுத்தினார்கள்.

உடனே காரில் ஏறிக் கொண்டால் இந்தக் காட்சி மறைந்து விடுமோ என்று நடந்தே சென்றோம். நின்று நின்று இந்த அருவி கொட்டும் அழகைப் பார்த்து அனுபவித்துக் கொண்டே சென்றோம். இப்படி எவ்வளவு தூரம் சென்றோமோ தெரியாது. அருவி கொஞ்சம் கொஞ்சமாக அந்த மலைத்தொடரில் மறைந்து, அடர்ந்து நிற்கும் வனத்துக்குள் புகுந்து விட்டது. எதையோ பறிகொடுத்து விட்டதுபோல ஒரு ஏக்க உணர்ச்சி ஏற்படுகிறது. அப்படி ஒரேயடியாக ஏங்கிப்போனால் அப்புறம் வாழ்க்கையில் சுவை ஏது? மேலே பிரயாணத்தைத் தொடங்கினோம். காரில் ஏறிக் கொண்டோம். இதுவரையில் கலகல வென்று பேசிக்கொண்டும் சிரித்துக் கொண்டும் இருந்த நண்பர் கூட்டம் இப்பொழுது ஒன்றுமே பேசாமல் மௌனமாக இருந்தது விந்தையிலும் விந்தைதான்!

இந்த மௌனத்தைக் கலைத்துக்கொண்டு ஒரு நண்பர் பேச ஆரம்பித்தார். "அதோ! பார்த்தீர்களா, யானை!" என்றார்.

ஆமாம் யானைதான்! யானையேதான்! ஒன்று இரண்டு மூன்று என்று பல யானைகள் ஒன்றன்பின் ஒன்றாகச் சென்று கொண்டிருந்தன. துதிக்கைகளில் மிகப் பெரிய மரத்தைத் தூக்கிக் கொண்டு சென்றன.

"இவைகள் எங்கே செல்கின்றன?"

"சற்றுத் தூரத்தில் நிற்கும் லாரியை நோக்கிச் செல்கின்றன."

"அங்கு போய் என்ன செய்யும்?"

"தங்கள் துதிக்கைகளில் தூக்கிக் கொண்டு செல்லும் மரங்களை லாரியில் அடுக்கும்."

"அப்படியா?"

"ஆமாம்?"

ஈழநாட்டுச் சாலைகளில் யானைகள் தென்படுவது சர்வ சாதாரணம். அவைகள் மனிதர்களைப் போல எல்லாவிதமான வேலைகளையும் செய்கின்றன. அவைகளுக்குப் பக்கத்தில் மனிதன் செல்லும் போது அதன் காலில் பாதி உயரத்துக்குக் கூட எட்டாமல் நிற்கிறான். இந்தச் சின்னஞ்சிறு மனிதன் சொன்னதை எல்லாம் ஒழுங்காகக் கேட்கிறது மிகப் பெரிய அந்த யானைக் கூட்டம்.

யானைக் கூட்டத்தையும் அதன் நடுவில் துணிபோல நிற்கும் மனிதனையும் பார்க்கும் போது எனக்கு மனிதன் முதன் முதலில் யானையைப் பார்த்தபோது என்ன நினைத்திருப்பான் என்று எண்ணத் தோன்றியது.

தொடக்கத்திலிருந்தே மனிதன் இயற்கையின் கட்டுப்பாடுகளை எதிர்த்துப் பல வழிகளில் தன் கொடியை உயர்த்திப் பிடித்திருக்கிறான். எண்சாண் உயரமுள்ள மனிதன் இன்றளவும் இந்தப் பிடிவாதத்திலிருந்து தளராமல் உழைத்து வருகிறான். அவனுடைய அந்த இடைவிடாத உழைப்பு காரணமாகத்தான் மண்ணையும், விண்ணையும், கடலையும் தன்னுடைய ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர முடிந்தது.

காட்டில் வாழ்ந்த மனிதனின் கண்ணில்முதலில் இந்த யானை பட்டிருக்கும். பயங்கர உருவத்துடன் இருந்த இந்தக் காட்டு யானை, உபத்திரவமே உருவெடுத்த பிரும்மாண்டமான ஜந்து, இடி குமுறும் புயல் மேகம் போன்றதாக அவனைத் துன்புறுத்தியிருக்கும். மலை போன்ற அதன் கரிய பெரிய உருவத்தைப் பார்த்து மனிதன் பயந்திருப்பானா? மாட்டான். அலட்சியமாகச் சிரித்திருப்பான். கட்டுக்கடங்காத இந்த மாமிச பருவதம் தன் துதிக்கையைத் தூக்கிக் கொண்டு பிளிறுவதைப் பார்த்து எள்ளி நகையாடி இருப்பான். "உன்னை அடக்கி உன்னிடமே வேலை வாங்குகிறேன் பார்!" என்று சபதம் கூறியிருப்பான். தன் சபதத்தை நிறைவேற்றுவதற்குள், யானையை அடக்குவதற்குள் மனிதன் எத்தனை கஷ்டப்பட்டிருப்பான்! நீண்ட நெடுங்காலம் அவன் எண்ணம் கைகூடாமல் போயிருக்கலாம். எத்தனையோ தோல்விகளும், தொல்லைகளும் மனிதனுக்கு ஏற்பட்டிருக்கும். எண்ணற்ற மனித உயிர்கள் இந்த முயற்சிக்குப் பலியாகியிருக்கும். ஆனால் மனிதன் துன்பத்தைக் கண்டு பின்னடையவில்லை; தனக்கு ஏற்பட்ட துயரத்துக்காக அஞ்சி அவன் களைத்துவிடவில்லை. அவைகளை எல்லாம் தாண்டி முன்னேறிக் கொண்டே இருந்தான். ஒருநாள் மனிதன் கஜேந்திரனை—யானையை அடக்கி விட்டான். அதனிடமே வேலை வாங்குவதற்குக் கற்றுக் கொண்டான்.

காட்டு வாழ்க்கையில் இருந்த மனிதன் முதன் முதலில் மிகப் பெரிய மிருகமான யானையை வென்று வெற்றி பெற்று விட்டதால், தன் வெற்றிப்பொருளான யானையையே தெய்வமாக வழிபட ஆரம்பித்தானோ என்னவோ! அப்பொழுதிருந்துதான் மனிதன், தான் ஏதாவது ஒரு காரியம் செய்ய ஆரம்பித்தால் அது விக்கினம் இல்லாமல் நிறைவேறுவதற்காக வேழ முகத்தவனை விநாயகனை, சித்தி தரும் கடவுளாகப் போற்றி வணங்குகிறான் போலும்!

கதிர்காமத்துக்குச் செல்வதற்கு முன்னால், இந்தமிழ்த் தெய்வமாகிய சுப்பிரமணியக் கடவுளைத் தரிசிப்பதற்கு முன்னால் வழி நெடுக விநாயகர்களின் தரிசனம் வேண்டிய மட்டும் கிடைத்துக்கொண்டே வந்தது.

பயங்கரப் பாதை

ஈழநாட்டுச் சாலைகளில் பிரயாணம் செய்யும்போது நாம் இந்த உலகில் பிரயாணம் செய்வதாகவே தோன்றாது. ஏதோ கதைகளிலே, காவியங்களிலே வர்ணித்திருக்கும் கறுப்புச் சலவைக்கல் தளம்போட்ட சாலையில் பிரயாணம் செய்வதாகவே தோன்றும். சாலைகளில் அப்பழுக்கு ஒன்றும் காணமுடியாது. வெள்ளவாயாவிலிருந்து கதிர்காமத்துக்குச் செல்லும் சாலையில் இரண்டு புறத்திலும் பசுமைக் காட்சி. சில இடங்களில் பசிய மரங்கள், செடிகள் நிறைந்த அடர்த்தியான காடுகள். கண்ணுக்கெட்டிய தூரம் வனம்! வனம்! வனாந்திரம்தான்! இந்தக்

காட்டுக்கு மத்தியில் எப்படித்தான் சாலைகள் போட்டார்களோ! இப்பொழுது இந்தச் சாலையில் பட்டப் பகலில் பிரயாணம் செய்யும் போதே பயமாக இருக்கிறதென்றால், சாலை போடும்போது எப்படிப்பட்ட அபாயத்தை எல்லாம் பொருட்படுத்தாமல் அவர்கள் சாலை போட்டிருக்க வேண்டும்.

''கதிர்காமக் காட்டுக்கு மத்தியில் செல்லும் இந்தச் சாலையில் இப்பொழுதுகூடச் சில சமயங்களில் காட்டு யானைகள் வந்து குறுக்கே நிற்கும்'' என்றார் நண்பர்.

''காட்டு யானையா? சாலையில் குறுக்கே வந்து நிற்குமா? அப்படியானால் அதைப் பார்க்க வேண்டும்'' என்றேன்.

''நல்ல ஆசை உங்களுக்கு! வழியில் பழக்கப்பட்ட யானைகளைப் பார்த்திர்களே அவை போல் சாதுவாக வந்து சாலையில் நிற்கும் என்று நினைக்கிறீர்களா?''

''பின் எப்படி நிற்கும்?''


''சென்ற ஆண்டு இப்படித்தான் சில பேர் கதிர்காமத்துக்குப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். திடீரென்று காட்டு யானை ஒன்று குறுக்கே வந்து விட்டது. இந்தச் சாலையில் கார் ஓட்டிப் பழக்கப்பட்ட டிரைவராக இருந்தால் அதனிடமிருந்து எப்படித் தப்புவது என்று அவருக்குத் தெரிந்திருக்கும். அந்த டிரைவர் புதுசுபோலிருக்கிறது. என்ன செய்வது என்று தெரியாமல் காரை நிறுத்தி விட்டார். அவ்வளவுதான். வெறி பிடித்த காட்டு யானை பிளிறிக் கொண்டு வந்து அந்தக் காரை ஒரு மோது மோதி உருட்டிவிட்டது. பிறகு தலையை வைத்து ஒரு முட்டு முட்டியிருக்கிறது. கார் அப்பளம்போல நசுங்கிப் போய் விட்டது. அதற்குள் காருக்குள் இருந்தவர்கள் 'தப்பித்தேன், பிழைத்தேன்' என்று எப்படியோ தலைதெறிக்க ஓடி மறைந்து போயிருக்கிறார்கள்'' என்றார்.

இந்தச் சம்பவத்தைக் கேட்ட பிறகு அந்தச் சாலையில் பிரயாணம் செய்வதே பயமாயிருந்தது. எங்கே காட்டு யானைகள் வந்து காரைத் தாக்கி நசுக்கிவிடுமோ என்று பயந்து கொண்டே இருந்தோம்.

இந்தச் சமயத்தில் எதிரில் ஒருவர் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். ''என்ன ஐயா! இந்தச் சாலையில் காரில் சென்றாலே அபாயம் என்கிறீர்கள்! இதோ சைக்கிளில் போகிறாரே ஒருத்தர்!'' என்றேன்.

''இந்தச் சமயத்தில் செல்லலாம். அபாயமில்லை. இன்னும் கொஞ்சம் நேரம் ஆகி விட்டால்தான் அபாயம். சூரியன் மறையும் சமயத்திலே தான் யானைகள் காட்டுக்குள்ளிருந்து வெளிக் கிளம்பும். சென்ற மாதத்தில் இந்தப் பக்கத்தில் சைக்கிளில் சென்ற ஒரு மனிதரைக் காட்டு யானை ஒன்று வளைத்து விட்டது. சைக்கிளில் சென்றவன் நடு நடுங்கிப் போய்க் கீழே விழுந்திருக்கிறான். சைக்கிளையும் அவனையும் சேர்த்துப் பிடித்துத் தூக்கிப் பூமியில் அறைந்து, காலால் தேய்த்து விட்டது. சைக்கிளும் ஆளும் அப்படியே கூழ் கூழாகி விட்டார்கள். அந்தக் கண்ணராவியை நேரிலே பார்க்கும் துர்ப்பாக்கியம் பெற்றவர்களில் நானும் ஒருவன்'' என்றார்.

இந்தச் சம்பவத்தைக் கேட்கக் கேட்க மேலும் பயம்தான் அதிகமாயிற்று. பயத்



''என்னை ரொம்ப யோக்கியன் என்று முதலாளி உன்னிடம் காலையில் சொன்னாராமே ஏன் உடனே என்னிடம் சொல்ல வரவில்லை?''
''மாலைக்குள் நீங்கள் வேறு விதமாக மாறி விட மாட்டீர்கள் என்ற தைரியத்தில் இருந்து விட்டேன். தப்புத்தான்!''

தைப் போக்கிக் கொள்வதற்காகப் பேச்சை மாற்ற முயன்றேன். ''யானைகளைத் தவிரக் காட்டுக்குள் வேறு ஒன்றுமிருக்காதோ! காடு என்ன அப்படி அடர்த்தியான காடா? இதில் யாரும் வேட்டைக்குச் செல்வதில்லையா?'' என்று பலமாதிரி கேள்விகளைக் கேட்டு வைத்தேன். அவர் இந்தக் கதிர்காமக் காட்டில் நடந்த ஒரு சம்பவத்தைச் சொன்னார்:

காட்டுக்குள் குமாரசாமி

கிழக்கு மாகாணத்துச் சர்க்கார் அதிகாரியாக இருந்து வந்தார் குமாரசாமி. அவர் பெரிய வேட்டைக்காரர். அவரிடம் உயர்ந்த வேட்டைத் துப்பாக்கிகள் இருந்தன. சளைக்காமல் இந்தப் பக்கத்தில் உள்ள எல்லாக் காட்டுக்குள்ளும் எங்கு வேண்டுமானாலும் அலட்சியமாகப் போய் வருவார். இந்தக் காடெல்லாம் அவருக்குத் தண்ணீர் பட்ட பாடு. காட்டுப் பன்றி, மான் இவைகளைத் தான் அதிகமாகச் சுடுவார். அவர் புலிகளைக் கூடக் கொன்று இருப்பதாகச் சொல்லிக் கொண்டார்கள். வெள்ளைக்காரர்கள் எல்லாம் அவருக்கு உற்ற நண்பர்கள். குமாரசாமிக்கு வேட்டைப் பைத்தியம் நன்றாகப் பிடித்திருந்தது. அடர்த்தியான காடுகள் எங்கிருந்தாலும் அங்கெல்லாம் அவரைப் பார்க்கலாம்.

குமாரசாமி நல்ல உயரம். அதற்கு ஏற்ற பருமன். அவரிடம் எல்லாருக்குமே நல்ல மதிப்பும் மரியாதையும் உண்டு. இந்தக் கதிர்காமக் காட்டுக்கு அவர் எத்தனையோ முறை வேட்டைக்கு வந்து வெற்றியுடன் திரும்பியிருக்கிறார். அதுபோல அன்றைய தினமும் வேட்டைக்குப் புறப்பட்டார்.

அன்று முழுவதும் காட்டுக்குள் அலைந்திருக்கிறார். ஒரு மிருகத்தைக்கூடச் சுடமுடியவில்லை போலிருக்கிறது. ஒரு மானோ காட்டுப் பன்றியோ, கேவலம் ஒரு முயலோ அவர் கண்ணில் தென்பட வேண்டுமே. இல்லை. வேட்டை வெறி தலைக்கு ஏறிவிட்டது. காட்டுக்குள் மூலைக்கு மூலை புகுந்து அலைய ஆரம்பித்திருக்கிறார். பொழுது சாயும் வரையில் இப்படி அலைந்து திரிந்திருக்கிறார். மான்களும், பன்றிகளும், முயலும் செய்த தவப் பயனோ, அல்லது குமாரசாமியின் துரதிர்ஷ்டமோ வேட்டை ஒன்றும் கிடைக்கவில்லை. அன்றெல்லாம் அலைந்த அலைச்சலும், களைப்

பும், ஏமாற்றமும் குமாரசாமிக்குத்தானே தெரியும்? இருந்தாலும், ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு காட்டிலிருந்து வெளியே வர ஆரம்பித்தார். வழி தெரியவில்லை. இருட்டி விட்டது. அதன் பிறகும் சுற்றி வருகிறார். பசி தாங்காமல் தவித்திருக்கிறார். பயம் வேறு அவரைப் பற்றிக் கொண்டது. எங்கெங்கோ மூலை முடுக்கெல்லாம் ஓடி ஓடிப் பார்த்திருக்கிறார். எத்தனையோ முறை இந்தக் காட்டுக்குள் வந்து வேட்டையாடிப் பழக்கப்பட்ட குமாரசாமியினாலேயே இந்தக் காட்டுக்குள்ளிருந்து வெளியில் வர முடியவில்லை.

வேட்டைக்குச் சென்ற கிழக்கு மாகாண ஏஜண்டுகுமாரசாமியைக் காணாமல்போகவே, பல வேட்டைக்காரர்கள் காட்டுக்குள் புகுந்து மிகப் பிரகாசமான ஒளி வீசும் டார்ச் லைட்டைக்கொண்டு தேடினார்கள். கிடைக்கவில்லை. மிகப் பெரிய சர்க்கார் அதிகாரியல்லவா? ஊரே கலகலத்துப் போய்விட்டது. 'குமாரசாமி காட்டில் அகப்பட்டுக் கொண்டார். அவர் திரும்பி வருவது என்பது சந்தேகம் தான்' என்றெல்லாம் கவலையோடு பேசிக் கொள்ள ஆரம்பித்து விட்டனர்.

ராணுவத்தினர் உபயோகிக்கும் 'ஹெலிகாப்டர்' விமானம் மூலம் காட்டுக்குமேலே பறந்து மிகப் பிரகாசமான ஒளி வீசும் 'சர்ச் லைட்டை'ப் போட்டுப்பார்த்துத் தேடினார்கள். ஒரு நாள் இரண்டு நாள் மூன்று நாள் என்று தேடினார்கள். பகலெல்லாம் இந்தக் காட்டில் நன்கு பழக்கப்பட்ட பல வேட்டைக்காரர்கள் காட்டுக்குள் புகுந்து தேடினார்கள்.

கடைசியாக, குமாரசாமி ஒரு இடத்தில் சோர்ந்து கிடந்ததைக் கண்டார்கள். மிகக் கஷ்டப்பட்டு அவரைக் காட்டுக்குள்ளிருந்து வெளியே கொண்டு வந்தார்கள். யார் செய்த புண்ணியமோ அன்று அவர் தப்பினார்.

அப்படிப்பட்ட காடு இந்தக் கதிர்காமக் காடு. குமாரசாமி போன்ற பழக்கப்பட்ட வேட்டைக்காரர்களே வழி தவறி விடுகிறார்கள் என்றால் எப்படிப்பட்ட பயங்கர அடர்த்தியான காடாக இருக்கும் என்பதைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்.

இந்தச் சம்பவத்தை அவர் சொல்லி முடிப்பதற்குள் கார் திசை மாறுமை என்ற ஊரை நெருங்கி விட்டது. அதற்குள் மாலை மறைந்து இருட்டி விட்டது. "நீங்கள்தான் இத்தனை நேரம் இந்தப் பாதையின் பயங்கரத்தைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தீர்களே! இதற்குமேல் பிரயாணம் செய்தால் அபாயம் தான். இங்கேயே 'ரெஸ்ட் ஹவுஸில்' தங்கி விடுவதுதான் நல்லது" என்றார் டிரைவர்.

எங்களுக்கு இருந்த மன நிலையில் டிரைவரே காரை ஓட்டத் தயாரா யிருந்தாலும் நாங்கள் மேலே பிரயாணம் செய்யத் தயாராயில்லை. ஆனாலும் அதைக் காண்பித்துக் கொள்ளாமல் "டிரைவர் மிகவும் களைத்துப் போய் விட்டார். இரவு இங்கேயே தங்கிக் காலையில் தான் போவோமே!" என்று சொல்லித் திசைமாறுமையிலேயே தங்கினோம்.


திசைமாறுமை ஓய்வு விடுதி மிகப் பெரிய தடாகக் கரையில் அமைந்திருக்கிறது. ஓய்வு விடுதியைச் சுற்றி விசாலமான வராந்தாக்கள். வராந்தாக்களில் பிரம்பாலான சாய்வு நாற்காலிகள். தடாகக்கரை இருக்கும் திசையிலிருந்து குபுகுபுவென்று காற்று வீசுகிறது. வானத்தின் மூலை முடுக்குகளில் மேகங்கள் தனித்தனியே பிரிந்து இருண்ட பயங்கரத்தைக் கலைத்து விட்டன.

பக்கத்து அறையிலிருந்து யாரோ உல்லாசமாக ராகங்களைப் பாடிக் கொண்டிருந்தார். வானத்தில் நோக்கின்றித் திரியும் சிறுசிறு மேகக் கூட்டங்களைப் போல் ராகங்கள் உரு மாறிக் கொண்டே போயின.

துல்லியமான நீலவானத்திலிருந்து சந்திரன் பால் நிலவைப் பொழிந்து கொண்டிருந்தான். மனத்தில் ஒரு அமைதியும் தெம்பும் ஏற்பட்டிருந்தன. மறுநாள் காணப்போகும் கதிர்காமத்தையும், அங்கு கோயில் கொண்டிருக்கும் கந்தப்பெருமானையும் கற்பனைக் கண்ணால் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தேன்.

"என்ன, மானசீகமாகக் கதிர்காமத்தில் இருக்கிறாற் போலிருக்கிறது. நாளைக்குத்தான் அங்கேயே போய்க் கதிர்வேலனைத் தரிசிக்கப் போகிறோமே" என்று சொல்லிக் கொண்டே வந்து அருகில் அமர்ந்தார் நண்பர்.

ஆமாம். இந்த இரவு கழிந்து விட்டால் போதும். நாளை தமிழ்த் தெய்வத்தைத் தரிசித்து விடலாம். தயவு செய்து ஒரே ஒரு இரவு பொறுத்துக் கொள்ளுங்கள். (தொடரும்)



ரேவதிக்குச் சந்திரன் கணவனாக வாய்த்ததைப பற்றி அந்த ஊரே பெருமைப்பட்டுக் கொண்டது. ரேவதி நல்ல அழகி. ஒய்யாரமான வாயில் புடவை வாளிப்பான அவள் உடலைச் சுற்றி அணைந்து கொண்டு பெருமையடைந்தது. சிவப்புக் கரை போட்ட வெள்ளைப் புடவையும் நீல நிற 'கிரேப் ஸில்க்' சோளியும் அவள் தந்தம் போன்ற உடலுக்கு மிகவும் கவர்ச்சியாயிருந்தன. முழுமதியின் மோகனம் அவள் முகத்தில் பொங்கியது.

சந்திரன் நல்ல அழகன்; சுருண்ட கேசத்துடன் அவனது கிராப்பும், மந்தகாசத்துடன் அவனது மதிவதனமும் யாரையும் எளிதில் கவர்ந்து விடும். அப்படியிருக்க ஏழைப் பட்டிக்காட்டுப் பெண் ரேவதி அவன் அழகில் மயங்கியதற்குக் கேட்பானேன்?

சந்திரன் ஒரு முறை ஒரு நண்பனின் கல்யாணத்துக்காக அலைகரை கிராமம் போயிருந்தான். பட்டண வாழ்வில் பழக்கப்பட்ட அவனுக்குக் கிராமச் சூழ்நிலை பிடிக்கவே யில்லை. முதலில் ரயிலில் திருச்சிராப்பள்ளி போய் இறங்கி, அங்கு ரயில் மாறி, திம்மாச்சிபுரம் போய் இறங்கி, அங்கிருந்து பரிசலில் காவிரி நதியைக் கடந்து, இரண்டு மைல் தூரம் பழைய காலத்து மாட்டு வண்டியில் போய் முதுகெலும்பை ஒடித்துக் கொண்டு அலைகரை கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்ததுமே அவனுக்கு அலுத்துப் போய் விட்டது. நண்பனின் வற்புறுத்தல் காரணமாகக் கல்யாணத்துக்கு முதல் நாள் காலையிலேயே அவர்களுடன் அங்கே போய்ச் சேர்ந்து விட்டான்.

ஸ்நானம் செய்து, பிரயாணக் களைப்புத் தீர்ந்து, சாப்பிட்டானதும் சந்திரனுக்குப் பொழுது போகவில்லை. ஊரைச் சுற்றிப் பார்க்கலாம் என்று புறப்பட்டான். சல சலவென்று ஓடும் வாய்க்காலைப் பார்த்ததும் அதன் கரையில் சற்று நின்றான் சந்திரன்.

அந்தச்சமயம் இதுவரையில் சோர்ந்து கிடந்த அவன் மனம் திடீரென்று உற்சாகத்தில் துள்ளியது. காரணம், வாய்க்கால் நீரில் எதிர்த்து நீந்திக் கொண்டிருந்த ஜல மோகினியின் வட்டமதி போன்ற முகம் அவன் கண்களில் பட்டதுதான். அடர்த்தியான கூந்தல் நீரோட்டத்தின் வேகத்தில் அலைந்து நெளிந்து விளையாட அவள் அலட்சியமாக ஜலத்தை எதிர்த்து நீந்தினாள். அவள் முகத்தைப் பார்த்ததும் வான வெளியில் மிதக்கும் வெண்ணிலவின் பிரதிபிம்பமோ என்று சந்திரன் ஒரு கணம் திகைத்தான். நல்ல வேளையாக வெய்யில் கடுமையாகக் காய்ந்து கொண்டிருந்தபடியினால் சந்திரனின் திகைப்பு அதிக நேரம் நீடிக்கவில்லை.

தன்னையே ஒரு இளைஞன் உற்றுப் பார்ப்பதைக் கவனித்துவிட்ட அந்த ஜல மோகினி 'குபுக்' கென்று ஜலத்தில்

முழுகி, சிறிது தூரம் ஜலத்துக்குள்ளே முழுகியபடியே போய்க் கரையேறினாள். நீரில் முழுகிய அந்த அழகி அப்பொழுது ஒரு சிற்பி செதுக்கிய சிலை போல் உடலோடு ஒட்டிய ஈர உடையினால் கவர்ச்சி யூட்டும் அங்கங்களுடன் நின்றாள். அவளது மருண்ட பார்வை அவனை மயக்கியது. அவள் தன்னைப் பார்த்து விட்டதை யறிந்த சந்திரன் அதற்குமேல் அங்கிருக்க விரும்பவில்லை. உடனே நகரலானான். இல்லை, அவன் உடல் மட்டும்தான் நகர்ந்தது; அவன் மனம் மட்டும் அங்கேயே தங்கிவிட்டது.

கல்யாண வீட்டுக்கு வந்த அவனுக்கு எதிலும் மனம் செல்லவில்லை. மாப்பிள்ளை அழைப்பு கிராமத்துச் சிவன் கோவிலிலிருந்து துவங்கியது. அந்த ஊர்வலத்தில் சந்திரனைத் தவிர எல்லோரும் குதூகலமாக இருந்தனர். அவன் மட்டும் பித்துப் பிடித்தவன் போல் கூட்டத்தோடு நடந்து போய்க் கொண்டிருந்தான்.

ஜில்லென்று நீர்த்துளிகள் முகத்தில் பட்டதும் சந்திரன் திகைத்துப் போய்க் கண்களைத் திறந்தான். அவனெதிரே கையில் பன்னீர்ச் செம்புடன் நின்ற ஒரு குறும்புக்காரப் பெண்ணைக் கண்டதும் சந்திரனுக்கு வந்த கோபத்தில் அவளை அறைந்திருப்பான். ஆனால் அவள் முகம் ஏற்கனவே அவன் பார்த்த முகமாயிருக்கவே சிறிது தயங்கினான். சட்டென்று அவன் நினைவில் இன்னொரு முகம் உதயமாயிற்று. அது வாய்க்காலில் நீந்திய ஜலமோகினியின் முகம்தான்.

"ஜல மோகினி, இது என்ன விளையாட்டு!" என்றான் சந்திரன்.

"நடந்து கொண்டே தூங்குகிறீர்களே! அது கெடுதல் இல்லையா! அதனால்தான் எழுப்பினேன், என் பெயர் ஜலமோகினி இல்லை. ரேவதி" என்றாள் அந்தப் பெண்.

சந்திரன் அந்தப் பெயரைக் கேட்டதும் கிறங்கினான்.

"ரேவதி, உனக்கும் சந்திரனுக்கும் தான் பொருத்தம்!" என்று கூறிச் சிரித்தான் சந்திரன்.

"ஊர்வலம் ரொம்ப தூரம் போய் விட்டதே!... நீங்கள் சற்றுப் பின் தங்கி வாருங்கள். நான் வேகமாக ஓடி அவர்களுடன் சேர்ந்து கொள்ளுகிறேன்!" என்று கூறி விட்டு ரேவதி, தன் நீண்ட பின்னல் அசைய ஓடினாள்.

சந்திரன் சுய உணர்வை அடையச் சிறிது நேரம் பிடித்தது.


அப்புறம் தன் தகப்பனாரிடம் ஒற்றைக் காலில் நின்று ரேவதியை மணந்து கொண்டான். பட்டிக்காட்டுப் பெண் ரேவதிக்குப் பட்டண வாழ்வு மிகவும் இனிப்பாயிருந்தது. அவள் மனத்தில் சதா உற்சாகம் பொங்கியது. சந்திரன் அவளிடம் உயிராயிருந்தான். வயது முதிர்ந்த நோயாளியான தாயாரைத் தவிர உறவினர் என்று சொல்லிக் கொள்ளச் சந்திரனுக்கு வேறு யாரும் இல்லை. அவளும் ரேவதியிடம் மிகவும் அன்பாயிருந்தாள். ஆகவே, ரேவதிக்குக் கணவன் வீடு இன்பத்தின் சிகரமாக விளங்கியது.

இதுவரையில், கணவன் வீட்டுக்கு வந்த ரேவதி கணவனுடைய அறையில் அவன் இல்லாத சமயத்தில் எதையும் எடுத்துப் பார்த்ததில்லை. அன்று சந்திரன் ஆபீசுக்குப் போகும்போது மேஜையின்மேல் ஞாபக மறதியாகத் தன் டைரியை வைத்துவிட்டுப் போய் விட்டான். பளபளப்பான 'பிளாஸ்டிக்' உறையில் கவர்ச்சியாக இருந்த டைரியைப் பார்த்ததும் ரேவதிக்கு அதைக் கையில் எடுத்துப் பார்க்க ஆசையாக இருந்தது. ரேவதி அதை எடுத்துப் பார்த்தாள். கிராமத்தில் கல்யாண சந்தர்ப்பத்தில் ரேவதியைச் சந்தித்து, அவளைக் கல்யாணம் செய்து கொண்டது முதலிய எல்லா விவரங்களும் மணிமணியாகத் தமிழில் எழுதப் பட்டிருந்தன. ரேவதி அவற்றை மிகவும் சுவாரஸ்யமாகப் படித்து ரஸித்தாள்.



கறுப்புக் கோட்டுக்காரர் :— பால்யத்திலே நாங்களெல்லாம் விளக்கெண்ணெய் சாப்பிட்டு வளர்ந்தவர்கள் ஸார்!

மற்றவர் :—ஓஹோ...அப்படியா...அதுதான் முகம் மாறாமல் அப்படியே இருக்கிறது!



பரோடாவில் உள்ள சயாஜி பல்கலைக் கழகத்திலே சமீபத்தில் நடந்த அகில இந்திய கணித மகாநாட்டுக்குச் சென்றிருந்த பெரியகுளம் (மதுரை ஜில்லா) வி. எம். போர்டு உயர் நிலைப்பள்ளி கணித ஆசிரியர் திரு எம். பரமேசுவர அய்யரும் மாணவர்களும். இவர்கள் வரைந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட கணிதப் படங்கள் மேற்படி மகாநாட்டுப் பொருட் காட்சியில் வைக்கப்பட்டு, கணிதப் பேராசிரியர்களால் மிகவும் பாராட்டப்பட்டன. அவற்றைக் கண்ட ஆயிரக்கணக்கான மாணவர்களும் ஆராய்ச்சியாளரும் பிரமித்து விட்டார்கள். இது வரை எவரும் கண்டிராத அப்படங்களைத் திரைப் படச்சுருளிலும் படம் பிடித்தார்கள். மகாநாட்டுப் பிரதிநிதிகளை வரவேற்ற டாக்டர் ராம் பிகாரி, மகாநாட்டை ஆரம்பித்துவைத்த சயாஜி பல்கலைக் கழக உப அத்யக்ஷர் திருமதி ஹம்ஸா மேத்தா, தலைமை உரை நிகழ்த்திய காசி பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு வி. வி. நார்லிகர் உள்பட பல மேதைகளும் வி. எம். போர்டு உயர்நிலைப் பள்ளியினால் தயாரித்த கணிதப் படங்களை வெகுவாகப் பாராட்டினார்கள்.

ஆ! இது என்ன? மீண்டும் மீண்டும் ஒரே விஷயம் வந்து அவளைக் குழப்பின.

'கமலாவுக்கு மாதம் பத்து ரூபாய்!... அவள் கணவன் என்னத்துக்காகக் கொடுக்க வேண்டும்? கமலா யார்?.'

ரேவதிக்கு ஒன்றும் புரியவில்லை. என்னதான் சூதுவாது தெரியாத பட்டிக் காட்டுப் பெண்ணானாலும் அவளுடைய பெண்ணுள்ளம் மரத்துப் போய் விட்டதா, என்ன? 'இத்தனை நாளும் சந்திரன் நமக்கே உரியவன் என்று நினைத்தது தவறு என்று இப்போது தானே தெரிகிறது? ஒவ்வொரு மாதமும் கமலாவுக்குப் பத்து ரூபாய் கொடுக்கிறாரே! இது பற்றி ஒரு வார்த்தைகூட நம்மிடம் அவர் சொல்லவில்லையே!'

சந்திரன் ஆபீஸிலிருந்து வந்ததும் ரேவதியின் முகம் கலங்கி யிருப்பதைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தான்.

''ரேவதி! உன் உடம்புக்கு என்ன? உன் முகம் ஏன் வாடி யிருக்கிறது?'' என்று ஆதுரத்துடன் கேட்டான்.

பாவம், ரேவதி பட்டிக்காட்டுப் பெண்தானே! அவளுக்குத் துக்கம் பீறிட்டுக்கொண்டு வந்தது.

''நான் என்ன கமலாவா, உற்சாகமாயிருப்பதற்கு?'' என்று விம்மலுக்கிடையே சிரமப்பட்டுக் கேட்டாள்.

புத்திசாலியான சந்திரனுக்கு விஷயம் உடனே விளங்கி விட்டது.

''ரேவதி, நீ என் டைரியைப் பார்த்தாயா?'' என்று கேட்டுச் சிரித்தான்.

''..ஏன் நான் பார்க்கக்கூடாதா?'' என்று கேட்டு ரேவதி விசித்தாள்.

''பேதைப் பெண்ணே ரேவதி, இதோ உன் மனத் தாங்கலுக்குக் காரணமாயிருந்த கமலா! உன் இஷ்டம்போல் செய்து கொள்!'' என்று கூறிக் குறும்புச் சிரிப்புடன் பையை அவளிடம் கொடுத்தான்.

பையைக் கையில் வாங்கிய ரேவதி பரபரப்புடன் அதைப் பார்த்தாள். ''ஆரஞ்சுப் பழம்'' என்று திகைப்புடன் கூறினாள்.

''ஆமாம். அதற்குத்தான் கமலா என்று பெயர்! மாதா மாதம் பழக் கடைக்காரனுக்குப் பணம் கொடுத்து விட்டு, கமலாவுக்கு ரூ.10 என்று டைரியில் குறித்து வைப்பேன்....அம்மாளுக்காக....''

''ஐயோ! போதும். வெட்கமாயிருக்கிறது! பழத்தின் பெயரென்று எனக்குத் தெரியாது....இதை யாரிடமும் சொல்ல வேண்டாம்!'' என்று கூறி ரேவதி தன் தளிர்க் கரங்களினால் அவன் வாயைப் பொத்தினாள். சந்திரன் அவள் கரங்களைப் பற்றிக் கொண்டான்.

தமிழ் கூறும் நல்லுலகம்

சங்கீத மும்மூர்த்திகள் விழா

கோலாலம்பூரில் இசைச் செல்வர்கள், இசைப் பிரேமிகள் ஒன்று சேர்ந்து சில ஆண்டுகளாக மகான் தியாகப் பிரம்மத்தின் தினத்தைக் கொண்டாடி வந்தார்கள். இவ்வாண்டில், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் இருவர் தினங்களையும் சேர்த்துக் கொண்டு விழாவை மிகவும் சிறப்பாகக் கொண்டாடி விட்டார்கள். விவேகானந்த தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் இரண்டு நாட்கள் அமோகமான பொதுமக்களின் ஆதரவுடன், பல இசைக் கலைஞர்களின் இன்னிசை விருந்துடன் சமீபத்தில் விழா மகோன்னதமாக நடைபெற்றது. இந்தச் சங்கீத மும்மூர்த்திகள் விழாவில் கோலாலம்பூரில் வசித்து வரும் ரசிகர்கள் எல்லாரும் திரளாகக் கலந்து கொண்டு ஆனந்தித்தனர்.

பிரிவுபசாரம்

மலாயாவில் இந்திய ஹைகமிஷனராக இருந்து செல்லும் திரு. ஆர். கே. தாண்டன் அவர்களுக்கும் அவர்களின் துணைவியாருக்கும் வழியனுப்புக் கூறும் பாராட்டுத் தேநீர் விருந்து 2–3–57 மாலை சிங்கப்பூரிலுள்ள ராபின்ஸ் பிளேஸ் ஜான் லிட்டில்ஸ் கபேயில் சிங்கப்பூர் செட்டியார் சமூகத்தவர்களால் நடத்தப்பட்டது. விருந்துக்கு முதல் மந்திரி திரு லிம் யூ ஹாக் தலைமை வகித்தார். விருந்துக்கு எல்லா சமூகத்தையும் சேர்ந்த பிரமுகர்கள் முந்நூறுக்கு மேல் வந்திருந்தனர். திரு அ. அரு. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் சிங்கப்பூர் செட்டியார் சமூகத் தலைவர் என்ற ஹோதாவில் திரு லிம், திரு தாண்டன் ஆகியோருக்கு மலர் மாலை அணிவித்து, திருமதி தாண்டனுக்கு ஒரு மலர்ச் செண்டை அளித்தார். தாண்டன் விருந்துபசாரம் அளித்துக் கௌரவப் படுத்தியதற்குத் தம் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

பொன் விழா

கொழும்பு பாரதி இளைஞர் சங்க ஆதரவில் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் நயமணி திரு கல்கிதாசன் தலைமையில் ஜகத்குரு காஞ்சிகாமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் பொன் விழா மிக விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. இந்த விழாவில் ஏராளமான ஆண்களும் பெண்களும் வந்து கலந்து கொண்டனர். சமீபத்தில் நடந்த எந்த சைவப் பெரியார் திருநாளிலும் இவ்வளவு மக்கள் பக்திப் பெருக்குடன் வந்து கலந்து கொண்டதில்லை என்று கூறலாம்.

தலைவர் திரு கல்கிதாசன் பேசும்போது பாரத நாட்டில் சமயங்கள் பலவாறாகப் பிரிவுபட்டிருந்த சமயத்தில் ஆதிசங்கரரைப் போன்ற மகான்கள் அவதரித்துச் சமயங்களையும் சுவாசாரங்களையும் காப்பாற்றினார்கள் என்றும், ஜகத்குரு அவர்களின் பொன்விழா நடைபெறும் இந்த நாளில் சமயப் பூசல்கள் ஒழிந்து நாடு நலம் பெற வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். பல அன்பர்கள் சுவாமிகளின வேதாகம தத்துவ சம்வாதங்களைப் பற்றிப் பேசிய பின்பு, சுவாமிகள் இன்னும் நாடும் சமயமும் தழைக்கப் பல ஆண்டுகள் வாழ்ந்தருள வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்துத் திருமந்திரம் பாடப்பட்டது.

பழைய மாணவர் பணி

புது தில்லி தமிழர் உயர்நிலைப் பள்ளியின் பழைய மாணவர்கள் ஒன்று கூடி, பாராட்டுக்குரிய ஒரு உத்தமமான காரியம் செய்தார்கள் சென்ற வாரத்தில். சரஸ்வதி கடாக்ஷம் பரிபூர்ணமாயும், இலட்சுமி கடாக்ஷம் கடைக்கண் அளவோடு நிற்கும் இப் பள்ளிக்கு ராஜாஜி அஸ்திவாரக் கல் நாட்டியதும், ஸ்ரீமதி எம். எஸ். பல ஆயிரம் ரூபாய்கள் நிதி வசூல் செய்து கொடுத்ததும் பிறர்கள் மறக்க முடியாது. பாரதத்தின் பிரதமர் அதை, தென்னாட்டார் மாத்திரமல்ல, வடநாட்டாரும் மறக்க முடியாதபடி செய்து விட்டார் முன்பு தம்முடைய பிரசங்கத்திலே. "நான் பாரதத்தின் பிரதமராயிருக்கலாம்; ஆனால் இங்கு நான் சங்கீத ராணியின் முன் சாதாரண பிரஜையாய்க் காட்சியளிக்கிறேன்" என்று சொல்லி நமது பள்ளியை ஒரு மறக்க முடியாத பெருமைக்கு உள்ளாக்கிவிட்டார்.


அப்பேர்ப்பட்ட பள்ளியின் பழைய மாணவர்கள் எல்லாம் ஒன்று கூடினார்கள். ஒரு கதம்ப நிகழ்ச்சி நிறுவினார்கள். இந்தி, தமிழ், நாடகங்கள், நாட்டியம், கோலாட்டம் முதலிய பல ரஸமான நிகழ்ச்சிகளை அதில் பின்னினார்கள். பின்னி, பின்னி இழுத்துவிட்டார்கள் ஜனவரியிலே. பலன், சென்ற ஞாயிறன்று ரூ. 6000-க்கு ஒரு செக்கை எழுதிப் பள்ளி நிர்வாகக் குழுவினரிடம் பயபக்தியுடனும் பக்தியுடனும் சமர்ப்பித்தார்கள். இளம் மாணவர்கள் இவ்வளவு பெரிய தொகையை இரவு பகல் பாராது உழைத்து ஈட்டியது அரிய பெரிய சாதனை. அன்று பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேநீர் விருந்து, நெல்லிக்காய் அளவில் தயார் செய்யப்பட்ட குஞ்சாலாடு எல்லாம் மறக்க முடியாத அம்சங்கள். கூடியிருந்த நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர் குழாமும், வள்ளுவரின்,

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோனெனக் கேட்ட தாய்"

என்ற குறளை மெய்ப்பிக்கும்படியாக அமைந்தது. இப்பிள்ளைகளைப் பெற்றோர் பாக்கியசாலிகள்தான், ஐயமில்லை.

தங்கவிழா வைபவம்

புது தில்லியில், கரோல்பாக் பஜனை சமாஜத்தாரும் விநாயகர் கோவில் தர்மகர்த்தாக்களும், வைதீக சங்கத்தோரும் முறையே காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சாரியாரின் தங்க விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள். பிரதி தினமும் ருத்ராபிஷேகம், வேதபாராயணம் முதலிய ஆஸ்திகக் காரியங்களைப் பக்திப் பெருக்கோடு நடத்தியதுடன் சத் காலட்சேபங்களும் ஏற்பாடு செய்து, ஆசார்ய சுவாமிகளின் அருளுக்குப் பாத்திரமானார்கள். —சப்பு



ஆபீஸ் வாழ்க்கை என்பது இல் வாழ்க்கைக்கு எந்த விதத்திலும் சளைத்ததல்ல. அதில்தான் எத்தனை ஆசாபாசங்கள்! சுக துக்கங்கள்! வேடிக்கை விநோதங்கள்! இதோ எங்கள் ஆபீஸைப் பாருங்கள்!

நித்திய கண்டம்: எங்கள் பொதுக் குமாஸ்தா நீலகண்டத்தை நாங்கள் நித்திய கண்டம் என்றுதான் கூப்பிடுவது வழக்கம். ஆபீஸில் அவனுக்கென்று தனியாக வேலை பொன்றும் ஒதுக்கப் பட்டிருக்கவில்லை. பியூன் வேலை முதல் பில் போடும் வேலை வரையில் எந்த வேலையையும் அவன் செய்வான். நாள் முழுதும் 'எங்கே நீலகண்டன்?' 'நீலகண்டனைக் கூப்பிடு!' 'ஏய் நித்திய கண்டம்!' 'கூப்பிடு அவனை' என்று ஆபீஸில் அவனுடைய பெயர் அடி பட்டுக் கொண்டே இருக்கும்.

கடிதத்தைப் 'பட்டுவாடா' செய்யும்படி பியூனிடம் கொடுத்தால் அதை வாங்கி அவன் நீலகண்டத்திடம் கொடுத்து விரட்டுவான். அதே சமயத்தில் டைபிஸ்ட் ''ஏய் நித்திய கண்டம்! ஸ்ட்ராங்கா ஒரு கப் காப்பி!'' என்பான். ''இதோ வந்துவிட்டேன் ஸார்!'' என்று கடிதத்தைச் சட்டைப் பையில் வைத்துக்கொண்டு, காப்பி வாங்க ஓடுவான். அப்பொழுது ஹெட் கிளார்க் தமது 'புல்டாக்' முகத்தை உயர்த்தி 'ஏய் உதவாக்கரை! புகையிலை வேணும்னு சொல்லி எத்தனை நேரமாச்சு! காப்பிக்குத்தான் ரொம்ப அவசரமோ?' என்று உறுமுவார். நீலகண்டம் பல்லை இளித்துக் கொண்டே, 'இதோ ஒரே நொடி ஸார்!' என்பதற்குள் மானேஜரின் அறையிலிருந்து மணிச் சத்தம் கேட்கும். அதைத் தொடர்ந்து ''அந்த நீலகண்டத்தை பாங்குக்கு ஓடச் சொல்லு! ஏஜெண்டுக்கு டெலிபோன் பண்ணி யிருக்கிறேன்!'' என்று உத்தரவு பிறக்கும். நீலகண்டன் பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு படியை விட்டு இறங்குகையில் பியூன் பிச்சைமுத்து தனது ரத்தக் கண்களை உருட்டி விழித்து, ''ஏய் அந்த லெட்டர் முதல்லே டெலிவரி' ஆகணும்! ஆமாம்!'' என்று கடுமையாக எச்சரித்து வைப்பான்.

இதே சமயம் ஹாலிலிருந்து நாலைந்து குரல்கள் கிளம்பும்.

பில் கிளார்க்: ஏய் நித்திய கண்டம், இந்த பில்லை 'செக்' பண்ணிட்டுப் போகக் கூடாது?

பேரேடு குமாஸ்தா: ஏய் அழுமூஞ்சி! இந்த நாலு பக்கத்தையும் கூட்டிப் போட்டுவிட்டுப் போனால் தேய்ந்தா போயிடுவே!

பைல் கிளார்க்: ஏண்டா, நானும் அப்போ பிடிச்சு சொல்லிக் கிட்டே இருக்கிறேன். பேப்பரெல்லாம் குப்பை மாதிரி சேர்ந்து போச்சு! இதையெல்லாம் எப்ப வந்து 'பைல்' பண்ணப் போறே!...

நித்திய கண்டம் முகத்தில் அசட்டுச் சிரிப்புடன் குழைவாக, ''மன்னிச்சுக்கோங்க ஸார், இதே ஒரு நொடியிலே வந்து எல்லாத்தையும் செய்கிறேன்!'' என்று கூறி விட்டுப் புறப்படுவான்.

பாவம்! அவனால் யாரையுமே விரோதித்துக்கொள்ள முடியாது. நிமிஷத்துக் கொரு முறை, பியூன் முதல் ஹெட் கிளார்க் வரையில் ''நீ சுத்த சோம்பேறி! உன்னைத் தொலைத்துத் தலைமுழுகினால்தான் இந்த ஆபீஸ் உருப்படும்!'' என்று கர்ஜிக்கும்போதெல்லாம் அவனது நெஞ்சு கிடந்து அடித்துக் கொள்ளும். அவனுக்கென்று தனிப்பட்ட வேலை எதுவும் இல்லையே! அவன் இல்லாவிட்டால் ஆபீஸில் எந்த வேலை நின்றுவிடப் போகிறது? எந்தச் சமயத்தில் யார் கலகம் செய்து அவனுடைய வேலைக்கு உலை வைத்து விடுவார்களோ என்று அவன் மனம் தவிக்கும். வேலைபோனால் நாற்பது ரூபாயை நம்பி வாழும் நாலு ஆத்மாக்களின் கதி என்னவாகும்? முதல் பெண்ணுக்குக் கல்யாண வயது; இரண்டாவது பையன் பள்ளிக்கூடம் போகிறான்; மனைவிக்கு ஓயாத பிணி! சுற்று வட்டாரமெங்கும் கடன் தொல்லை!

இத்தனை கஷ்டங்களையும் சகித்து விழுங்கிக் கொண்டு முகத்தில் சிரிப்பை வரவழைக்க முயற்சிக்கிறானென்றால் அவன் ஆலமுண்ட நீலகண்டனைவிட உயர்ந்தவன்தான். பாவம், நீலகண்டன்! அவனுக்கு ஒவ்வொரு நாளும் 'நித்திய கண்டம்' தான்!

செக்குமாடு: நாங்கள் இப்படிச் சொல்லுவது எங்கள் அக்கவுண்டெண்டைத்தான். வண்டியிலும் ஏரிலும் கட்டப்படும் மாடு கொஞ்சம் இப்படி அப்படியாவது திரும்பும். ஆனால் செக்குமாட்டுக்கு அந்த உரிமை கிடையாது. திருப்பித் திருப்பி ஒரே சீராகப் பக்கவாட்டில்கூட அசைய மாட்டாமல் விரக்தியோடு சுற்றிச் சுற்றி வருவதைத் தவிர அது காணும் சுகம்தான் என்ன?

ஐயாசாமி தமது அழுக்குக் கோட்டை பிரமாதமாக அணிந்து, மேசையருகில் உட்கார்ந்து பேரேடு புஸ்தகத்தை முறைத்


துப் பார்க்க ஆரம்பித்து விட்டாரென்றால், காலையில் குனிந்த அவரது தலை மாலையில் தான் நிமிரும். இப்படி அப்படித் திரும்ப மாட்டார். மற்றவர்களோடு கலகலப்பாகப் பேசவோ, சிற்றுண்டிக்குச் செல்லவோ மாட்டார். சந்தோஷச் சிரிப்பு என்பதையே அறியாத மனிதர்! ஒட்டிய முகம், சூன்யத்தை நோக்கும் ஒளியற்ற விழிகள், சதா கவலையைக் காட்டும் நெளிந்த புருவங்கள். குடுமி அவிழ்ந்து தொங்க, நெற்றி சுருங்கிச் சந்தனக் கீற்றுகள் போன்ற ஆழமான ரேகைகள் தெளிவாகத் தெரிய 'க்விக் க்விக் க்விக்' என்ற நாதத்துடன் பேனாவால் ஓயாமல் உழுது கொண்டே யிருப்பார். இடையிடையே 'எட்டும் நாலும், அஞ்சும் ஏழும், பதினாலில் ஆறு போனால்' என்ற முணுமுணுப்பு! தினந்தோறும் ஒரே ஒப்பாரிதான்.



மாலை ஆறு மணிக்குமேல் புத்தக மலைகளுக்கிடையே யிருந்து புஸ்ஸென்ற பெருமூச்சு கிளம்பிற்றென்றால் செக்கு மாடு 'கொட்டிலுக்கு'க் கிளம்பி விட்டதென்று அர்த்தம். முகத்தில் எண்ணெய் வழியும். கண்கள் இரண்டும் சிவந்து இமைகள் உருண்டை உருண்டையாக வீங்கி, விழிகள் பிதுங்கி வந்துவிடுமோ என்று தோன்றும். 'என்ன ஸார், வேலை முடிந்து விட்டதா?' என்று கேட்டால், "ஐந்தொகையில் ஒரு நாலேமுக்காலணா உதைக்கிறது. காலையிலிருந்து பார்க்கிறேன், கிடைக்கமாட்டேனென்கிறது!" என்று கூறி விட்டுத் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டேபோவார். வழி நெடுகவும் வீட்டுக்குப் போன பிறகும்—ஏன் கனவிலும்கூட, இந்த ஐந்தொகை நினைவு அவரை அலைக்கழித்துக் கொண்டேதானிருக்கும். அவரது ஜன்மத்தில் வித்தியாசமில்லாமல் கணக்கை எழுதினேனும், சரியாக வந்தது, என்று கிடையாது. பாவம், அவர் ஜாதகம் அப்படி!

சுமைதாங்கி: அதோ நிமிடத்துக்கொரு முறை பொடி மட்டையைத் தட்டித் தட்டி உதிர்கிறாரே ஒரு வழுக்கைத் தலைப் பேர்வழி, அவர்தான் எங்கள் 'ஸ்டோர் கிளார்க்' சோமநாதன். சரக்கு நிலவரங்களைப் பற்றிய கணக்குகளை ஒழுங்காக வைத்துக் கொள்ள வேண்டியது அவர் பொறுப்பு. ஆனால் அவர் என்ன செய்கிறார் என்று பாருங்கள்.

"இதோ பாருங்கள் ஸார், இதற்கு முன்னால் நான் வேலை செய்து கொண்டிருந்த இடத்தில் முதலாளி, கம்பெனி நிர்வாகத்தையே என்னிடம் விட்டு விட்டார்! ஒரு நாளைக்கு நான் ஆபீஸுக்குப் போகவில்லையென்றால் ஒரு கடுதாசு கூட வெளியே போகாது. காலணாவுக்குப் பில் போடமாட்டார்கள்! செக்குகளைக் கூட பாங்கிக்கு அனுப்ப மாட்டார்கள், ஸார்! முதலாளி கண்டிப்பாகச் சொல்லி விடுவார்; சோமநாதன் வரட்டும், அவனைக் கேட்டுக் கொண்டு செய்யுங்கள் என்று!"



அவரைச் சூழ்ந்துள்ள மற்றக் குமாஸ்தாக்கள் எதற்காக இப்படி 'சபாஷ்' போடுகிறார்கள் என்று தெரிகிறதா? சற்றுக் கவனியுங்கள்.

"சோமநாதன்! இந்த கமிஷன் ஸ்டேட்மெண்டைக் காலையிலிருந்து போட்டுப் பார்க்கிறேன், சரியாகவே வரமாட்டேனென்கிறதே.." — இது லெட்ஜர் குமாஸ்தா.

"பேரேடு புஸ்தகத்தையும் 'பைலை'யும் இப்படி அனுப்பி வையப்பா! நான் போட்டுத் தருகிறேன்!" என்கிறார் சோமநாதன்.

'கரஸ்பாண்டன்ஸ்' குமாஸ்தா முகத்தை உர்ரென்று வைத்துக்கொண்டு ஏதோ முணுமுணுக்கிறார்.

"என்ன ஸார் அக்கிரமம்! அந்தக் கோயமுத்தூர் ஆசாமிக்கு 'ஸ்ட்ராங்கா' ஒரு லெட்டராம்; கல்கத்தா தொழிற்சாலைக்குப் பட்டும் படாமலும் ஒரு கடுதாசாம்; இன்ஷூரன்ஸ் கம்பெனிக்குத் தாக்குத் தாக்கு என்று தாக்கி ஒரு ரிப்போர்ட்டாம்! — இத்தனையும் உடனே அனுப்பித் தொலைக்கணுமாம்;—ஏன் இந்த மானேஜர்தான் டைபிஸ்டைக் கூப்பிட்டு 'டிக்டேட்' பண்ணக் கூடாதோ? யாருக்குத் தெரியும், இந்த 'ஸ்ட்ராங்கும் லைட்டும்' 'தாக்குதலும்'!"

அருகில் இருக்கும் லெட்ஜர் குமாஸ்தா கிண்டிக் கொடுக்கிறார்.

"மானேஜரைக்கூட என்ன நமது சோமநாதன் என்று நினைத்துக் கொண்டாயா? இத்தகைய கடிதங்கள் எழுதுவதற்கு, அவருக்கே கொஞ்சம் 'நாலேஜ்' கம்மி என்ற விஷயம் நமக்குத்தெரிந்ததுதானே, அப்பா!"

சோமநாதனின் உச்சி குளிர்ந்து விட்டது. "அட இப்படித் தள்ளுமையா அந்தப் பேப்பர்களை! சும்மா மூக்கால் அழுகிறீர்கள்! எனக்கு இதெல்லாம் தண்ணீர் பட்டபாடு! ..முன்னே இருந்த ஆபீஸிலே...." என்று குதூகலத்துடன் ஆரம்பித்துவிடுகிறார்.

அவ்வளவுதான். இந்தச் சுமைதாங்கியின் மேல் மளமள வென்று பாரம் குவிந்து விட்டது. பார்த்தீர்களா? இத்தனை அவதிக்கிடையே ஹெட் கிளார்க்கின் பெண்ணுக்கு ஜாக்கெட் துணி வாங்கி வரும் பொறுப்பை வேறு ஒப்புக் கொண்டிருக்கிறார் இவர்.

இப்படியே மாலை வரையில் ஓயாமல் மற்றவர்களுடைய வேலைகளையே செய்து கொண்டிருக்கும் இந்த மனிதரால், தம் சொந்தப்பொறுப்பிலுள்ள வேலையை எப்படிச் செய்ய முடியும்? ஆடிட்டர்களும், டைரக்டர்களும், "எங்கே ஸ்டாக் புஸ்தகம்? கொண்டுவா பட்டியலை!..புஸ்தகத்தைக்காட்டு!" என்று கேட்டு அவசரப்படுத்தும் போதுதான் இவருக்குத் தமது நிலைமைபுரியும்! நாலைந்துமாதக் கணக்காவது பதியப்படாமல்

இருக்கும். அப்போது இராப் பகலாக உட்கார்ந்து ஏழெட்டு நாட்கள் ஓயாமல் விழுந்துவிழுந்து எழுதுவார். இவரிடம் உதவி பெற்ற மற்றக் குமாஸ்தாக்கள் எவருமே இவர் பக்கம் திரும்பிக் கூட பார்க்க மாட்டார்கள்.



எழுதி முடித்த பிறகும்தான் என்ன? அவசரத்தில் ஒன்றுக்கொன்றாகப் பதிந்து எத்தனையோ கோளாறுகள் ஏற்பட்டு விட்டிருக்கும். பட்ட கஷ்டத்துக்கு, 'திறமையற்ற முட்டாள்!' என்ற பட்டம்தான் மிஞ்சும்! ஒருதடவை பட்ட பிறகாவது மனிதனுக்குப் புத்தி வருமா என்றால், அதுதான் இல்லை!

சுளை விழுங்கி: எங்கள் டைபிஸ்டுக்கு இந்தப் பெயர் எப்படி ஏற்பட்டது என்று கேட்கிறீர்களா? துளிக்கூட பொறுப்புத் தெரியாதவன். பக்கத்திலிருப்பவர்களுடன் தொண தொணவென்று பேசிக் கொண்டே தனது சுருக்கெழுத்து நோட் புத்தகத்தைப் பார்த்து டைப் அடிக்கையில் நடுவில் ஏழெட்டு வரிகளை அப்படியே 'அபக்'கென்று விழுங்கி விடுவான். 'கண்ணுசாமி'யைக் 'கந்தசாமி' என்றும், 'வள்ளியப்ப'னை 'வெள்ளையம்மாள்' என்றும் அடித்து வைப்பான். மதராஸ் கடிதத்தைக் கள்ளிக்கோட்டைக்கும், கல்கத்தாவுக்குப் போக வேண்டியதை மதுரைக்கும் அனுப்பி வைப்பான்.

மானேஜருக்கு என்னவோ ஆத்திரம் ஆத்திரமாக வரும். ஆனால் அவன் டைரக்டருக்குச் சொந்தக்காரன் என்ற காரணத்தால் அதிகமாக ஒன்றும் சொல்ல முடியாமல் தவிப்பார். மிஞ்சி ஏதாவது கேட்டால் "நீங்கள் சொன்னபடியேதான் எழுதிக் கொண்டு போய் டைப் அடித்தேன். இனிமேல் வேண்டுமானால் ஒவ்வொன்றையும் நீங்களே கைப்பட எழுதிக் கொடுத்துவிடுங்கள் ஸார்!" என்பான். அவர் பல்லைக் கடிப்பார். இவன் வெளியே வந்து முணுமுணுத்துக் கொக்கரித்துக் கொண்டேயிருப்பான்: தோலிருக்கச் சுளை விழுங்கியாயிற்றே அவன்!

பெருச்சாளி: இவர்தான் எங்கள் ஹெட் கிளார்க். ஆபீஸை வீடாகநினைப்பவர்: காலையிலிருந்து மாலை வரையில், தம் வீட்டுக்கு வேண்டிய சாமான்களை வாங்கிவரச் செய்வது, ஜாதகம் பார்ப்பது, தம்முடைய பேரனுக்குப் பிறந்தநாள் கொண்டாட 'பட்ஜெட்' போடுவது, தோட்டத்தில் காய்கறி போட விதை வாங்கிவர ஆள் அனுப்புவது, பசுமாடு அதிகமாகப் பால் கறக்க என்ன தீனி வைப்பதென்று எல்லோரையும் கேட்பது, இவற்றிலேயே பொழுது கழிந்துவிடும். தாம் செய்ய வேண்டிய ஆபீஸ் வேலைகளை மற்றவர்களைக் கொண்டு முடித்துக் கொள்ளுவார். அப்படிச் செய்யப்பட்ட வேலைகளுக்கு மானேஜரிடம் பாராட்டுக் கிடைத்ததென்றால் "ஆஹா, நான் செய்தேன் ஸார்! நான் செய்தேன் ஸார்!" என்று பெருமையடித்துக்கொள்வார்; ஏதாவது தகராறு நேர்ந்து விட்டதோ, "வேலை அதிகமாக இருக்கவே, இந்த நீலகண்டனைக் கொஞ்சம் கவனியடா என்றேன், இப்படிக் குட்டிச்சுவராக்கி விட்டானே ஸார்!" என்று பாடத்தைத் திருப்பிவிடுவார்; பழைய பெருச்சாளியல்லவா அவர்!

இன்னும் எங்கள் ஆபீஸில் சதா 'சிண்டு முடிந்து' கொண்டேயிருக்கும் 'நாரதமுனி', வேலையில் சப்பையானாலும் வாய்ச் சவடாலில் பிரமாதமாக விளங்கும் 'வெத்துவேட்டு', ஆபீஸில் என்ன நடக்கிறது என்றே அறியாமல் 'இதுவா உலகம்' என்றிருக்கும் 'சாமியார்' ஆகிய ஏனைய விசித்திரப் பிரகிருதிகளுக்கும் குறைவே இல்லை!

என்ன கேட்கிறீர்கள்? 'இந்த ஆபீஸில் நீங்கள் யார்?' என்றுதானே!....சரிதான் அதை நான் எதற்காகச் சொல்ல வேண்டும்! நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்!


தாரா — ஜோதி திருமணம்

பாரதத்தின் இரு பெரும் தலைவர்கள் காந்திஜி, ராஜாஜி இவர்களின் பேத்தியான சௌபாக்கியவதி தாராவுக்கும் டாக்டர் ஜோதி பிரஸாத் பட்டாச்சார்யாவுக்கும் இம்மாதம் 4-ம் தேதி புது தில்லியில் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. சென்னையிலிருந்து ராஜாஜி தமது பேத்தியின் திருமணத்துக்குச் சென்று ஆசீர்வதித்தார். பாரதத்தின் உபஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், புது தில்லியிலுள்ள பல மேனாட்டு தூதர்கள் இன்னும் பல பிரமுகர்கள் திருமணத்துக்கு விஜயம் செய்து மணமக்களுக்கு நல்லாசி கூறினர். சென்னையிலிருந்து கல்கி அதிபர் ஸ்ரீ சதாசிவம் அவர்கள் தமது குடும்பத்தாருடன் சென்று இக் கோலாகல வைபவத்தில் கலந்து கொண்டார். ஸ்ரீமதி எம். எஸ். ஊஞ்சல் பாட்டுக்கள் பாடி மணமக்களையும், திருமணத்துக்கு வந்திருந்தவர்களையும் மகிழ்வித்தார். இந்தக் காட்சிகளை எதிர்ப்பக்கத்திலுள்ள படத்தில் காணலாம்

காந்தி மகன் காந்திக்கும், ராஜாஜியின் மகள் ஸ்ரீமதி லக்ஷ்மிக்கும் திருமணம் நடைபெற்றபோது பாரத மக்கள் அனைவரும் தெற்கும் வடக்கும் இணைந்தது என்று பெருமகிழ்ச்சியடைந்தனர். இவர்களுடைய புதல்வி சௌ. தாராவுக்கும் ஸ்ரீ பட்டாச்சார்யா அவர்களுக்கும் இப்போது நடைபெற்ற இந்தத் திருமணத்துக்கு வந்திருந்தவர்கள் மேற்கும் கிழக்கும் இணைந்தது என்று எண்ணிக் குதூகலப்பட்டனர்! வாழ்க, தாரா — ஜோதி பிரஸாத்!


தில்லியில் தாரா-ஜோதி
திருமணம்

மாலவல்லியின் தியாகம்



அத்தியாயம் 13

விதியும் மதியும்

அன்று காலையில் வெளியே சென்ற பூதுகன், அவ்வளவு சீக்கிரம் திரும்பி வந்து விடுவான் என்று வைகைமாலை நினைக்கவில்லை. அவன் அவ்வளவு சீக்கிரம் திரும்பி வந்ததை எண்ணி அவள் திகைப்படைந்ததோடு அவன் முகத்திலும் மிகுந்த வாட்டம் இருந்ததைக் கண்டு திகைப்புற்றாள். அவளுடைய சகோதரி சுதமதி தாழ்வாரத்தில் உட்கார்ந்து வீணை மீட்டிக் கொண்டிருந்தாள். முதல் நாள் இரவு நெடு நேரம் வரையில் கண் விழித்ததால் மிகவும் அசதியோடும் களைப்போடும் மஞ்சத்தில் சாய்ந்திருந்த வைகைமாலை பூதுகனைக் கண்டதும் சட்டென்று எழுந்து, "ஏன் இவ்வளவு சீக்கிரம் வந்து விட்டீர்கள்? ஏதேனும் விசேஷம் உண்டா?" என்று கேட்டாள்.

"நிறைய விசேஷம் உண்டு. ஆனால் எல்லாம் விபரீதமாகவே போய்க் கொண்டிருப்பதால்தான் மனம் மிகவும் வேதனை அடைகிறது. சம்பாதிவனத்திலுள்ள புத்த சேதியத்தில் ஒரு கொலை நடந்திருக்கிறது...." என்று இழுத்தாற்போல் கூறினான்.



''புத்த சேதியத்தில் கொலையா? என்னால் நம்ப முடியவில்லையே?'' என்றாள் வைகைமாலை திகைப்போடு.

யாழை மீட்டிக்கொண்டிருந்த சுதமதி யாழைக் கீழே வைத்துவிட்டு மெதுவாக எழுந்து வந்து, ''புத்த சேதியத்தில் கொலையா? என்ன அநியாயம்? இப்படியும் நடக்குமா? காலம் ரொம்பவும் கெட்டுப் போய் விட்டது! ஏன் நடக்காது? இந்த நாடு சோழ மன்னர்களின் ஆட்சியில் இருந்திருக்குமானால் இப்படிப்பட்ட காரியங்களெல்லாம் நடந்திருக்குமா?...'' என்றாள்.

''சோழ மன்னர்கள் ஆண்டாலா? துளிக்கூட நடக்காது. இப்பூம்புகாரைப் பல்லவ சக்கரவர்த்திக்கு மரியாதையோடு திறை செலுத்திக் கொண்டு களப்ரகுல திலகர்களான மன்னர்கள் அல்லவா ஆளுகிறார்கள்? புத்த சமயத்தைச் சேர்ந்த அம் மன்னர்கள் இப்படித் தான் பௌத்த தருமத்தையும் காப்பாற்றுகிறார்கள்...'' என்றான் பூதுகன்.

திகைப்பிலும் குழப்பத்திலும் இருந்த வைகைமாலை, ''யார் கொலை செய்யப்பட்டார்கள்? யார் கொன்றார்கள்?'' என்று கேட்டாள்.

''புத்த விஹாரத்தில் வேறு யார் வரப் போகிறார்கள்? அங்கு பிக்ஷுக்கள் கூட்டம்தானே அதிகம்? யாரோ ஒரு பிக்ஷு யாரோ ஒரு பிக்ஷுவைக் கத்தியால் குத்திக் கொன்று விட்டான்.....'' என்றான் பூதுகன்.

''வேறு யாராக இருக்கும்? எனக்குத் தெரியும், அந்த பிக்ஷுக்களே எமகாதகர்கள். நான் அவர்களை நம்புவதே இல்லை. அவர்களுடைய கொள்கைகளும் எனக்குப் பிடிப்பதே இல்லை. ஆனால் இவளுக்கு மாத்திரம் நான் எவ்வளவு சொன்னாலும் புரிவதே இல்லை. அந்தப் பிக்ஷுக்களிடமும், பிக்ஷுணிகளிடமும் அசாத்திய பக்தி வைத்திருக்கிறாள். நம் குலத்தில் உதித்த மணிமேகலையும், மாதவியும் அந்த மார்க்கத்தைப் பின்பற்றினார்கள் என்றால் நாமும் அந்த மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டும் என்பது ஏதாவது விதியா? அந்தக் காலத்தில் உலகம் அப்படியிருந்தது. அவர்கள் அந்த மார்க்கத்தைக் கைக் கொண்டார்கள். அன்று சோழ சாம்ராஜ்யம் உலகில் தருமத்தைக் காத்து வந்தது. ஆனால் இன்று அப்படியில்லையே? இந்த நாட்டில் பல சமயங்களைச் சேர்ந்த பல அரசர்கள் ஆளத்தொடங்கியதிலிருந்து, தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரனாகி ஊழல் தானே மிகுந்து கொண்டு போகிறது? புத்த தருமத்தைப் பின்பற்றும் சிரமணர்களுக்கு சாம்ராஜ்ய ஆசையும் இருந்து கொண்டு வருகிறது. சாம்ராஜ்ய ஆசை கொண்ட முரடர்களையும், சூழ்ச்சிக்காரர்களையும் வஞ்சகர்களையும் சுலபமாக மதத்துக்குள் சேர்த்துக் கொண்டு விடுகின்றனர். அவர்களும் தலையை முண்டிதம் செய்து கொண்டு துவராடையைப் போர்த்திக் கொண்டு சிரமணர்கள் என்று சொல்லிக் கொண்டு ஊரில் திரியத் தொடங்கி விடுகின்றனர். இதெல்லாம் வைகைமாலையின் மனத்தில் படவே படாது. புத்த, ஜைன சமயத் தருமங்கள் எல்லாம் - தத்துவங்களெல்லாம் கடல் போன்ற நம்முடைய பிராசீன தருமமான வேத மார்க்கத்தில் இல்லாமல் போகவில்லை. அவைகள் எல்லாம் நம்முடைய மார்க்கத்திலும் அமைந்த சாதாரண தருமங்கள்தான். 'சர்வம் பிரம்மமயம் ஜகத்' 'அன்பே சிவம்' என்ற கொள்கைகளைப் புரிந்து கொண்டு நாம் அதை அனுசரித்தால் போதாதா....?'' என்றாள் சுதமதி ஒரு நீண்ட பிரசங்கத்தைச் செய்து முடித்தவள் போல.



பூதுகன் சுதமதியின் வார்த்தைகள் யாவற்றையும் கேட்டுக் கொண்டு நின்றான். அதற்குள் அவள் தன் பிரசங்கத்தை முடித்துக் கொள்வாள் என அவன் நினைக்கவில்லை. அவனுக்குச் சுதமதியைப் பற்றி நன்கு தெரியும்.



சுதமதியும் வைகைமாலையும் ஒருவரின் மீது ஒருவர் அன்பும் பாசமும் வைத்திருக்கும் சகோதரிகளே தவிர, கொள்கைகளில் மிகவும் நேர்மாறானவர்கள். சுதமதி மிகுந்த சிவ பக்தி உடையவள். பல சாஸ்திரங்களையும் நன்கு படித்தவள். சில விரதங்களைத் தீவிரமாகக் கைக்கொண்டவள்.

தனக்கு அடங்கியவளானாலும் தன்னுடைய தங்கை வைகைமாலையின் கொள்கைகளையோ, அவள் நடைமுறைகளையோ அவள் தடுத்ததில்லை. நெடு நாட்களுக்குப் பிறகு பூதகன் கொண்டு வந்த செய்தியினால் தன் மனத்தில் தோன்றியதைச் சொல்லும்படியான நிர்ப்பந்தம் அன்று சுதமதிக்கு ஏற்பட்டுவிட்டது.

சுதமதியின் வார்த்தையைக் கேட்டு வைகைமாலை மன வருத்தமோ, கோபமோ அடையவில்லை. தன் சகோதரி தன்னுடைய போக்குக்கு இடையூறு செய்யாமல் எந்த அளவுக்குச் சகிப்புத் தன்மை காட்டினாளோ அந்த அளவுக்கு வைகைமாலையும் சகிப்புத் தன்மை காட்டி வந்தாள். தன் சகோதரியின் நோக்கம், அவளுடைய கொள்கை, அன்பு நிறைந்த உள்ளம் எல்லாம் அவளுக்குத் தெரியும். இதன் காரணமாக வைகைமாலைக்குச் சுதமதியின் பேரில் பக்தியும் பாசமும் அதிகமாயிற்றே தவிர, வெறுப்போ பகை உணர்ச்சியோ ஏற்பட்டது கிடையாது.

வைகைமாலை சிரித்துக்கொண்டே, "அக்காவின் வார்த்தைகளிலும் உண்மை இருக்கிறது. ஆனால் என் கவலைகள் எல்லாம் வேறு. நீங்கள் தயவு செய்து எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லுங்கள். புத்த சேதியத்தில் எந்தபிக்ஷு கொல்லப்பட்டார்? அவரை யார் கொன்றார்கள்? நம்முடைய மாலவல்லி அங்குதானே இருக்கிறாள்?" என்று கேள்விகளை அடுக்கினாள்.

"புத்த விஹாரத்தில் கொல்லப்பட்டுக் கிடப்பவர் ரவிதாசர் என்ற பிக்ஷு. மாலவல்லி இந்த மாளிகைக்கு வரும்போது எவர் அவளைப் பின்தொடர்ந்து வந்தாரோ, அவரேதான் கொலை செய்யப்பட்டு ரத்த வெள்ளத்தில் விழுந்து கிடக்கிறார். புத்த பிக்ஷுவாக இருந்த கலங்கமாலரையரையும் காணவில்லை. அவர் காணாமல் போனதற்குரிய காரணம் உனக்குத் தெரியும். ஆனால் மாலவல்லியும் காணாமல் போனதுதான் எனக்குப் பெரிய குழப்பத்தை அளிக்கிறது..." என்று சொன்னான் பூதுகன்.



இதைக் கேட்டதும் வைகைமாலை திடுக்கிட்டு, "மாலவல்லியும் காணவில்லையா? இது என்ன விபரீதம்? அவள் எங்கே போயிருப்பாள்? அவளுக்கும் இந்தக் கொலைக்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா?" என்று கேட்டாள்.

"அதை யார் கண்டார்கள்? நீ குழப்பம் அடைவதிலோ ஆச்சரியப்படுவதிலோ அர்த்தமே இல்லை. இப்படி எது நடந்தாலும் எதிர்பார்க்கக் கூடியதுதான். ஏனென்றால் இது காதல் விஷயம். அதிலும் களவியல் காதல். நான்தான் உன்னிடம் முன்பே சொன்னேனே, பௌத்த பிக்ஷுணிக் கோலம் பூண்டு திரியும் மாலவல்லியின் அந்தரங்க வாழ்க்கையில் ஏதோ ரகசியமான கதை இருக்கிறதென்று..."

வைகைமாலை பிரமை பிடித்தவள் போல் ஒன்றும் தோன்றாதவளாக நின்று கொண்டிருந்தாள். சுதமதியின் முகத்தில் ஒரு ஏளனச் சிரிப்பு எழுந்தது. "எனக்குத் தெரியும், அந்த மாலவல்லியின் நடைமுறை சரியில்லை யென்று. இந்த இளம் வயதில் துறவுக் கோலம் பூண்ட ஒரு பெண் வாழ்க்கையை நேரிய முறையில் நடத்த முடியாதென்று.—புதருக்குள்ளே மல்லிகை மலர் பூத்திருந்தாலும் அதன் மணம் வெளியே பரவி அதைக் காட்டிக் கொடுத்துவிடும்—அதைப் போலத் தன் மனத்தைத் தான் பக்குவப் படுத்திக் கொண்டாலும், நல்லாடைகளையும் ஆபரணங்களையும் துறந்து சீவர ஆடைக்குள் தன் பொன் மேனியைப் புதைத்துக்கொண்டிருந்தாலும் யௌவனமும் அழகும் பிறர் பார்வையில் பட்டு மனத்தைக் கலக்காமல் இருக்காது. இயற்கையாக இந்தப் பருவத்தில் அவளுக்குத் துறவு மனப்பான்மை ஏற்பட்டுவிட்டது என்பதை நான் நம்பவே இல்லை. அப்படி ஏற்பட்டிருக்குமானால் தினமும் தனக்குரிய தருமத்தைப் புறக்கணித்து இரவு வேளையில் இரகசியமாக விஹாரத்தை விட்டுப் புறப்பட்டு இந்த மாளிகைக்கு வரமாட்டாள். அவள் இந்தக் கலையில் தேர்ந்தவள். தினமும் பாட வேண்டும் என்ற துடிப்பால் இங்கு வந்தாள் என்றால் நம்ப முடியாது. புத்த விஹாரத்தில் இருந்துகொண்டே தாராளமாகப் பேரின்பமயமான பாடல்களைப் பாடியிருக்கலாமே! இந்நாட்டில் பிராசீனமாக வந்த வேத உபநிஷத மார்க்கங்களை மறுபடியும் புனருத்தாரணம் செய்ய வேண்டும் என்பதற்காக ஆங்காங்கு பக்தி மார்க்கத்தில் ஈடுபட்ட சைவ நாயன்மார்களும் வைஷ்ணவ ஆழ்வார்களும் இசையில் தேர்ந்தவர்களாய் மனமுருகப் பக்திரசப் பாடல்களைப் பாடி மக்களின் மனத்தை வசீகரித்துக் கொண்டு வருகிறார்கள். ஆங்காங்கு இசையோடு கூடிய நாட்டியம், நாடகம் இவைகளை நடத்தி மக்களுக்குப் புராதன தரும மார்க்கத்தைப் புகட்டி எளிதில் அவர்களைத் தங்கள் மார்க்கத்துக்கு இழுக்கிறார்கள். இந்தப் புதிய வழியை, கலா ஞானத்தோடு கலந்த இந்தப்புதிய பிரசார வழியைக் கண்டு புத்த சமயத்தினரும் அவ்வழியில் செல்ல ஆசைப்படுகின்றனர். இந்தச் சமயத்தில் மாலவல்லியைப் போன்ற இசையில் தேர்ந்த புத்த பிக்ஷுணி ஒருத்தி சங்கத்திலிருப்பதை அவர்கள் பாக்கியமாக எண்ணிப் பயன்படுத்திக் கொள்வார்களே தவிர, அவளுடைய இசை ஞானத்தை முடக்கி


JASMINE
கவர்ச்சியுடன் களிப்பை அளிக்கும்
ஜஸ்மின்
ரேயான் ஸில்க் துணிகள்
ஜஸ்மின் மில்ஸ் பிரைவேட் லிமிடெட், பம்பாய்-2.
JM 54-5A

FZY-38-TAM



Zam-Buk

ஜாம்-பெக் புண்கள், பிளவைச் சிரங்குகள்; விஷக்காயங்கள் இவைகளுக்கு உடனேயே குணம் அளிக்கிறது.

விசேஷ பலனளிக்கும் ஜாம்-பெக் உலகின் மகோன்னதமான சருமக் களிம்பு. ஜாம்-பெக்கின் இதமளிக்கும், கிருமி நாசினி குணங்கள். புண்களிலிருந்து விஷத்தை நீக்குவதுடன், ரணங்களை ஆற்றி, ரத்தம் வராமல் தடுக்கிறது.

ஜாம்-பெக் இதர சரும நோய்களையும் காயங்களையும் ஆற்றுவதில் அற்புத சக்தி வாய்ந்தது.



கொழுப்புச் சத்து சேர்க்கப்படாதது

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

சோல் ஏஜண்டுகள்:

தாதா & கம்பெனி

86, நைனியப்ப நாயக்கன் தெரு

சென்னை - 3

சுலேகா

பவுண்டன் பேனா மை

இப்பொழுது 8 வித கலர்களில் கிடைக்கும்

ராயல்-புளூ, புளூ-பிளாக், கறுப்பு சிவப்பு, நல்ல சிவப்பு, வயலட் பழுப்பு மற்றும் பச்சை



Contains ... "S-50"

சுலேகா ஒர்க்ஸ் லிட்.

கல்கத்தா - டேல்லி - பம்பாய்-சென்னை

நண்பா! ஒரு நல்ல செய்தியைச் சொல்கிறேன். அடிக்கடி எப்ரிலைம் உட்கொள்வதால், அவர் ஆஸ்த்மா உபாதையால் தற்போழுது பீடிப்பதில்லை



EPHRILIME

எப்ரிலைம்

நீண்ட நாள்பட்டதும், மிக்க உபாதை தரக்கூடியதுமான மார்ச்சளி, ஆஸ்த்மா முதலிய நோய்களுக்கு ஓர் சிறந்த ஹானியற்ற மருந்து.

யூனியன் டிரக் கம்பெனி, லிட்.

மதராஸ் டிப்போ:

2, ஜோன்ஸ்லேன் :: மதராஸ் -1

வைத்து, வறண்ட துறவற வாழ்க்கைக் குள்ளேயே அவளை ஈடுபடுத்திப் புழுங்க வைக்க மாட்டார்கள். அப்படி இருக்கையில் அவள் பாடுவதற்காகவே இங்கு இரவு வேளையில் ஒளிந்து மறைந்து வருகிறாள் என்பதை என்னால் நம்பமுடியவில்லை. ஆனால் பாவம்! வைகைமாலை எதை அறிவாள்? அவளுக்கு வெளுத்ததெல்லாம் பால். அதிக உலக அனுபவம் பெறாதவள். எல்லாம் ஒரு நாள் தானே தெரிந்து கொள்வாள் என்றுதான் பேசாமல் இருந்தேன். இன்று எல்லாம் விளங்கி விட்டன'' என்றாள் சுதமதி.

வைகைமாலை எதுவுமே பேசாமல் தலை குனிந்த வண்ணமே மனம் குழம்பியபடி நின்று கொண்டிருந்தாள். அவளுடைய அழகிய முகம் எதிர்பாராத செய்தியைக் கேட்டதனால் கலக்கமும் துயரமும் அடைந்து வாடி இருந்தது.

பூதுகன் சிரித்தான். எப்பொழுதுமே, எதையுமே, பெரிய விபரீதமாகக் கருதி வாட்டமடைந்து, மனத் தளர்ச்சி அடைபவன் அல்ல அவன். இந்த உலகத்தில் எதையுமே சாதாரணமாக மதித்து, மன சந்தோஷத்தைக் குலைத்துக் கொள்ளாமல் ஆனந்தமாக வாழ் நாளைக் கழித்து விடுவதுதான் சுவர்க்கம் என்ற கொள்கையுடையவன் அல்லவா அவன்? தன்னுடைய காதலியின் மன வருத்தத்தையும் குழப்பத்தையும் அறிந்திருந்தும் அவன் மனம் குலையாமல் சிரித்துக் கொண்டிருந்தானென்றால் வியப்படைய என்ன இருக்கிறது!

''அப்படியென்றால் மாலவல்லிக்கும் இந்தக் கொலைக்கும் சம்பந்தம் இருக்கும் என்று சொல்லுகிறீர்களா?'' என்று கேட்டாள் வைகைமாலை.

''நான் அப்படியெல்லாம் ஒரு முடிவுக்கு வர மாட்டேன். நான் இதில் தீர்மானமாக எதுவும் சொல்ல முடியாது. ஆனால் சிலகாரியங்கள் யார் மனத்திலும் சந்தேகத்தை யெழுப்பக் கூடியதாகத்தான் இருக்கின்றன. கொலை நடந்ததும் கலங்கமாலரையரும் மாலவல்லியும் தலை மறைவாய் எங்கோ போய் விட்டது யார் மனத்திலும் சந்தேகத்தை யெழுப்பக் கூடியது தானே? அதோடு மாத்திரமல்ல; புத்த விஹாரத்தில் நடந்த இக்கொலையின் விஷயம் அறிந்ததும் மாலவல்லியின் கதி என்ன ஆயிற்று என்று பார்ப்பதற்காக என்னோடு வந்த வீரவிடங்கனும் திடீரென்று என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் மாயமாய் மறைந்து விட்டான். இதுதான் எனக்கு ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியத்தை அளிக்கிறது. மருவூர்ப்பாக்கத்துக்கு வந்து அங்கு இருக்கும் சாலைகளில் எல்லாம் தேடினேன், காணவில்லை. மருவூர்ப்பாக்கத்துக்கு நான் வந்ததற்குச் சிறிது நேரத்துக்கு முன்னால் ஒரு வீரன் குதிரையின் மீது அமர்ந்து எங்கோ சென்றதாக ஒரு வர்த்தகன் என்னிடம் சொன்னான். சந்தேகமின்றி அவன் வீரவிடங்கன்தான் என்று எனக்கு நிச்சயமாகத் தோன்றிவிட்டது. நிச்சயம் வீரவிடங்கனுக்கு மாலவல்லி எங்கே போயிருக்கிறாள் என்பது தெரியாமல் இருக்காது என்றுதான் நான் நினைக்கிறேன். வைகைமாலா! நீ இதைக் குறித்து வருந்துவதில் எவ்வித லாபமும் இல்லை. அவரவர்கள் தங்கள் வாழ்க்கை சுகத்துக்கு வழி வகுத்துக் கொள்கிறார்கள். அது சுலபமான வழியாகவும் இருக்கலாம்; அபாயகரமான வழியாகவும் இருக்கலாம். மாலவல்லி அவளுடைய யௌவனத்துக்கும் அழகுக்கும் ஏற்றாற்போல் கண்கவரும் கம்பீரமான யௌவன புருஷனைக் காதலனாக அடைந்திருக்கிறாள். இத்தகைய சிறந்த காதலனைப் பெற்றிருக்கும் போது, இத்தகைய தொடர்பு அவளுக்கு இருக்கும் போது, அதற்கு நேர் மாறான பிக்ஷுணி வாழ்க்கையை அவள் ஏன் கைக்கொள்ள வேண்டும்? கங்க நாட்டைச் சேர்ந்த அந்த வாலிபன் காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள புத்த சேதியத்திலுள்ள அவளைச் சந்திப்பதற்காக ஏன் ஓடோடி வரவேண்டும்?'' என்றான் பூதுகன்.

''அப்படியென்றால் அவர்கள் எங்கே போயிருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டாள் வைகைமாலை.

''எனக்கு என்ன தெரியும்? காஞ்சிக்குப் போயிருக்கலாம். கங்கபாடிக்கும் போயிருக்கலாம், வேறு எங்கேயாவது போயிருக்கலாம். ஒன்றும் நாம் இப்பொழுது நிச்சயமாகச் சொல்ல முடியாது. என் மனத்தில் எத்தனையோ சந்தேகங்களெல்லாம் எழுந்து குழம்புகின்றன. உன்னோடு இவ்வளவு அந்தரங்கத்தோடு பழகிய மாலவல்லி உன்னிடம்கூடச் சொல்லாமல் இப்படித் தலைமறைவாகப் போனது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. உன்னிடம் அவள் தன் வாழ்க்கை ரகசியத்தையெல்லாம் மறைத்திருக்கிறாள். ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்ததுபோல் இன்றிரவும் நீ எதிர்பார்க்க முடியாது. அவளுடைய இனிய இசையை நீ எப்பொழுது கேட்கப் போகிறாயோ? அவள் இசையோடு கலந்த உன்னுடைய ஆட்டம் ஊரறியப் பரிமளிக்கா விட்டாலும் மாளிகையினுள்ளே பரிமளித்துக் கொண்டிருந்தது. இதை யெல்லாம்

நினைத்தால் உனக்கு மிகுந்த துயரம் தான் ஏற்படும்....'' என்றான் பூதுகன்.

''எனக்கு ஏற்பட்டுள்ள வருத்தம் வாய்ச் சொல்லில் அடங்காது. அவளுடைய வாழ்க்கையில் இவ்வளவு ரகசியங்கள் புதைந்து கிடக்கும், இப்படியெல்லாம் நேரும் என்று நான் நினைக்கவே இல்லை. ஒன்றுக்குப் பின் ஒன்றாக எல்லாம் ஆச்சரியத்தைத்தான் அளிக்கின்றன. நீங்கள் என்ன சொன்னாலும் அவளுக்கு ஏதேனும் அபாயம் நேர்ந்திருக்குமோ என்று நான் அஞ்சுகிறேன். அவள் புத்த பிக்ஷுணிக் கோலம் பூண்டு தன்னை மறைத்து வாழ வழி ஏற்பட்டிருந்தாலும், இத்தகைய கொடூரமான காரியங்களைச் செய்வதற்காக இத்தகைய கோலங்களை அவள் கொண்டிருப்பாள் என்பதை நான் நம்ப மாட்டேன்.



அவள் மிகவும் அடக்கமானவள், அன்புருவானவள். ஏதோ விதிதான் அவளை இப்படியெல்லாம் ஆட்டி வைக்கிறது'' என்றாள் வைகைமாலை.

'விதி' என்ற வார்த்தையைக் கேட்டதும் பூதுகன் சிரித்தான். ''விதி, விதி என்று தனியாக ஒரு கற்பனையை வளர்த்துப்பெரிய ஞானவான்கள் கூடத் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளும்போது, பாவம்! பேதைப் பெண் நீ, விதியைப் பற்றி நிறையப் பேச மாட்டாயா? தனியாக விதியொன்று இருந்து ஆட்டுவதாக நாம் நினைப்பதே தவறு. மாலவல்லிக்குத் தான் புத்த விஹாரத்திலிருந்து மறைய வேண்டுமென்று அவளுடைய புத்திக்குத் தோன்றியதாகஇருக்கலாம். அல்லது வேறொருவருடைய புத்திக்குத் தோன்றிய விஷயமாக இருக்கலாம். ஆகையால் இதையெல்லாம் விதி என்று சொல்லாமல் புத்தியால் யோசித்து முடிவு செய்த விஷயமாக நினைக்கிறேன்'' என்றான்.

வைகைமாலை ஏதோ பதில் சொல்ல நினைத்தாள். ஆனால் அதற்குள் அவளுடைய சகோதரி சுதமதி சிறிது ஆத்திரம் நிறைந்த குரலில், ''நீங்கள் மிகவும் புத்திசாலி, மிகவும் கெட்டிக்காரர். ஆனால் உங்கள் கொள்கைதான் எனக்குப் பிடிக்க வில்லை. நம்முடைய புத்திக்கும் சக்திக்கும் மீறிய சக்தியொன்று இருந்துதான் நம்மை யெல்லாம் ஆட்டி வைக்கிறது என்றுதான் நான் கூறுகிறேன். இதெல்லாம் நம் முன்னோர்கள் கண்ட உண்மை. இதை நீங்கள் மறுத்துக்கூற முடியாது'' என்றாள்.

பூதுகன் எப்பொழுதும் போல் ஒரு சிரிப்பு சிரித்தான். ''நம்முடைய சக்திக்கும் மீறிய சக்தி யொன்று இருக்கிறது என்பதும் நம்முடைய புத்திக்குத்தானே படுகிறது'' என்றான்.

''நீங்கள் சொல்லுகிறபடி தங்களுடைய புத்தியாலும் சக்தியாலுமே தங்கள் புத்திக்கும் சக்திக்கும் எட்டாத ஒரு பொருளைக் கண்டு பிடித்தார்கள் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அவர்கள் கண்டு பிடித்த உண்மைகளை நீங்கள் மறுக்க முடியாதல்லவா?'' என்றாள் சுதமதி.

''மறுக்க முடியாதா? அதைத்தானே நான் மறுத்துக் கொண்டு வருகிறேன். அவர்கள் முயற்சியில் கண்ட பொருளை, சொல்லத்தான் நாம் தெரிந்து கொள்ள முடிகிறதே தவிர அவர்கள் கண்ட பொருளை நாம் காண முடிவதில்லை அல்லவா? நமக்கும் அவர்களால் காட்ட முடியவில்லை அல்லவா?''

இதற்குத் தக்க பதில் சொல்லச் சுதமதி முயற்சித்தாள். ஆனால் அதற்குள் யாரோ, ''சுவாமி'' என்று கூப்பிடும் குரல் கேட்கவே அவர்கள் கவனம் எல்லாம் வாயிற்பக்கம் சென்றது.

பூதுகன் வெளியில் சென்று அங்கு வந்திருந்த ஒரு மனிதரிடம் ஏதோ சில விநாடிகள் பேசிக் கொண்டிருந்துவிட்டு அவசரம் அவசரமாக உள்ளே வந்து, ''வைகைமாலா! நான் அவசரமாக வெளியூர் செல்ல வேண்டி இருக்கிறது. நான் எங்கே போகிறேன் என்பதை முடிவாகச் சொல்ல முடியாது. எப்பொழுது திரும்புவேன் என்றும் சொல்ல முடியாது. ஆனால் எங்கும் நான் தங்கிவிட மாட்டேன். ஏனென்றால் எதைச் சகித்துக் கொண்டாலும் உன் பிரிவாற்றாமையை என்னால் சகித்துக் கொண்டிருக்க முடியாது, நீ கவலைப்படாதே. உன் தோழி எங்கே இருக்கிறாள், எப்படி இருக்கிறாள் என்பதையெல்லாம் கண்டு பிடித்துத் தெரிந்து கொண்டு உன்னிடம் வந்து சொல்ல வேண்டியது என் பொறுப்பு'' என்று சொல்லி வைகைமாலையை அன்புறத் தழுவி விடைபெற்றுக் கொண்டான். (தொடரும்)

உங்கள் கேசத்தை அதிக கருமையுடனும் பகட்டுடனும் வைக்க குளிர்ச்சியான வெண்ணிற ப்ரில்க்ரீம் உபயோகியுங்கள்



[illegible]



* ப்ரில்க்ரீமின் சுத்தமான க்ரீமாக்கப்பட்ட எண்ணைகள் உங்கள் கேசத்தின் இயற்கை கருமை நிறத்தை சேமிக்கச் செய்கின்றன. சுத்தமான வெண்ணிற ப்ரில்க்ரீமை உங்கள் தலையில் தினந்தோறும் அழுத்தித் தேயுங்கள். பொடுகுகள் ஏற்படுவதை இது தடுத்து உங்கள் கேசத்தை சுத்தமாயும் ஆரோக்கியத் திடனும் வைக்கிறது.

* சிறிதளவு ப்ரில்க்ரீம் நீடித்த உபயோகத்திற்கு வருகிறது! இன்றே ஒரு ப்ரில்க்ரீம் ஜாடியை வாங்கி எவ்வளவு காலம் அது நீடித்த உபயோகத்திற்கு வருகிறதென்று பாருங்கள்.

வாழ்க்கையில் வெற்றிபெற்றவர்கள்

ப்ரில்க்ரீம் BRYLCREEM

உபயோகிக்கிறார்கள்



தேவியின் கடிதம்

உல்லாசப் பிரயாணம்

— வசுமதி ராமசாமி

அன்புக்குரிய சுஜாதா,

உன் கடிதத்தில், குழந்தைகளுக்குப் பரீட்சை முடிந்ததும் உல்லாசப் பிரயாணம் புறப்படுவதாக எழுதியிருக்கிறாய். அதற்கு மிகவும் சந்தோஷப் படுகிறேன்.

கோடை விடுமுறைகளில் மலைப் பிரதேசங்களுக்குப் போய் இருப்பது ஒன்று; அநேக ஊர்களைச் சுற்றிப் பார்ப்பது மற்றொன்று.

மேல் நாடுகளுக்குச் சென்று திரும்பிய ஒரு சகோதரி அங்குள்ள அதிசயங்களைப் பற்றி எவ்வளவோ சொன்னாள். அவைகளில் முக்கியமாக, பிரயாணங்களை அவர்கள் விரும்புவதையும், சந்தோஷமாக அனுபவிப்பதையும் அழகாகச் சொன்னார்.

நம் நாட்டில் ஐம்பது வயது ஆகிவிட்டால் கண் பார்வையும் சரியாகத் தெரிவதில்லை. அவர்களைத் தனியாக ஓரிடத்துக்கு அனுப்ப நாம் பயப்படுகிறோம். இன்னும் சற்று அதிக வயதாகும் கிழங்களுக்கு 'என்ன ஆசை, போட்டதைச் சாப்பிட்டு விட்டு இருக்கக் கூடாதோ!' என்றெல்லாம் வெறுத்துக் கொள்ளுகிறோம். அந்த நாட்டில் வயோதிகர்கள் தனியாகப் பிரயாணம் செய்வதற்கு மிகவும் ஆசைப்படுகிறார்கள். குடும்பத்திலுள்ள மற்றவர்கள் அவர்களைத் தடை செய்யாதது மட்டுமல்ல, வேண்டிய வசதிகளும் செய்து கொடுக்கிறார்கள். கிழவிகள் தனியாகப் பிரயாணம் செய்து அளவுகடந்து சந்தோஷப் படுகிறார்கள்.

எல்லா வயதினர்களுக்கும் அங்கே உல்லாசப் பிரயாணம் செய்வது வாழ்க்கையில் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. மாணவ மாணவிகள் வருஷம் பூராவும் தங்களுக்குக் கிடைக்கும் தொகையில் சிறிது சேர்த்து வைத்துக் கொள்கிறார்கள். அதை உல்லாசப் பிரயாணத்துக்கு உபயோகிக்கிறார்கள். பழைய மாணவர்கள் தினக் கொண்டாட்டமென ஒன்று நடைபெற்றால் அதற்கு அநேகமைல்களுக்கு அப்பாலிருந்து கூடப் பிரயாணம் செய்து வருவார்கள்.

வேலை பார்க்கிறவர்களும் அப்படியே பிரயாணத்துக்கெனச் சேமிக்கிறார்கள். உல்லாசப் பிரயாணத்தின் நினைவே அவர்களுக்கு வேலை செய்ய உற்சாகத்தைக் கொடுக்கிறது.

நம்மைவிடக் குழந்தைகளுக்குப் பிரயாணத்தில் ஆசை அதிகம். கவலையற்ற அந்த உள்ளத்தில் இயற்கை அழகு பதிந்து விடுகிறது. நம்மிடையே வெளியூர் போவதைச் சிலர் விரும்புவதே இல்லை. அவர்களுக்குப் போக நேர்ந்தால் அலைச்சலாகத் தோன்றிச் சிரமம் உண்டாகிறது.

ஒரு சமயம் நான் தெற்கே உள்ள பாடல்பெற்ற ஸ்தலங்களைத் தரிசனம் செய்யக் குடும்பத்துடன் போயிருந்தேன். நடுவில் ஒரு ஊரில் மற்றொரு குடும்பத்தினர் எங்கள் வண்டியில் ஏற வந்தார்கள். அவர்களுடைய சாமான்கள் வந்து கொண்டே இருந்தன; வண்டி முழுதும் பெட்டிகள், கூடைகள், மூட்டைகளுமாக நிரம்பி விட்டன. அவர்கள் உட்காரக்கூட இடமில்லை. மாற்றலாகி வருகிறார்கள் போலுமென நினைத்தேன். பிறகு அவர்கள் விடுமுறைக்காகப் பல ஊர்கள் சுற்ற வருகிறார்களென அறிந்தேன். அவர்கள் பேசுவதிலிருந்து அவ்வளவு சாமான்களும் தேவையாக இருக்கின்றனவென்றும், ஆனால் எல்லா ஊர்களிலும் அவைகளை ஏற்றி இறக்கப் பாடுபட்டதையும் மூட்டை தூக்கிகளுக்கு அதிகம் கொடுத்த கூலியைப் பற்றியுமே பேசினார்கள். பிரயாணத்திலுள்ள சந்தோஷமான அநுபவம் அவர்கள் பேச்சில் இடம் பெறவில்லை.

அதிக சாமான்களைக் கட்டித் தூக்குவது பிரயாண சந்தோஷத்தைக் குறைக்கும். பிரயாணங்களுக்கெனச் சில இலேசான பைகளோ, பெட்டிகளோ, பார்ப்பதற்கு அழகாகவும், எளிமையாகவும் வைத்துக் கொள்வது சிறந்ததல்லவா? சமயம் நேர்ந்தால் நாமே தூக்கிக் கொண்டுகூட போகலாம். வீட்டிலிருப்பதைப் போல் அவ்வளவு வசதிகளையும் பிரயாணத்தில் வைத்துக் கொள்வதில் சந்தோஷத்துக்குப் பதில் கஷ்டமாகத்தான் முடியும்.

அடுத்தபடியாக ஓரளவு பொறுமை இருந்தால் பிரயாணத்தை ரசிக்க முடியும். சில்லறை விஷயங்களுக்கு எல்லாம் கோபம் அடைகிறவர்களுக்கும் பிரயாணம் இன்பத்தைக் கொடுக்காது.

நாம் மற்றவர்களுடன் பிரயாணம் செய்தால் ஒத்துப் போகத் தெரிந்து கொள்ள வேண்டும். சுயநலமாக நம்முடைய பெட்டி படுக்கையை மட்டும் பார்த்துக் கொண்டு தனிப்பட்டுப் போனால் நம்மை அழைத்துப் போனவர்களுக்குப் பிடிக்காது. அவர்கள் வேலைகளையும், சாமான்களையும் சேர்த்துப் பார்ப்பதுதான் தன்மையாக இருக்கும். சிலர் தங்கள் சாமான்களைக் கூடக் கவனிக்காமல் இருக்கிறார்கள். அது ரொம்பவும் தவறு.

பிரயாணங்கள் வாழ்க்கையில் சந்தோஷகரமான அநுபவம். நம்மிடம் அன்பு கொண்டவர்கள், நம் அன்புக்குப் பாத்திரமானவர்களுடன் பிரயாணம் செய்வது அரிய வாய்ப்பு.

இப்படிக்கு, பூமாதேவி.

பாருங்கள்!

சொத்தையைத் தடுக்க விசேஷ பாதுகாப்பு*



கோலினஸ் ஸூப்பர்-வொய்ட்

டூத்பேஸ்ட்

உங்கள் நகையழகைப் பாதுகாக்கும்

* 'கோலினஸ் ஸூப்பர்-வொய்ட்' டூத்பேஸ்ட் (படத்தில் வெள்ளை பாகம்) சொத்தைக்குக் காரணமான கிருமிகளைத் (கருப்பு பாகம்) தடுக்கிறது (சாம்பல்நிற வட்டம்) என விஞ்ஞான பரீட்சை K. 42 நிரூபித்துள்ளது.


பெப்பர்மின்டின் குளுமை வாய்ந்த இனிய சுவையை அனுபவியுங்கள்!



பாருங்கள்! பிடிப்பதற்கு சௌகரியமான பிரத்தியேகவித மூடி

GK 4776 (A)

ஜெப்ரி மானெர்ஸ் அண்ட் கோ., பிரைவேட் லிமிடெட்



பங்குனி மாதத்துப் பூர்ணிமை நிலா. மாம்பூவின் மணம் ஏந்தி மெல்லிய தென்றல் வீசிக் கொண்டிருந்தது. குளத்தங்கரையில் ஒரு பழைய லிக மரத்தின் தளிர்க் குலைக்குள்ளிருந்து துஞ்சாது பிரிவினால் துடிக்கும் ஒரு 'பாபியா' புள்ளின் இசைக் குரல் முகர்ஜியின் தோட்டத்தைக் கடந்து கண்துயிலின்றி இருவர் குலவும் பள்ளியறைக்குள் நுழைந்தது. ஹேமந்தன் காதல் மேலிட்டால் தன் மனைவியின் கூந்தல் பின்னலை

தியாகம்

ரவீந்திரநாத் தாகூர்

அவிழ்த்து விரலால் கோதி விளையாடிக் கொண்டிருந்தான். வளையல்கள் சலுங் சலுங்கென்று ஓசை பெற அவளுடைய கைகளைத் தூக்கிக் குலுக்கினான். அவள் தலையில் சூடிக் கொண்டிருந்த மலர்ப் பிணையலை எடுத்து அவள் முகத்தோடு பொருத்தி வைத்தான். மாலைப் பொழுதினில் இணர் மலிந்த பூஞ்செடியைத் தண்ணிய காற்று அலைப்புவது போல் இருந்தது ஹேமந்தனுடைய இந்தக் காதல் கேளிக்கை.

ஆனால் குஸுமம், எதிரே நிலா வெள்ளம் பாயும் வானத்தையே இமை கொட்டாமல் நோக்கிக்கொண்டிருந்தாள். மெய் தொட்டுக் கணவன் புரியும் இந்தச் சரசம் அவளுக்குச் சிறிதும் தென்பை மூட்டவில்லை. கடைசியில் ஹேமந்தன் சற்றுத் தயக்கத்துடனேயே குஸுமின் இரு கைகளையும் பிடித்து, அசைத்து, ''குஸுமம், உன் மனம் இங்கு இராமல் எங்கோ பறந்து போயிருக்கிறது....எந்த தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலம் அதை நான்

கண்டு பிடிப்பது? என்னை விட்டு நெடுந் தொலைவு உன் மனப்புள் போய் விட்டதோ? இன்னும் சற்று நெருங்கி என் அருகில் வா நீ...என்ன அற்புதமான நிலவு பொழியும் இரவு இன்று'' என்றான்.

குஸும் எங்கோ நிலைத்திருந்த தன் நினைவைத் திருப்பி, கணவன் முகத்தையே ஊடுருவி, ''இந்த நிலா, இந்த வசந்த காலம் எல்லாம் ஒரே நொடியில் பொய்யாக மாறிப் போவதற்கு ஒரு மந்திரம் எனக்குத் தெரியும்'' என்றாள்.


''தெரியாதா, அதை நீ உச்சரித்துப் பயனில்லை. இதற்கு மாறாக ஒரு வாரத்தில் மூன்று ஞாயிற்றுக்கிழமைகள் வருவதற்கும் இராப்பொழுது சீக்கிரம் விடியாமலிருப்பதற்கும் ஏதாவது மந்திரம் இருந்தால் அதைச் சொல்லு'' என்று குஸுமை இன்னும் தன்னிடம் அணைத்துக் கொண்டான் ஹேமந்தன்.

குஸும் அந்த அணைப்பின் பாசத்திலிருந்து தன்னைத் தளர்த்திக் கொண்டு, ''நான் சாகும் போது உங்களிடம் வெளியிட இருக்கும் ஒரு விஷயத்தை இன்றே தெரிந்து கொள்ள ஆவலா? எனக்கு எந்த மாதிரி தண்டனை விதித்தாலும் நான் சகித்துக் கொள்வேன்'' என்றாள்.

காதலுக்குரிய தண்டனையைச் சுவைபட விளக்குவதற்கு ஜயதேவரின் பாட்டொன்றை ஹேமந்தன் மெல்லப் பாடினான். அதே சமயம் யாரோ ஓசைபடக் காலடி வைத்து வருவது கேட்டது. ஹேமந்தனின் தந்தை ஹரிஹர முகோபாத்யாயர்தான். ஹேமந்தன் திடுக்கிட்டு எழுந்தான்.

ஹரிஹரர் அறையின் வாசல்படியில் நின்று கடுங்குரல் எடுத்து, ''ஹேமந்தா! உன் மனைவியை முதலில் வெளியே தள்ளுகிறாயா இல்லையா?'' என்றார்.

ஹேமந்தன் குஸுமின் முகத்தையே நோக்கினான். வியப்போ அச்சமோ இவற்றின் குறி துளியேனும் அவள் முகத்தில் படரவில்லை. தன் இரு கைகளுக்குள் முகத்தைப் புதைத்து முழு திடத்துடனும், முழு விருப்புடனும் தான் அப்படியே தரையோடு தரையாகமறைந்து போய்விட வேண்டுமெனத் துடித்தாள். பூந்தென்றலில் மிதந்து வரும் புட்குரல் அறையினுள்ளே பரவியது.



ஆனால் அது எவர் செவியிலும் புகவில்லை. சற்று முன் அழகு நிறைந்ததாகத் தோன்றிய உலகு இப்படித் திடுமென்று விகாரமாக மாறிப் போவதுண்டோ?

*

ஹேமந்தன் வெளியே சென்று திரும்பியதும், மனைவியைப் பார்த்து, "நிசந்தானா?" என்று கேட்டான்.

"நிசமே" என்றாள் குஸூம்.

"இத்தனை நாள் ஏன் சொல்லவில்லை?"

"சொல்லிவிட வேண்டுமெனப் பலமுறை முயன்றேன்....ஆனால் முடியவில்லை....நான் ஒரு பாவி...."

"இப்போதாவது எதையும் ஒளிக்காமல் சொல்லி விடு."

குஸூம் ஆழ்ந்த குரலில், அதில் திடம் தொனிக்க உடைத்துக் கூறி விட்டாள், சிறிதும் கூசாமல் ஒரு நெருப்புக் குழியில் நடந்து செல்வது போல். எந்தவிதமாக அவள் தீய்ந்து போகவில்லை என்பது யாருக்குமே தெரியாது. ஹேமந்தன் முழுவதையும் கேட்டு விட்டு எழுந்தான்.

குஸூம் அறிவாள், கணவர் போய் விட்டால் திரும்பி வரமாட்டாரென்று. ஆனால் இது அவளுக்கு வியப்பாகவே இல்லை. மற்ற நிகழ்ச்சிகளைப் போல் இதுவும் ஒன்றென்ற பாவனையே அவளுக்கு. எதிலும் அவளுக்குப் பற்று ஏற்படவில்லை. பாழ் நிலம் போல் அவள் உள்ளம் வறண்டு விட்டது. இந்த உலகம் காதல் யாவும் மாயங்கள், பொய் யென்று அவளுக்குத் தோன்றி விட்டது. ஹேமந்தனுடன் அவள் கொஞ்சிக் குலாவிய நாட்களின் நினைவு மனத்துள் எழும்போது சுவையற்ற தென்பிராத சிரிப்பே வந்தது அவளுக்கு. கூரிய கத்திபோல் அது, அவள் உள்ளத்தை மூலைக்கு மூலை கிழித்து ஆறாத புண்ணைத் தந்தது. அவள் சிந்திக்கலானாள்:

'இந்தக் காதலில்தான் என்ன ஆழம், என்ன இன்பம், என்ன மென்மை! பிரிவு சிறிது நேர்ந்தாலும் வேதனை என் இதயத்தைப் பிழிந்துவிடுமே..மீண்டும் கூடும்போது என்ன உவகை..இந்தக் காதல் எல்லையற்றது. அழியாதது.... பல பிறப்புக்களிடையே தொடர்ந்து வரும் நெஞ்சில் பின்னிய இந் நட்பு நீங்காது என்று நினைத்தேன்..காதலா இது? இதை நம்பி இத்தனை நாட்கள் வாழ்ந்தேனே....சமூகம் ஓர் அடி கொடுத்ததும் இந்தக் காதல் கோட்டை தகர்ந்து தரை மட்டமாயிற்றே. ஹேமந்தன் சற்றுமுன்னர் தான் காதலின் குதுகுதுப்புடன் என் காதோடு 'என்ன அழகிய இரவு' என்று உரைத்தான். அந்த இரவு இன்னும் முடியவில்லை. அதே புள்ளின் தீங்குரல் வருகிறது. குளிர் தென்றலில் கட்டிலின் மீதுள்ள கொசுவலை அசைந்தாடுகிறது. நிலா, இன்பத்தால் களைத்துப்போன அழகியைப் போல் சாளரத்தின் அருகிலுள்ள மெல்லணை மீது படிந்திருந்தது. இவ்வளவு இருந்தும் எல்லாம் பொய்யாகி மாயமாய் மறைந்து விட்டனவே? காதல் என்பது என்னைக் காட்டிலும் பொய் நிரம்பியது, பொய் நடத்தை உடையது.'



*

மறுநாள் விடியற்காலையில் தூக்கம் இழந்த ஹேமந்தன் வெறி மூண்டவன் போல் பியாரி சங்கர் கோஷாலின் வீட்டுக்குப் போனான். பியாரி சங்கர் அவன் வரும் கோலத்தைப் பார்த்து, "என்ன அப்பா! சமாசாரம் என்ன?" என்று கேட்டார்.

ஹேமந்தன் தீக்கொழுந்தென வெம்மை தெறிக்கத் தெறிக்க, "எங்கள் குலத்தைக் கெடுத்து விட்டாயே..அடியோடு பாழாக்கி விட்டாயே. இதற்கு ஏற்றது அனுபவிப்பாய்" என்றதும் அவன் குரல் மெதுவாக அடைத்து வரத்தொடங்கியது.

பியாரி சங்கர் மெல்லச் சிரித்து, "என்னுடைய குல கௌரவத்தை நீங்கள் காப்பாற்றினீர்கள்..என் மனசைக் குளிரச் செய்தீர்கள்! என்ன அன்பு, என்ன பெருந்தன்மையான காரியம்!" என்றார்.

அச்சமயம் ஹேமந்தனுக்கு மூண்ட கோபம், பியாரி சங்கரைத் தன் பிரும்ம தேஜஸினால் அப்படியே சாம்பலாக்கி விட வேண்டுமென்றிருந்தது. ஆனால் அந்தக் கனலில் அவனே பொசுங்கலானான். இந்த பிராம்மண சாபத்துக்கெல்லாம் அசையாமல் பியாரி சங்கர் தம் முழு உடலுடன் என்றும் போல் விளங்கினார்!

"உங்களுக்கு என்ன தீங்கு செய்தோம்?" என்றான் ஹேமந்தன் குரல் தடுமாற.

"நான் கேட்கிறேன்; எனக்கு ஒரே பெண்; அவளைத் தவிர வேறு சந்ததி இல்லை. அந்தக் குழந்தை உன் அப்பாவுக்கு என்ன தீங்கு செய்தாள் சொல்லு.. நீ பையனாக இருந்தால் உனக்கு அந்த விஷயமெல்லாம் தெரியாது. நடந்ததைச் சற்று நிதானமாக மனம் கொடுத்துக் கேள்! துள்ளாதே, அப்பனே! இதில் எவ்வளவு வேடிக்கையான விஷயம் இருக்கிறது!" என்றார்.

"என் மாப்பிள்ளை நவகாந்தன், என் பெண்ணின் நகைகளைத் திருடிக் கொண்டு சீமைக்குப் போனான். அப்போது நீ சிறுவன். ஐந்து வருஷங்கள் கழித்து அவன் பாரிஸ்டராக நாடு திரும்பினான். அப்போது ஊரில் ஒரே கிளர்ச்சி மூண்டது. உனக்கு அதெல்லாம் ஞாபகம் இருக்காது. ஒரு வேளை நீ கல்கத்தாவில் படித்துக் கொண்டிருந்தாயோ என்னவோ.. உன் தகப்பனார் ஊரிலே சமூகத்தின் கர்த்தா. நான் என் பெண்ணை மாப்பிள்ளையுடன்

அனுப்பினால் அவனைச் சாதியை விட்டுத் தள்ளிவிட வேண்டுமெனச் சொன்னார். அவருடைய கை காலைப் பிடித்துக் கொண்டு, 'அண்ணா! இந்த ஒரு தடவை மட்டும் மன்னித்து விடுங்கள். என் மாப்பிள்ளையைப் பஞ்ச கவ்யம் உட்கொள்ளச் சொல்லி, பிராயச்சித்தம் செய்து வைத்து விடுகிறேன். அவனைச் சாதியில் சேர்த்துக் கொள்ள வேண்டும்' என்று கெஞ்சினேன். உன் அப்பா ஒரே பிடிவாதமாக நின்றார். என் ஒரே மகளைத் துறக்க என்னால் முடியவில்லை. சாதிக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டுக் கல்கத்தாவுக்கு வந்து குடித்தனம் வைத்தேன். இங்கே வந்தும் என்னைப் பிடித்த சனி விடவில்லை. என் தம்பியின் பிள்ளைக்கு ஒரு நல்ல இடத்துப் பெண்ணை மணந்து கொள்ள ஏற்பாடெல்லாம் ஆகிவிட்டது. உன் தகப்பனார் பெண் வீட்டாரிடம் கலகம் செய்து அந்தக் கலியாணத்தைக் கெடுத்தார். 'இதற்குப் பழி வாங்காமல் இருந்தால் நான் பிராம்மணனுக்குப் பிறந்தவனன்று'—இவ்வாறு அப்போது நான் சபதம் கூறினேன். இப்போது உனக்கு விஷயம் கொஞ்சம் புரிந்திருக்குமென்று நினைக்கிறேன். சற்றுப் பொறுமையாகக் கேள். முழுவதையும் கேட்டால் நீ சந்தோஷப்படுவாய். மிகவும் ரசமான விஷயம்.

''நீ காலேஜில் சேர்ந்து படிக்கும்போது உன் விடுதியைச் சேர்ந்தாற் போல் விப்ரதாஸ் சட்டர்ஜியின் வீடு. அப்பாவி மனுஷ்யர்..இப்போது அவர் இவ்வுலகில் இல்லை. அவர் வீட்டில்தான் குஸும் இருந்தாள். மணமான புதிதிலேயே கணவனை இழந்தவள். இளம் விதவை..திக்கற்றவள். காயஸ்த குலம்..சட்டர்ஜி....குடும்பத்தை அண்டி வாழ்ந்தாள். பெண் நிரம்ப அழகி. அந்தக் கிழப் பிராம்மணன் காலேஜ் பையன்களின் கண்ணில் படாமல் அந்தக் கனியான பெண்ணை எவ்வளவு கட்டுக்காவலுடன் பார்த்துக் கொண்டார், தெரியுமா? ஆனால் அந்த மனுஷ்யனை ஏமாற்றுவதற்கு ஓர் யுவதிக்கு எத்தனை நாழிகை பிடிக்கும்? மாடியில் ஈரத் துணிகளை வெயிலில் போட வருவாள். அப்போது நீயும் படிக்க உன் விடுதியின் மாடிக்கு வருவாய். நீங்கள் இருவரும் அளவளாவுவதை எப்படியோ கிழம் தெரிந்து கொண்டு விட்டது. வரவர வீட்டு வேலைகளில் அந்தப் பெண்ணுக்கு மனம் ஊன்றுவதில்லை. தவமிருக்கும் உமையவள் போல நாளுக்கு நாள் மெலிந்து வந்தாள். இரவில் ஏதோ வேதனையினால் படுக்கையில் தூக்கமிராமல் புரளுவாள். ஒவ்வொரு சமயம் பெரியவர்கள் எதிரில் வெடித்து வரும் கண்ணீரை மறைக்க முடியாமல் விக்கி விக்கி அழுது விடுவாள். கடைசியில் மொட்டை மாடியில் நீங்கள் இருவரும் புரியும் இந்தக் களவைக் கண்டுபிடித்து விட்டார். காலேஜுக்குப் போகாமல் பகல் வேளையில் மாடிக் குச்சின் நிழலில் நீ படிப்பது போல் பாசாங்கு செய்வதும் அவருக்குத் தெரிந்து போயிற்று. விப்ரதாஸ் என்னிடம் இதைப் பற்றி யோசனை கேட்க வந்தார். 'மாமா! நீங்களும் வெகு நாட்களாகக் காசிக்குப் போக வேண்டும், போக வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அந்தப் பெண்ணை என் வசம் ஒப்புவித்து விட்டு, நிம்மதியாகப் போய் வாருங்கள்.. அவளை நான் கவனமாகப் பார்த்துக் கொள்கிறேன்' என்று சொன்னேன்.

''விப்ரதாஸ் யாத்திரைக்குப் புறப்பட்டார். நான் குஸுமை ஸ்ரீபதி சட்டர்ஜி என்ற என் நண்பர் வீட்டில்விட்டு அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணாகவே அவளை யாரும் நம்புமாறு செய்தேன். இதை யெல்லாம் மனம் விட்டு உன்னிடம் பேசுவது எனக்கு எவ்வளவு ஆறுதலாக இருக்கிறது, தெரியுமோ? கதைபோல் அல்லவா இருக்கிறது இந்தச் சமாசாரம்? ஒரு நாவலே எழுதி விடலாம். எனக்கு எழுதத் தெரியாததலால்,— என் தம்பியின் பிள்ளை பத்திரிகைகளுக்கு எழுதுகிறான்; அவனை விட்டாவது இந்த அதிசயக் கதையை, ஆனால் உண்மைக் கதையை, வெளியிட வேண்டும். ஏதோ நீயும் நானும் ஒருவரை யொருவர் அறிந்து கொண்டிருப்பதால் நல்லதாயிற்று; கதையின் முடிவு எப்படி இருக்குமென்று எனக்கு நன்றாகத் தெரியுமாதலால், அதைப்பற்றி நான் அதிகமாக விசனப்பட வில்லை.''

ஹேமந்தன் பியாரிசங்கர் கடைசியாகச் சொன்னதைக் காதில் போட்டுக் கொள்ளாமல், ''குஸும் இந்த விவாகத்துக்கு யாதொரு ஆட்சேபணையும் தெரிவிக்க வில்லையா?'' என்று ஆவேசத்துடன் கேட்டான்.

''இதில் அவளுக்கு என்ன ஆட்சேபணை இருக்கப் போகிறது? அதைச் சொல்வது சற்றுக் கடினம். பெண்மனம் அவள் 'உஹும்' என்று சொன்னால் 'ஆம்' என்ற அர்த்தம்தான் அதற்கு. அவள் புது இடத்துக்கு வந்த சில நாட்களுக்கெல்லாம் உன்னைக் காணத் தவி தவி யென்று தவித்தாள். நீயும் எப்படியோ மோப்பம் பிடித்துக் கொண்டு அவள் இருக்



கும் இடத்தைக் கண்டு கொண்டாய். எப்போதும் புத்தகமும் கையுமாக காலேஜை நோக்கிச் செல்லும் நீ ஸ்ரீபதிபாபுவின் வீட்டுக்கு எதிரே வட்டமிட்டுக் கொண்டிருப்பாய். காலேஜுக்குப் போகும் வழி தப்பிவிடும். அவர் வீட்டு ஜன்னல் வழியாக உள்ளே புகக் கூடியவை இரண்டே. வண்ணத்துப் பூச்சியும், இளைஞரின் உள்ளமுமே. எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது. உன் படிப்பும் கெட்டு வந்தது; அந்தப் பெண்ணின் உடல் நிலையும் மோசமாகி வந்தது.

"ஒரு நாள் குஸுமைக் கூப்பிட்டு ஆந்தரிகமாகக் கேட்டேன், 'குழந்தாய்..நான் வயதானவன்..என்னிடத்தில் நீ வெட்கப்பட வேண்டிய அவசியமில்லை. உன் உள்ளம் கவர்ந்த கள்வன் யாரென்பது எனக்குத் தெரியும்..நீங்கள் இருவரும் இன்புற்றிருக்க வேண்டுமென்பதே என் அவாவும்.' இதைக் கேட்டவுடன் குஸும் வாய் விட்டு அழத் தொடங்கினாள். அந்த இடத்தில் நிற்காமல் ஓடினாள். மெல்ல மெல்ல மாலை நேரங்களில் ஸ்ரீபதிபாபுவின் வீட்டுக்கு வந்து குஸுமைக் கூப்பிட்டு அவளுக்கு இருந்த கூச்சத்தை விலக்கிவிட்டேன், அவள் என் புத்திமதியைக் கேட்டாள். 'இதற்கு விவாகம் தவிர வேறு வழி இல்லை' என்றேன். 'அது எப்படி முடியும்?' என்றாள் அவள். 'உன்னை உயர்குலத்துப் பெண் என்று வெளியார் எண்ணும்படி செய்து விடுகிறேன்' என்றேன். எவ்வளவோ வாதாடிய பிறகு அவளுடைய சம்மதத்தைப் பெற்றேன். 'பையன் என்னவோ ஏங்கி இருக்கிறான்....இன்னும் அவனைப் பரீட்சை செய்ய வேண்டியதில்லை. காரியத்தைக் கப்சிப்பென்று முடித்துவிடுவதே எந்த விதத்திலும் நல்லது. உன் மர்மம் யாருக்குத் தெரியப் போகிறது? பாவம் எத்தனை நாட்கள் இருவரும் பொறுத்துக் கொண்டிருப்பீர்கள்?' என்றேன். குஸுமுக்குப் புரிந்ததோ இல்லையோ, எனக்குப் புரிந்தது. கடைசியில் ஸ்ரீபதிபாபு மூலம் இந்தத் தகவலை உனக்கு எட்டவிட்டேன். நீயும் இதற்கு இணங்கிவரச் சற்றும் தாமதம் செய்யவில்லை. விவாகம் நிச்சயமாகிவிட்டது.

"இவ்வளவு தூரம் வந்த பிறகு குஸும் திடுமென வக்கரித்துக் கொண்டாள். அவள் என் காலில் விழுந்து, 'இது வேண்டாமே' என்று கெஞ்சினாள். 'இதென்ன சங்கடம், ஊருக்கெல்லாம் தெரிந்த பிறகு என்னைத் தொங்கலில் விடுகிறாய்?' என்றேன்.

அதற்கு குஸும், 'நான் இறந்துவிட்டதாகச் சமாசாரம் பரவச் செய்துவிடுங்கள்' என்றாள். 'அப்போது, பாவம், உன்னை நம்பியிருக்கும் அந்தப் பிள்ளையாண்டான் கதி என்னவாகும்? வெகு நாட்களாக அவன் ஆசையுடன் எதிர் நோக்கும் ஒரு நன்னாள் நெருங்க நெருங்க மணமகன் சொர்க்கத்தின் வாசலில் அல்லவோ நிற்கிறான்! இப்படித் திடுமென்று உன் மரணச் செய்தியை அவனுக்கு எப்படி எட்ட விடுவது? இதைக் கேட்டதும் உண்மையாகவே அவன் மாண்ட செய்தி உனக்கு வந்துவிடுமே' என்றேன். அப்புறம்..ஒரு நல்ல முகூர்த்தத்தில் விவாகம் நடந்தேறியது. ஒரு பெரிய கடமையைச் செய்து முடித்ததும் ஆறுதல் மூச்சு வந்தது. அதற்கு மேல் நடந்தது உனக்குத் தெரிந்ததே" என்றார்.

ஹேமந்தன், "எங்களுக்குச் செய்ய நினைத்ததெல்லாம் செய்தீர்கள். இதை விட உலகு அறியச் செய்ய வேண்டுமா?" என்றான்.

"உன் தங்கையின் விவாகத்துக்கு ஏற்பாடெல்லாம் நடக்கிறது என்று தெரிந்ததும், ஒரு பிராமணனுடைய செருக்கைக் குலைத்தேன். ஆனால் ஒரு கடமையை ஆற்றவே இவ்வாறு செய்தேன். மற்றொரு பிராம்மண குடும்பம் அழியாமல் இருப்பதற்கு, அவர்களுக்குத் தெரியப்படுத்தவே இதை எழுதினேன், ஹேமந்தன் வேறு வருணத்துப் பெண்ணை மணந்ததற்கு ருஜு இருக்கிறது என்று" என்றார் பியாரிசங்கர்.

ஹேமந்தன் பொங்கி வரும் கோபத்தையெல்லாம் அடக்கிக் கொண்டு, "நான் அந்த குஸுமைத் தள்ளி விடுகிறேன். அப்போது அவள் கதி என்னவாகும்? அவளுக்கு நீங்கள் அடைக்கலம் தருவீர்களா?" என்றான்.

"நான் செய்ய வேண்டியது செய்தாயிற்று. ஒருவன் தள்ளிவிடும் அவன் மனைவிக்கு இடம் தந்து ஆதரிப்பது என் கடமையன்று. யாரடா அங்கே..ஹேமந்த பாபு வெயிலில் வந்திருக்கிறார். இளநீரில் ஐஸ் போட்டுக் கொண்டு வா!" என்றார் பியாரி சங்கர்.

இந்தத் தண்ணிய உபசரணைக்குக் காத்திராமல் வெளியே சென்றான் ஹேமந்தன்.

படுக்கையறையில் விளக்கே ஏற்றவில்லை. ஹேமந்தன் சாளரத்து அருகில் கட்டில்மீது அமர்ந்து வெளியே திகழும் இருளில் கண்ணைச் செலுத்தியிருந்தான். குஸும், தரையில் மடிந்தவாறு, அவன் இரு கால்களையும் கெட்டியாக அணைத்துத் தன் பூ முகத்தை அழுத்தியிருந்தாள். அலை ஓய்ந்த கடல்போல் வேலை நிலைத்து நின்றது. பரந்த இருள் திரையில் கண்ணுக்குத் தெரியாத ஓவியன் அதிசயச் சித்திரம் ஒன்றை வரைவதுபோல் இருந்தது அந்த நிலைக்களன். நாற்புறமும் ஊழிக் கூத்தின் ஆரவாரம். அதற்கிடையே ஆழ்ந்த முகத்துடன் வீற்றிருக்கும் நீதிபதி....அவன் காலடியில் சுருண்டு கிடக்கும் குற்றவாளியான ஒரு பெண் மலர்.

மீண்டும் கனத்த காலடி அரவம் கேட்டது. ஹரிஹர முகர்ஜி வாயில்படியில் நின்ற வண்ணம், "நேரமாகிறது. இனிமேல் பொறுக்க முடியாது....அந்தப் பெண்ணை முன்னால் வெளியே துரத்து" என்றார்.

அந்தக் குரலைக் கேட்டவுடன், குஸும் கொந்தளிக்கும் கடலில் ஏமப்புணையைக் கெட்டியாகப் பற்றிக் கொள்பவன்போல் கணவனின் காலைப் பிடித்துக் கொண்டாள். அதை முத்தமிட்டாள். அதன் துகளைத் தலைமீது அணிந்த பிறகே அதை விட்டாள்.

எழுந்தான் ஹேமந்தன்; தந்தையைப் பார்த்துச் சொன்னான்:

"என் மனைவியை நான் துறக்க முடியாது."

ஹரிஹரர் உறுமி, "நம் குலத்துக்குத் தலை இறக்கம்கொண்டுவரப்போகிறாயா?" என்றார்.

"எனக்கு இந்தக் குலம் சாதியில் நம்பிக்கை இல்லை" என்றான் ஹேமந்தன்.

"அப்படியானால் நீயும் இந்த வீட்டை விட்டு நட!" என்றார் ஹரிஹரபாபு.

(விசுவபாரதி அனுமதி பெற்றது)





பண்ணையார் சங்கிலியப்பன் குடும்பத்துக்கும், அதே கிராமத்தில் வசித்து வந்த அவன் சகோதரி அங்கம்மாளின் மகன் செங்கோடன் குடும்பத்துக்கும் பகைமை பிறந்து வளர்ந்து வந்தது. அந்தப் பகைமையைச் சிறிதும் பொருட்படுத்தாமல் அதற்கு நேரிடையாக, சென்னையில் கல்லூரியில் படித்து வந்த செங்கோடனின் தங்கை தங்கத்துக்கும், பண்ணையாரின் மகன் கண்ணனுக்கும் காதல் பிறந்து வளர்ந்து வந்தது.

காதலர்கள் இருவரும் படிப்பு முடிந்து சென்னையிலிருந்து ஒரே ரயிலில் ஊருக்கு வருகின்றனர். இந்த ஆரம்பக் காட்சியே படத்துக்குக் களை கட்டிவிடுகிறது.

தங்கமும் கண்ணனும் ஒரே ரயிலில் வந்ததைப் பார்த்த செங்கோடனுக்கு ஆத்திரம் பொங்கி வருகிறது. தங்கையிடம் ஆத்திரத்தைக் கொட்டும் செங்கோடனின் உணர்ச்சி நமக்குக் கதையை நன்கு புரிய வைக்கிறது.

பட்டணத்தைப் பார்த்தறியாத பட்டிக்காட்டு மனிதனாக நடிக்கும் சிவாஜி கணேசனின் பேச்சை முதலாவதாகக் குறிப்பிட வேண்டும். மிகவும் இயல்பாக அமைந்திருக்கிறது. அதிலும் இன்னொரு விசேஷம். இந்தப் படத்தில் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பேச்சு, அவர் இதுவரையில் நடித்திருக்கும் மற்றப் படங்களைக் காட்டிலும் மிகவும் குறைவு என்றே கூறவேண்டும். எதுகை, மோனை, அடுக்குத் தொடர் முதலிய அலங்காரங்கள் எதுவும் இல்லாமலே அவர் பேச்சு இந்தப் படத்தில் நன்றாகச் சோபித்திருக்கிறது. கிராமியப் பண்பு கலந்து பாஷை மிகவும் நயமாகத் தடங்கலின்றி ஒலிக்கிறது.

தங்கைக்கு மாசு கற்பித்துத் தாயாரிடம் பேசும் கட்டத்தில் செங்கோடனின் தாயார் கோபத்தில் மகனைக் கன்னத்தில் அறைந்து விடுகிறாள். அப்பொழுது தன்மான உணர்ச்சி ஒரு புறமும், குடும்ப கௌரவம் ஒரு புறமும் உந்த அவன் தாங்கொணாத வேதனையுடன் வீட்டை விட்டு மௌனமாக வெளியேறி விடுகிறான். இந்தக் கட்டத்தில் சிவாஜி கணேசனின் நடிப்பு மிகவும் சிறப்பாயிருக்கிறது.


மணப்பாரை மாடுகட்டி
மாயவரம் ஏருபூட்டி
வயக்காட்டை உழுதுபோடு
சின்னக் கண்ணு — பசுந்
தழையைப் போட்டுப் பாடுபடு
செல்லக்கண்ணு

என்று செங்கோடனின் பாட்டு (டி. எம். சௌந்தரராஜனின்குரலில்) நன்றாயிருக்கிறது.

பண்ணையாராக நடிக்கும் வி. கே. ராமசாமி மிகவும் அநாயாசமாக நடித்திருக்கிறார். படித்த மகனும் படிக்காத தந்தையும் பேசும் பேச்சு மிகவும் சுவாரஸ்யமா யிருக்கிறது.

பண்ணையார் மகன் கண்ணனாக நடிக்கும் எம். என். நம்பியார் கச்சிதமாக நடிக்கிறார். இந்தப் படத்தில் அவருக்கு 'வில்லன்' பாகம் கொடுக்கப்படவில்லை. ஆகவே, ஆசை காட்டி மோசம் செய்யவும், அண்டினவரைக் கெடுக்கவும் அவருக்கு இந்தப் படத்தில் சந்தர்ப்பம் இல்லை. ஆனால் காதலியைக் கைப் பற்றப் பொய்யாக இறப்பதற்கும் உடனே பிழைப்பதற்கும் சந்தர்ப்பம் நன்றாகக் கிடைக்கிறது.

இந்தப் படத்தில், நன்றாக நடித்திருப்பவர்களில் பானுமதியும் ஒருவர்; செங்கோட



னின் காதலி ரங்கம்மாவாக நடிக்கிறார். கிராமத்துச் சாலையில் வண்டி யோட்டும் போது சச்சரவில் ஆரம்பமான அவர்கள் காதல், பலவிதமான சுவாரஸ்ய கட்டங்களுடன் பூர்த்தியாகிறது. முன்பு "மலைக் கள்ளன்" படத்தில் பானுமதியைப் பற்றி எழுதுகையில் "..பானுமதியைப் பற்றி நாம் விசேஷமாக எதுவும் சொல்லத் தேவையில்லை. அவரால் நன்றாகத் தான் நடிக்க முடியும்; பாவபூர்வமாகத்தான் பேச முடியும்.." என்று எழுதியிருந்தது நினைவிருக்கலாம். இந்தப் படத்தில் அவரைப் பற்றிக் குறிப்பிடுகையில் மீண்டும் அதை நினைவூட்டினாலே போதும்.

செங்கோடனின் தங்கை தங்கமாக நடிப்பவர் எம். என். ராஜம். விசேஷமாகப் பாராட்டிச் சொல்லும்படியாக இல்லாவிட்டாலும் அவர் நடிப்பு குறை சொல்ல இடம் இல்லாமல் நன்றா யிருக்கிறது.

செங்கோடனின் தாயார் அங்கம்மாளாக நடிக்கும் கண்ணாம்பாதான் மக்களைப் பெற்ற மகராசி. இந்தப் பட்டத்தைப் பெறுவதற்காக அவர் பலவிதத்திலும் பாடுபட்டு, கண்ணீர் விட்டு, பெற்ற மகனைக் கன்னத்தில் அறைந்து, கடைசியில் கிணற்றில் குதிக்கக் கூடத் தயாராக வேண்டி யிருக்கிறது. அது மட்டுமா? வஞ்சக வெறியன் வீசிய கத்திக் குத்துக்கு ஆளாகி உயிர்த்தியாகமும் புரிய வேண்டி யிருக்கிறது. மக்களைப் பெற்ற மகராசியாவதற்காக அங்கம்மாள் உயிர் துறக்க வேண்டியது அவசியந்தானா என்று கேட்கத் தோன்றும். அவள் அப்படி உயிர் விட்டிராவிட்டால் அவள் படத்துக்கு மாலை சூட்டி, எதிரே நின்று பிரார்த்தனைப் பாட்டு பாடி யிருக்க முடியுமா?

ஸ்ரீ லக்ஷ்மி பிக்சர்ஸ் தயாரித்த இப்படத்துக்கு திரு ஏ. பி. நாகராஜன் கதை. வசனம் மிகவும் சுவை ததும்பத் தீட்டி யிருக்கிறார்.

** ** **

இப்படத்தில் பாராட்டப்பட வேண்டிய கட்டங்கள் பல இருக்கின்றன :—

தங்கம் கண்ணனுக்கு எழுதிய காதல் கடிதம் செங்கோடன் கையில் கிடைக்கிறது. உடனே "ஐயோ, இதைப் படிக்கப் பார்க்க முடியலையே!" என்று அவன் தன் கல்வியறிவின்மைக்காக வருந்திக் கண்ணீர்வடிக்கும்போது அது யாருடைய மனசையும் கலக்கிவிடும்.

தங்கையின் காதலைப் பூர்த்தி செய்விக்க எண்ணி, செங்கோடன் தன் பகைமையை மறந்து மாமன் காலில் விழுந்து, அவளை மருமகளாக ஏற்கும்படி கெஞ்சுகிறான். மாமன் மனம் இரங்கவில்லை. இவ்விடத்தில் சிவாஜி கணேசன்—கே. ஆர். ராமசாமி ஆகிய இருவரின் உணர்ச்சி மிகுந்த உருக்கமான நடிப்பு ரஸிகர்களைக் கவர்ந்து விடுகிறது.

கே. சாரங்கபாணி, பி. டி. சம்பந்தம், டி. பி. முத்துலக்ஷ்மி முதலியவர்கள் படத்தில் ஹாஸ்ய விருந்து அளிக்கிறார்கள்.

படத்தின் கவர்ச்சிக்கு, சாயி, சுப்புலக்ஷ்மி, பேபி கிருஷ்ணவேணி முதலியவர்களின் நடன நிகழ்ச்சி உதவியா யிருக்கிறது.

படத்தின் கலையம்சங்களான ஒலி, ஒளி, காட்சி ஜோடனைகள் யாவும் நன்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கின்றன.



சென்ற வாரம் கவிச் சக்கரவர்த்தி கம்பர் திருநாள் தமிழ் நாடெங்கும் கொண்டாடினார்கள். அவருடைய காவிய உலகம் நம்மை அழைக்கிறது. போகலாம், வாருங்கள்.

அயோத்தியிலிருந்து இரண்டு யோசனை தூரத்தில் உள்ள காட்டு வெளியில் நிற்கிறோம். அந்திப்பொழுது முதிர்கிறது. மேல் வானத்துச் செந்நெருப்பு அணைகிறது. இருள் விழுதுகள் எங்கும் படர்கின்றன. 'இருட்டைப் பார்த்தீர்களா? கேகய அரசன் பெற்றெடுத்த கைகேசி, செம்மையான உள்ளம் படைத்தவள்தான். அந்தச் செம்மை இந்த அந்தி வானத்துச் செம்மையைப் போலக் கவறிப் போய் விட்டது. கூனியின் சொல் என்ற விஷம் ஏறியதும், கைகேசியின் மனமும் கறுத்து, இருண்டு விடவில்லையா? அது போல் அல்லவா இதுவரை ஒளி நிரம்பி, நிர்மலமாய் இருந்த ஆகாயம் இருளடைந்து விட்டது?' என்று கம்பர் பேசுகிறார்:

—வானகம்
நந்தலில் கேகயன் பயந்த நங்கைதன்
மந்தரை உரையெனும் கடுவின் வட்கிய
சிந்தையின் இருண்டது செம்மை நீங்கியே.

[வானகம் – ஆகாயம்; நந்தலில் - கெடுதல் இல்லாத; பயந்த - பெற்ற; கடுவின் - விஷத்தினால்; வட்கிய - கெட்டுப்போன.]

இச் சொற்கள் காதில் விழுந்ததும், நம்முடைய மனம் அயோத்திக்குத் திரும்புகிறது. மந்தரை சூழ்ச்சியும், கைகேசியின் தூய சிந்தை திரிந்ததும், அவள் கேட்ட வரங்களும், தசரதன் உயிருக்கு மன்றாடித் துடித்ததும், இராமன், சீதை, லக்ஷ்மணன் மூவரும் நகர் நீங்கிய பரிபவமும், கண்முன்னே தோன்றுகின்றன. அந்தக் கண்ணோடு, சூழும் இருளை நோக்குகிறோம். அயோத்தியிலிருந்து இராமனைப் பிரிய மனமில்லாமல் கூடவே வந்த மக்கள், ஆற்றங்கரை மணலிலும், காட்டிலும், மேட்டிலும், கல்லிலும், முள்ளிலும் கூட்டங் கூட்டமாகப் படுத்திருக்கிறார்கள். அவ்வளவு தளர்ச்சி. ஆனால் தூங்கவில்லை. அவர்கள் மனத்தில்தான் இராமன் காட்டுக்கு வந்து விட்டானே என்ற சஞ்சலம் உழுது கொண்டிருக்கிறதே! நாமும் அயோத்தியில் நடந்த பழைய சம்பவங்களை எண்ணி, விவரிக்க முடியாத பாரம் நெஞ்சை அழுத்த நிற்கிறோம். இந்த நிலையை உண்டாக்கவே, கம்பர், இரவிருளைக் கைகேசியின் திரிந்த உள்ளத்துக்கு ஒப்பிட்டாரோ?

நாழிகை ஆக ஆக, இரவு இன்னும் இருள்கிறது. நட்சத்திரங்கள், இருளின் உடலில் வெடித்த சிவந்த புண்களாகத் தோன்றுகின்றன. அந்த அளவுக்கு நமது மனத்திலே கவலையும் கசப்பும். அயோத்தி மக்கள், களைப்பின் மிகுதியால், தளர்ந்து, தங்களையும் அறியாமல் இப்போது தூக்கத்தில் அழுந்தி விட்டார்கள். இருங்கள், ஏதோ பேச்சுக் குரல் கேட்கிறது. யார் அது இருட்டிலே வருவது? இராமன்தான். அவன் உறங்கவில்லையா? மந்திரி சுமந்திரன் இராமனுடன் வருகிறான். பின்னால், சீதை. சிறிது தூரத்தில், வில்லேந்திய கையனாய், லக்ஷ்மணன். இராமன் ஏதோ பேசுகிறான், கேட்போம். 'சுமந்திரா, இதைக் கேள், அயோத்தி மக்கள், அன்பினால், என்னை விடாமல் சூழ்ந்து வருகிறார்கள். இவர்களைத் திரும்பிப்



ஒருவர் :—என்ன செட்டியாரே! ஞாபகம் இருக்கிறதா, நீங்கள் எனக்கு இரண்டு மூட்டை சர்க்கரை பாக்கி!

செட்டியார் :—என்ன! சர்க்கரையா? நான் கொடுக்க வேண்டுமா?

முதல்வர் :—ஆமாம்! ரொம்ப நாளாக நான் சொல்வதெல்லாம் நடக்கிறது. என் வாய்க்குச் சர்க்கரை போட வேண்டும் என்று சொல்லிக்கொண்டே வந்திருக்கிறீர்கள்......அந்தக் கணக்குப்படிதான் சொல்கிறேன்!

போகும்படி சொன்னால் கேட்பார்களா? மாட்டார்கள். இவர்கள் இத்தனை பேரையும் கூடவே அழைத்துக்கொண்டு போவதும் சரியில்லை. ஒன்று செய். இவர்கள் தூக்கத்தில் அழுந்தி இருக்கிறார்கள். இதுதான் தருணம். நாங்கள் மூவரும் காட்டுக்குள்ளே போய் விடுகிறோம். நீ தேரைத் திருப்பி, அயோத்திக்கு அதைச் செலுத்திச் செல். காலையில் எழுந்ததும் தேர்ச்சுவட்டைப் பார்த்து. நான் அயோத்தி திரும்பி விட்டதாக எண்ணி, இத்தனை பேரும் நாட்டுக்கு மீள்வார்கள். அதுதான் சரி. அப்படியே செய். நான் உன்னை வேண்டிக் கொள்வது இதுதான்' என்கிறான் இராமன்.

சுமந்திரனைத் திரும்பிப்பார்க்கிறோம். இருட்டில் அவன் முகம் சரியாகத் தெரியவில்லை. அதனால் என்ன? சுமந்திரன் பேசுகிறான், அந்தப் பேச்சு அவன் உள்ளத்தையே துலாம்பரமாகக் காட்டி விடுகிறது.

'போகவா சொல்கிறாய்? உன்னை இந்தக் காட்டிலே விட்டு விட்டு, போகாத என் பொல்லாத உயிரைத் தாங்கிக் கொண்டு, நான் அயோத்திக்குத் திரும்பிப் போக வேண்டுமா? போய், அங்கே, அந்தப் பாழடைந்த நகரத்தில் உள்ள பரிபவத்தை யெல்லாம் காண வேண்டுமா? என்னை அப்படியா எண்ணுகிறாய்? உன்னைக் காட்டுக்கு விரட்டிய கைகேசியைவிட, அவளுக்குத் துணை செய்த கொடிய விதியைவிட, கொடுமையான உள்ளம் படைத்தவன் என்று இந்த ஏழையை எண்ணுகிறாய்?' என்கிறான் சுமந்திரன்.

—அவ்

வெவ்விய தாயின் தீய விதியினின்
மேலன் போலாம்
இவ்வயின் நின்னை நீக்கி
உன்னுயிர் நீத்தின்று ஏகி
அவ்வயின் அனைய காண்டற்கு
அமைந்தனன் அடியன்...

[அவ் - (உன்னைக் காட்டுக்குத் தூரத்திய) அந்த; வெவ்விய - கொடுமையான; தாயின் - தாயைவிட; மேலன் - மேலானவன்; இவ்வயின் - இங்கே; நீத்தின்று - நீராமல்; அவ்வயின் - அங்கே; காண்டற்கு - காண்பதற்கு.]

'அவ்வயின் அனைய காண்டற்கு' என்ற சொற்களைப் பார்த்தீர்கள் அல்லவா? துயரத்தால் விம்மி விம்மிக் குரல் தழ தழத்துப் பேசும் சுமந்திரனுக்கு, 'அவ்வயின்' அதாவது அங்கே, அயோத்தியில், எந்த சோகக் காட்சி தென்படும் என்று சொல்லக்கூட முடியவில்லை. நாக்கு கூசுகிறது. 'அனைய' அதுதான், அங்கே என்ன இருக்கப் போகிறது, அதுதான், என்பதற்குமேல் அவனால் பேச இயலவில்லை. அயோத்தியை எண்ணும் போதே அவனுக்கு நினைவு தடுமாறுகிறது. பேச முடியாமல் சிறிது நின்றுவிட்டு, மறுபடியும் பேசுகிறான் :

'அங்கே போய், அரசன் தசரதனிடம் என்ன சொல்வேன்? இளவரசனை இராமனைக் கூடவே அழைத்துக் கொண்டு வந்து விட்டேன் என்று சொல்லட்டுமா? அதைத்தானே தசரதன் எதிர்பார்த்துத் துடித்துக் கொண்டிருக்கிறான்? சே! அப்படி யெல்லாம் அவன் எதிர்பார்ப்பதை மட்டும் செய்து விட்டால், சொல்லி விட்டால் எனக்கு என்ன பெருமை? அதைவிட அதிகமாக ஒன்றைச் சாதித்து விட்டேன் என்று மார் தட்டினால் அல்லவா மந்திரி சுமந்திரன் ஆவேன். ஆகவே, இந்த வறண்ட அயோத்திக்கு இராமனை எதற்காக அழைத்துவர வேண்டும், அங்கே காட்டிலே மலர்கள் நிரம்பி, ஒரே அழகு மயமாய் இருக்கிறது. அங்கேயே மனைவியோடும் தம்பியோடும் இன்பமாகக் காலத்தைக் கழிக்கட்டும் என்று காட்டிலேயே அவர்களை விட்டு வந்தேன் என்று சொல்வதுதான் அழகு. ஆமாம், அப்படித்தான் சொல்ல வேண்டும், சொல்லட்டுமா? இரும்பு நெஞ்சுடைய என்னால் எதைத்தான் சொல்ல முடியாது?' என்று கேட்கிறான் சுமந்திரன் :

அருள் வாக்கு

பாப புண்ணியத்துக்குக் காரணம் என்ன? அவற்றைச் செய்யாமல் நிறுத்த இஷ்டமிருக்கிறது; ஆனால் முடியவில்லை. ஒரு மரத்தைத் தழையாமற் செய்ய வேண்டுமானால் இலைகளை வெட்டினால் முடியாது; அடிமரத்தை வெட்ட வேண்டும். அது போல, பாபத்துக்குக் காரணத்தை அறிந்து அதை அழிக்க வேண்டும்.



— ஸ்ரீ சங்கராச்சாரியார்

தேவியும் இளவலும் தொடர, செல்வனை
பூ உயர் கானகம் புக உய்த்தேன் என்கோ?
கோவினை, உடன்கொடு குறுகினேன் என்கோ?
யாவது கூறுகேன் இரும்பின் நெஞ்சினேன்?

[தேவியும் - மனைவியாகிய சீதையும்; இளவலும் - தம்பியும்; பூ உயர் - பூக்கள் ஓங்கி வளர்ந்த; கோவினை - அரசனாகிய இராமனை; உடன் கொடு - என்னுடன் கூட்டிக்கொண்டு; குறுகினேன் - வந்தேன்; என்கோ - என்று சொல்லட்டுமா?]

சொற்கள் நெஞ்சின் ஆழத்தில் உள்ள துயரத்தினால் கசந்து, இரக்கம் தோய்ந்த பரிகாசமாக வருகின்றன. இராமனிடமும் தசரதனிடமும் சுமந்திரன் வைத்திருக்கும் பேரன்பு, தன்னை இப்படி இனங்காட்டிக் கொள்ளுகிறது.

இதைக் கேட்டும் இராமன் உருகாமல் இருப்பானா? எப்படி இருக்க முடியும்? இராமனுடைய நெஞ்சு நெகிழ்ந்து போகிறது. கீழே விழுந்து புலம்பும் சுமந்திரனை எடுத்து அணைத்துக் கொள்கிறான். அவனைத் தேற்றுகிறான், ஏதோ சொல்லுகிறான், கேட்கலாம்.

'தருமம் என்ற ஒன்று மனித வாழ்க்கையின் உறுதிப் பொருளாக நிற்கிறது. மனிதன் இங்கே இந்த உலகில் வாழும் போது, அவனுக்கு முன்னே சென்று வழிகாட்டுகிறது. தன்னைப் பின்பற்று கிறவனுக்குப் புகழைத் தேடித் தருகிறது. இந்த உலகத்து வாழ்க்கை முடிந்தவுடன் மனிதனுக்குப் பின்நின்று, அவனுக்கு நல்ல கதியை அளிக்கிறது. தருமத்தின் மேன்மை இது. இப்படிப்பட்ட ஒன்றை, நமக்கு இங்கே இன்பம் வரும்போது விரும்பிப் பின்பற்றி, துன்பம் வரும்போது ஒதுக்கித் தள்ளிவிடலாமா? வீரம் என்பது எது, எண்ணிப் பார்த்தாயா? இரத்தம் தோய்ந்த படைக்கலங்களை மறுபடியும் இரத்தத்தில் தோய்த்து, போர்க்களத்தில் பலரைக் கொன்று குவித்தலா வீரம்? இல்லவே இல்லை. சாவே வந்தாலும், சாவினும் கொடியதான ஒன்று உண்டே, எல்லா ஆற்றலையும் இழந்து நடைப்பிணமாக வளைய வருகின்ற பரிபவம், அதுவேதான் வந்தாலும், தருமத்தைக் கைவிடாமல் உறுதியாக நிற்பது அல்லவா உண்மையான வீரம்? போ, திரும்பிப் போ, அதுவே உன் கடமை. காட்டுக்குச் செல்லுவதே என்னுடைய கடமை. அயோத்திக்குச் சென்று, குலகுரு வசிஷ்டரிடம் நான் சொன்னதையெல்லாம் தெரிவித்து, அவரோடு சேர்ந்து என் தந்தைக்கு ஆறுதல் அளி. அதுவே நீ செய்ய வேண்டியது. தருமத்தைப் பின்பற்றுவதிலே துன்பம் வரலாம். அதற்காக வருந்தாதே.'

முன்பு நின்று இசை நிறீஇ முடிவு முற்றிய
பின்பு நின்று உறுதியைப் பயக்கும் பேர் அறம்
இன்பம் வந்து உறுமெனில் இனியதாய் இடைத்
துன்பம் வந்து உறுமெனில் துறக்கற்பாலதோ.

[இசை - புகழ்; நிறீஇ - நிலைநாட்டி; உறுதியை - இங்கே, உறுதிப் பொருளாகிய பேரின்பம்; பயக்கும் - விளைக்கும்; உறுமெனில் - வாய்க்கும் என்றால்; துறக்கற்பாலதோ - கைவிடுதற்கு உரியதோ.]

நிறப்பெரும் படைக்கலம் நிறத்தின் நேர்உற
மறப்பயன் விளைக்குறும் வலிமை அன்றரோ
இறப்பினும் திருவெலாம் இழப்ப நேரினும்
துறப்பிலர் அறம் எனல் சூரராவதே.

[நிறப்பெரும் படைக்கலம் - சிவந்த பெரிய ஆயுதங்கள்; நிறத்தின் - சிவப்பில், அதாவது இரத்தத்தில்; நேர்உற - படிய; மறப்பயன் - கொடுமையான போரின் பயன், அதாவது கொல்லுதல். விளைக்குறும் - செய்யும்; அன்றரோ - இல்லை, இல்லவே இல்லை. துறப்பு இலர் - விடமாட்டார்கள்; எனல் - என்பது.]


இராமனுடைய உள்ளம் நமக்கு இப்போது தெரிகிறது. அயோத்தியில் நாம் கண்ட அதே உள்ளந்தான் மிகுந்த கனிவுடையது; என்றாலும், அதே சமயத்தில் வைரத்தைவிடக் கடினமாய், அறத்தின் வழியிலே தளராது செல்லும் இயல்புடையது.

'வேதங்களும் தேடிக் காண முடியாமல், அவற்றின் கைக்கு எட்டாமல் மறைந்து நிற்கும் தருமத்தின் வடிவந்தான் இதோ இந்தக் காட்டில் தங்கி இருக்க வந்திருக்கிறது; இராமனாகக் கண்முன்னே நிற்கிறது. இந்த இராமன்

மறைகளை மறைந்து போய்
வனத்துள் வைகுவான்

[மறைகளை - வேதங்களை; வைகுவான் - தங்கி இருப்பான்.]

என்று நம்முடைய காதில் சொல்லி வைக்கிறார் கம்பர். 'ஆம்' என்று நாம் ஒப்புக் கொள்வதற்குள் இன்னொரு அதிசயம் நடைபெறுகிறது. (தொடரும்)



அந்த மிருகம்

○●○

'டக் டக்' சத்தம் போடுமாம்
நாலு காலால் ஓடுமாம்

கொள்ளும் புல்லும் தின்னுமாம்
குதித்துக் குதித்துச் செல்லுமாம்.

ஹீ ஹீ' என்று கனைக்குமாம்
கிட்டப் போனால் உதைக்குமாம்

வண்டி இழுக்க உதவுமாம்
வாலைச் சுழற்றி ஆட்டுமாம்.

சண்டித் தனமும் செய்யுமாம்
சவுக்கால் அடிகள் வாங்குமாம்

அந்த மிருகம் என்னவாம் ?
அதுவே குதிரை குதிரையாம் !

அழ. வள்ளியப்பா


மிருங்காவதி
சித்திரத் தொடர் கதை
9
1) தேவிதத்தன் இளவரசி மிருங்காவதியையும்
அவளின் தோழி பவானியையும் எவ்வித ஆபத்
தும் இன்றி மாளிகையிலிருந்து வெளியேற்
றித் தன் தோழர்களிடம் ஒப்படைத்தான்.
2) தயாராகக் காத்திருந்த குதி
ரைகள் இளவரசி அவள் தோழி
முதலானவர்களை ஏற்றுக்
கொண்டு காற்றிலும் கடிய
வேகத்தில் நகரத்தின் எல்லை
யைத் தாண்டி மறைந்தன.
3) தேவிதத்தனுக்கு நகரத்தில் வேறுசில
அலுவல்கள் இருந்ததால் அன்று தங்கி
மறுநாள் பயணமானான்.
4) போகும் வழியில் எல்லாம் அவனுக்
குச் சகுனத்தடை ஏற்பட்டது.
ஆந்தை அலறியது. பூனை குறுக்கே
ஓடியது. என்ன விபத்து நேருமோ
என்ற கவலையுடன் விந்திய மலையைக்
கடந்தான்.
5) தேவிதத்தன் நினைத்தது போலவே
ஆயிற்று. விந்திய மலையைக் கடந்து கூப்பிடு
தூரம் சென்றதும், அவன் தோழர்களும்,
இளவரசியின் தோழி பவானியும் குத்திக்
காயமுற்றுக் கிடந்தனர். ஆனால் இளவரசி
மிருங்காவதியை மட்டும் காணோம்.
அவனுக்குத் தலையில்
இடிவிழுந்தது போலி
ருந்தது.



6
என்ன விபத்து நிகழ்ந்தது?
7
ஏராளமான குதிரை வீரர்கள் திடீரென்று தோன்றி எங்களைத்
8
நண்பர்களின் நிலைமை கவலைக்கிடமாக இருந்தபொழுதிலும் அவர்களது வற்புறுத்தலுக்கு இணங்கி இளவரசியைத் தேடப் புறப்பட்டான் தேவதத்தன். வெகுதூரம் சென்ற பின்னரே அந்தக் கொள்ளைக் கூட்டத்தினரை அவனால் பிடிக்க முடிந்தது.
9
இளவரசி மிருங்காவதியை மீட்கத் தேவதத்தன் தனது மிருங்கா என்னும் வாளை உபயோகித்தான். பெரும் வாள் போர் நிகழ்ந்தது. எதிரிகள் அவனது வீராவேசப் போரை எதிர்த்து நிற்க முடியாமல் மிருங்காவதியை விட்டுவிட்டு ஓடி விட்டனர்.
10
தேவதத்தன் இளவரசியுடன் நண்பர்களைக் காணத் திரும்பினான்.
இளவரசி களைப்பு மேலீட்டினால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாமல் உட்கார்ந்து விட்டாள். தாகம் தீர்க்கத் தண்ணீர் வேண்டுமென்று கேட்டாள்.
தேவதத்தன் அவளை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டுத் தண்ணீரைத் தேடிச் சென்றான்.
11
எத்தனை தேடியும் தண்ணீர் கிடைக்கவில்லை. சூரியனும் மலைவாயிலில் மறைந்து விட்டான். நாற்புறமும் இருள் சூழ்ந்து விட்டது. திசை தெரியாமல் திக்குமுக்காடிப் போனான். அன்று இரவை அங்கேயே கழித்து விடும்படி ஆகிவிட்டது.
(தொடரும்)

வேப்பங் கொழுந்து

2. வேம்பு இனித்தது!

கதிர்காமனைக் கடிந்து கொள்ளும் பொழுதெல்லாம் அவருக்கே மனம் கலங்கும். அப்படியிருக்கும் பொழுது பெற்ற தாயைப் பற்றிக் கேட்கவேண்டுமா? என்னதான் மகாராணியாக இருந்தாலும், அவள் மன்னரிடம் வாய் திறந்து ஒன்றும் சொல்ல முடியாமல் தவித்தாள். அவளது நீர்முட்டிய கண்கள், 'குழந்தைதானே? அப்படித்தான் குறும்புத்தனம் இருக்கும்! நீங்கள் கடிந்து கொள்ளுவது கொஞ்சங்கூட நன்றாயில்லை!' என்று கூறும். நயன மொழியைப் புரிந்து கொண்டு அவரும் சொல்ல முடியாமல் பெருமூச்சு விட்டவாறே அவ்விடமிருந்து அகன்று விடுவார்.

ஆனால் மகாராணி அருகில இல்லாத சமயம் பார்த்து, மகனைச் சீர்திருத்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் கண்டித்தும் வந்தார். அவர் கண்டிக்கக் கண்டிக்கக் கதிர்காமனின் முரட்டுச் சுபாவம் அதிகரிக்கத்தான் செய்தது.

மன்னர் பார்த்தார். இவனை எந்தவிதத்திலும் வழிக்குக் கொண்டு வர முடியாது என்றே அவருக்குத் தோன்றியது. 'அவன் எக்கேடு கெட்டுப் போகட்டும், இனி அவன் வழிக்கே போகாமல் இருந்து விடுவோமே!' என்று முடிவு செய்தார்.

அன்று மாலை மாட்டுத் தொழுவத்தைப் பார்வையிடச் சென்றிருந்தார். அங்கே அவர் கண்ட காட்சி அவரை நிலைகுலையச் செய்தது. கட்டெறும்பு ஒன்றைப் பிடித்து இளங்கன்றின் காதிலே விட்டுக் கொண்டிருந்தான் கதிர்காமன். கன்றோ திமிறித் தன்னைக் காத்துக் கொள்ள முயன்று கொண்டிருந்தது. அவனோ அதை முடித்து விட்டுத்தான் மறுகாரியம் என்பது போல் முனைந்திருந்தான். மன்னருக்கு வாயில்லா ஜீவன் படும் அவஸ்தையைக் காணச் சகிக்கவில்லை. "வேண்டாமடா! விட்டு விடடா!' என்று எவ்வளவோ கெஞ்சினார். ஆனால் அவனா கேட்பவன்? தன் காரியத்திலேயே கண்ணாயிருந்தான்.

இந்தச் சமயம் பார்த்துக் கட்டெறும்பு அவனது உபத்திரவம் தாளாமல் அவனையே நன்கு கடித்து விட்டது. 'ஐயோ, அப்பா!' என்று கத்தினான்.



மன்னருக்குத் தமது ஏகபுதல்வன் மீது இரக்கம் பிறந்தது. இருந்தாலும் அந்தச் சமயம் பாடம் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, "கதிர்காமா! பார்த்தாயா? நீ செய்யும் குறும்பைக் காணச் சகிக்காமல் ஆண்டவனே தண்டனை கொடுத்து விட்டார். இல்லாவிட்டால் கட்டெறும்பு உன்னை இப்படி வெடுக்கென்று பிடுங்குமா?" என்றார்.

கதிர்காமனுக்குக் கட்டெறும்பு கடித்த வலிகூட மறந்து விட்டது. "ஆண்டவனாவது, தண்டனை கொடுக்கவாவது? இந்தப் பொல்லாத கட்டெறும்பல்லவா என்னைக் கடித்தது? இதற்கு இத்தனை துணிச்சல் எங்கிருந்து வந்தது?" என்றவன் ஆத்திரத்தோடு அதைக் காலடியில் போட்டு ஒரு மிதி மிதித்து விட்டான். அது மண்ணுலகை நீத்து வானுலகு எய்தி விட்டது.

மன்னுயிரைத் தன்னுயிராகக் காக்க வேண்டிய மன்னருக்கு அந்தக் காட்சியைக் காணச் சகிக்கவில்லை. கடவுளை மறந்து இப்படி ஜீவஹிம்சை செய்பவன், தனது குடிபடைகளை எங்கே சரியாகக் காக்கப் போகிறான் என்றே எண்ணினார். இப்படிப்பட்ட பிள்ளை இருப்பதைக் காட்டிலும இறப்பதே மேல் என்றுகூடத் தோன்றி விட்டது. வந்த ஆத்திரத்தில் அப்படித் தோன்றிற்றே ஒழிய, மகனின் கெடுதலை மனமார நினைப்பாரா மன்னர்? 'ஆண்டவனே! இவனுக்கு நீ நற்புத்தி அருள மாட்டாயா?' என்று மனமுருக வேண்டிக் கொண்டார்.

இதே சமயம் அவரைத் தேடி வந்த காவலன், "அரசே! தங்களைக் காண யாரோ துறவி வந்திருக்கிறார்!" என்றான்.

அரசர் ஒருகணம்கூடத் தாமதியாமல் துறவியைக் காணப் புறப்பட்டு விட்டார்.

தம்மை வணங்கி எழுந்த மன்னரைப் பார்த்து, "உன்னுடைய முகம் மிகவும் வாட்டமுற்றுக் காண்கிறதே, ஏன்?" என்று கேட்டார் அந்தத் துறவி.

மன்னர் தமக்கு மகன் பிறந்த கதையையும் அவனுக்கு உள்ள துடுக்குத்தனத்தையும் பற்றி விஸ்தாரமாகக் கூறினார். எனக்குப் பின் இவன் ராஜ்யபாரம் நடத்தி எப்படித்தான் நல்ல பெயர் எடுக்கப் போகிறானே என்ற கவலையையும் தெரிவித்தார்.

சிறிது நேரம் யோசித்த துறவி, "அருமையாகப் பிறந்த பிள்ளையாதலால் நீ அதிகச் செல்லம் கொடுத்து வளர்த்திருப்பாய். அதனால் வந்த வினைதான் இதெல்லாம்!" என்று கூறினார்.

தமது குற்றத்தை ஒப்புக் கொண்ட அரசர், "அவனிடம் கடுமையையும் கண்டிப்பையும் கூடக் கையாண்டு பார்த்து விட்டேன்!" என்றார்.

"நீ இங்கும் தவறு இழைத்து விட்டாய். கண்டிக்கக் கண்டிக்கப் பிடிவாதம்தான் அவனுக்கு அதிகமாகும்!"

"உண்மையான வார்த்தை!"

"உன் மகன் உன் பெயரை எடுத்து விடுவான்!" என்றார் துறவி.

"என்னைக் கேலி செய்கிறீர்களா?"— மன்னர் ஒரு துயரச் சிரிப்புச் சிரித்தார்.

"இல்லை, அப்பா! உன்னைப் போலவே நல்ல அரசனாகப் புகழ்பெற்று விளங்குவான். ஆனால் ஒன்று. நாளை ஒரு நாள் மட்டுமாவது நீ அவனை என்னோடு அனுப்பி வைக்க வேண்டும்!"

"ஒரு நாள் என்ன, சுவாமி? ஒரு மாதம் வேண்டுமானாலும் அழைத்துச் செல்லுங்கள். எனக்குச் சம்மதம். என் மகன் திருந்தினால் எனக்கு அதுவே போதும்!" என்றார் மன்னர்.

மறு நாள் பொழுது புலர்ந்து பூமி தெரிவதற்குள்ளாகத் துறவி இளவரசன் கதிர்காமனை அழைத்துக் கொண்டு கானகத்தை நோக்கிச் சென்றார். வழியில் அவன் செய்த குறும்புகளுக்குக் கணக்கில்லை. அவ்வளவையும் அவர் பொறுமையாகக் குறுநகையோடு அநுபவித்தார்.

சிறிது தூரம் சென்றதும் இளவரசன் தளதளவென்று செழுமையாக வளர்ந்திருந்த சின்னஞ்சிறு வேப்பஞ் செடி ஒன்றைப் பார்த்தான். அது வரை அவன் வேப்பஞ் செடியையே பார்த்ததில்லை. துறவியைப் பார்த்து, "இது என்ன செடி, சுவாமி?" என்று கேட்டான்.

"இதுவா? இது வேப்பஞ் செடி. ஆண்டவன் சிருஷ்டியிலே உள்ள ஒரு அழகைப் பார்த்தாயா? கத்திரிக்கோல் கொண்டு கத்திரித்தாலும் இத்தனை அழகாக ஒன்றைப் பார்த்தால் ஒன்று போலவே இருக்கக் கூடிய இலைகளாக மனிதனால் கத்திரிக்க முடியுமா?" என்று கேட்டார் அந்தத் துறவி.



இளவரசன் சற்று யோசித்தான். "முடியாது என்றுதான் தோன்றுகிறது. ஆமாம், இதனால் ஏதாவது பயன் உண்டா?" என்று கேட்டான்.

"ஏன் கிடையாது? இது ஒரு பெரிய மருந்து, அப்பா! இது தீராத நோயையும் தீர்த்து வைக்கக் கூடியது. அறிவையும் கூர்மையாக்கக் கூடியது."

"அப்படியா? இந்த இலையைத் தின்னலாமா? தின்றால் எப்படி இருக்கும்?"

"கரும்பாக ருசிக்கும் வேண்டுமானால் ஒன்றைத் தின்று பாரேன்!"

இளவரசன் ஒரு இலையைப் பறித்து வாயில் போட்டு மென்றான். சிறிது நேரத்துக்கெல்லாம் 'தூ. தூ' என்று ஒரேயடியாகத் துப்பத் தொடங்கினான்.

"ஏன்? என்ன ஆயிற்று?"

"அப்பப்பா! என்ன கசப்பு! என்ன கசப்பு! இந்தச் சின்னஞ்சிறு செடியே இப்படிக் கசக்கிறதென்றால் இது பெரிய மரமாகி விட்டால் எத்தனை கசக்கும்? இதனால் உலகத்துக்கு என்ன பயன்?" என்று கேட்ட கதிர்காமன் அதை வேரோடு பறித்து எறிந்தான். அதைத் துண்டாகக் கிள்ளி போட வேண்டும் என்று அவன் கை துடித்தது.

அதைக் கண்ட துறவி சிரித்தார். அவர் சிரிப்பு அவனுக்கு ஆத்திரத்தை மூட்டியது. "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று கடுமையாகக் கேட்டான்.

"இல்லை. இந்த வேப்பஞ் செடியைச் சொல்ல வந்து விட்டாயே! நீயோ அரசகுமாரன். நாளைக்குப் பெரியவனாகி அரசாட்சி செலுத்தப் போகிறவன் இந்தச் சின்னஞ்சிறு வயதில் நீ செய்யும் துஷ்டத்தனத்தையும் துடுக்குத்தனமான காரியங்களையும் பார்த்துக் குடிபடைகள் என்ன நினைக்கிறார்கள், தெரியுமா? இப்பொழுதே இவ்வளவு அக்கிரமங்கள் செய்யும் நீ நாளைக்குப் பெரியவனாகி ஆட்சி செலுத்த வந்தால் என்ன என்ன கொடுமைகள் இழைப்பாயோ என்று அஞ்சுகிறார்கள். உன்னை அருமையாகப் பெற்று வளர்க்கும் உன் தந்தைக்கும் இதே கவலைதான்!" என்றார் துறவி.

கதிர்காமனின் உள்ளத்திலே துறவியின் வார்த்தைகள் தைத்தன. துறவியின் விழிகளிலே பளிச்சிட்ட ஒளி கதிர்காமனின் இதயத்திலே பிரகாசத்தைப் பரப்பியது. உடனே அவர் காலில் விழுந்து வணங்கினான். "சுவாமி! என்னை மன்னிக்க வேண்டும். தாங்கள்தான் என் கண்களைத் திறந்துவிட்டீர்கள்!" என்றான்.

"நானா? இல்லை! அதோ அந்த வேப்பங் கொழுந்துதான், அப்பா! அது அறிவையும் கூர்மையாக்கவல்லது என்று சற்று முன் நான் சொல்லவில்லையா?" என்று சொன்னார் துறவி.

இளவரசன் குனிந்து இரு கைகளாலும் பக்தி சிரத்தையோடு, தான் முன்பு பிடுங்கியெறிந்த வேப்பங்கன்றை எடுத்துக் கொண்டான். துறவியிடம் விடை பெற்றுக் கொண்டு தன் வீட்டுக்கு ஓடோடியும் வந்தான். தாய் தந்தையரை வணங்கினான். தனக்கு நல்லறிவு புகட்டிய அந்த வேப்பங்கன்றைத் தான் வழிபடும் தெய்வமாகவே கருதி மாளிகைத் தோட்டத்தில் வைத்து வளர்த்தான்.

கதிர்காமன் பெரியவனாகி ஆட்சி பீடத்தை அலங்கரித்த பொழுது துறவி மார்த்தாண்ட வர்மரிடம் சொன்னபடியே அவரது நற்பெயரை எடுத்தான். அது மட்டுமல்ல; தன் புகழைப் பன்மடங்கு ஓங்கச் செய்தான்.

மாளிகைத் தோட்டத்திலே அவன் வைத்துப் பயிராக்கிய வேப்பங்கன்றும் பெரிதாக வளர்ந்து மாளிகைக்கே சோபையும் நிழலும் அளித்தது. (முற்றும்)



மலைச்சாரல் மாதவி

ஜனந்தி



அத்தியாயம் 3

பழகிய குரல்!

டெலிபோனில் பேசிய குரலிலிருந்த கடுமையைக் கண்டு சிவசங்கரன் சிறிது தளர்ந்தாலும், கலவரமடைந்து விடவில்லை.

"நான் ரகசியமாகவோ, தனியாகவோ அறிமுகம் இல்லாதவர்களிடம் பேச விரும்பவில்லை."

"இப்போது நீங்கள் என்னைச் சந்திக்கா விட்டால் பின்னால் மிகவும் வருத்தப்படுவீர்கள்."

"நீங்கள் யாரென்பதைச் சொன்னால் உங்களைச் சந்திக்கத் தடையில்லை."

"அதைச் சொல்லிப் பயனில்லை."

"அப்படியானால் உங்களுக்கு என்னை எப்படித் தெரியும்?"



'' என்னை அனுப்பியவர் கூறியதால்தான் எனக்குத் தெரியும்.''

'' அது யார் என்று கூற முடியுமா ?''

உடனே பதில்வரவில்லை.

'' அதையாவது நீங்கள் என்னிடம் சொல்லா விட்டால் நான் உங்களை நிச்சயம் சந்திக்கப் போவதில்லை.''

'' மாதவி.''

'' மாதவியா? அவளுக்குக் கிருஷ்ணன் என்று யாரையும் தெரியாதே. நான் இங்கே இருப்பதும் அவளுக்குத் தெரியாது. இதெல்லாம் சுத்த 'ஹம்பக்.' இந்த வேலையை யெல்லாம் வேறு யாரிடமாவது நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள்'' என்று கோபமாகக் கூறிவிட்டுச் சிவசங்கரன் ரிஸீவரைத் தடால் என்று டெலிபோன் மீது வைத்தார்.

அவர் கதவின் அருகில் போவதற்கு முன்னால் மீண்டும் 'டிரிங்' 'டிரிங்' என்று டெலிபோன் மணி ஒலித்தது.

சிவசங்கரன் சலிப்புடன் திரும்பிச் சென்று டெலிபோனை எடுத்தார்.

'' தயவுசெய்து ஏதாவது ஒரு இடத்தைச் சொல்லுங்கள். ரொம்ப அவசியமாக உங்களைச் சந்தித்துப் பேச வேண்டும்'' என்றது அந்தக் குரல்.

சிவசங்கரனுக்கு ஆத்திரமும் கோபமும் பொங்கிக் கொண்டு வந்தன. ''உம்முடன் பேச எனக்கு விருப்பமில்லை என்றுதான் சொல்லிவிட்டேனே. ஏன் இப்படித் தொந்தரவு செய்கிறீர்கள் ?'' என்று இரைந்தார்.

ரிஸீவரை வைக்கும் 'கிளிக்' என்ற சத்தம் தெளிவாகக் கேட்டது.

சிவசங்கரன் ஒரு நெடிய பெருமூச்சுடன் வெளியே வந்தார். அவருக்கு மூச்சுத் திணறுவது போல இருந்தது. சுத்தமான காற்றைச் சுவாசிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் மறுபடியும் புல் தரையில் கிடந்த நாற்காலியிலேயே வந்துஉட்கார்ந்தார்.

இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் வெளியே போவதற்காகக் கீழே இறங்கி வந்த சீனிவாசமூர்த்தி, சிவசங்கரன் உலகத்தையே மறந்து, ஆகாயத்தை வெறித்துப் பார்த்துக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருப்பதைக் கண்டார்.

'' சங்கர்!'' என்று மெல்லிய குரலில் கூப்பிட்டார். சிவசங்கரன் திரும்பிப் பார்க்காமல் இருக்கவே அருகில் சென்று, '' சங்கர்! ஏன் நீ இப்படி இருக்கிறாய்? காரணத்தைச் சொல்ல மாட்டாயா? இப்போதாவது சொல்லேன்'' என்று கெஞ்சினார்.

'' நீ வெளியே போய் விட்டு வா. பிறகு பார்த்துக் கொள்ளலாம்.''

'' நீ இப்போது சொல்வதாக இருந்தால் நான் வெளியே போகவில்லை. தயவு செய்து சொல்லேன். என்னால் முடிந்த அளவு உனக்கு உதவி செய்கிறேன்.''

'' உன் காரியம் கெட்டுப் போகும். இன்னொரு நாள் சொல்கிறேன்.''

'' காரியம் கிடக்கிறது. விட்டுத் தள்ளு. உன்னுடைய ஏக்கத்துக்குக் காரணம் தெரிந்து கொள்ளாமல் எனக்குத் தூக்கமே வரவில்லை.''

சிவசங்கரன் புன்னகையுடன், '' நல்லதுதானே? உன் தூங்குமூஞ்சித்தனம் மாற நான் காரணமாக இருந்தால் ரொம்பத் திருப்தி அடைவேன்'' என்றார்.

சீனிவாசமூர்த்தியும் சிவசங்கரனை அன்புடன் பார்த்துச் சிரித்து விட்டு, '' சரி! எத்தனை நாட்களுக்குத்தான் இப்படி நீ நெஞ்சழுத்தத்துடன் இருக்கிறாய் என்று பார்த்து விடலாமே. என்



மனைவி என்ன சொல்லுகிறாள், தெரியுமா?'' என்றார்.

''என்ன சொல்லுகிறாள்?''

''உன்னைப் பற்றிக் கவலையுடன் பேசிக் கொண்டிருந்தேன். ஒரே உற்சாகம் ததும்பி வழிய எப்போதும் சுறுசுறுப்பாக இருந்தவன் இப்படி 'டல்'லாகவும், களையிழந்தும் இருக்கிறானே, காரணம் புரியவில்லையே என்றேன். அதற்கு அவள் உனக்கு எந்த விதமான குறையோ, மன வருத்தமோ இல்லையென்றும், சீக்கிரம் ஒரு பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்து வைத்து விட்டால் எல்லாம் சரியாகி விடும் என்றும் சொன்னாள்.''

''அதற்கு நீ என்ன சொன்னாய்?''

''உன்னுடைய பிடிவாத குணத்தையும், குதர்க்க வாதங்களையும் பற்றிச் சொன்னேன். ஆனால் அவள் நிச்சயமாக உனக்குக் கல்யாணம்தான் மருந்து என்கிறாள். நீ யாரோ ஒரு பெண்ணை நினைத்துத்தான் ஏங்குகிறாயாம். அவள் யாரென்று தெரிந்து விட்டால் போதும் என்கிறாள். உண்மைதானே?''

சிவசங்கரன் உற்சாகம் இல்லாமல் சிரித்தார். ''மூர்த்தி! முன் எப்பொழுதையும் விட இப்போதுதான் நான் என் கொள்கை எவ்வளவு சிறந்தது என்று உணர்ந்திருக்கிறேன். ஆனால் உன் மனைவி சொல்வதிலும் ஒரு சிறிது



உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஒரு பெண்ணின் காரணமாக என் வாழ்க்கையே பாழாகிவிட்டது.''

''சே! சே! என்ன இப்படிப் பிதற்றுகிறாய்? வாழ்க்கையாவது பாழாகவாவது? அந்தப் பெண்ணைப் பற்றி இப்போது சொல்லி விடு. பாக்கி என் பொறுப்பு'' என்றார்.

''ஸ்ரீநிவாஸ்! இன்று என் மனம் ரொம்பக் குழப்பம் அடைந்திருக்கிறது. இரண்டு நாட்களுக்குப் பின் உன்னிடம் நிச்சயமாகச் சொல்கிறேன்.''

''சரி, உன் இஷ்டம்'' என்று கூறிவிட்டுக் கார் ஷெட்டை நோக்கி நடந்தார் சீனிவாசமூர்த்தி. அங்கு பளபளவென்று துடைக்கப்பட்டு வைத்திருந்த காரை ஓட்டிக் கொண்டு வெளியே சென்றார்.

அவர் சென்றதும் தம்மைச் சுற்றிக் கவனித்தார் சிவசங்கரன். நன்றாக இருட்டி வானத்தில் நட்சத்திரச் சுடர்கள் ஜொலிக்க ஆரம்பித்திருந்தன. இந்த நட்சத்திரங்களின் ஜொலிப்பை மாதவியின் கண்களின் ஜொலிப்புக்குத் தாம் ஒப்பிட்டுப் பார்த்தது ஞாபகம் வந்தது. 'ஒரு வேளை மாதவிதான் அனுப்பி யிருப்பாளோ? டெலிபோன் பண்ணியவனைப் பார்க்க மாட்டேன் என்று கூறியது தவறோ?' என்று எண்ணிக் கொண்டிருக்கும் போதே ஒருவர் வாசல் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார். வந்தவர் நேரே சிவசங்கரனிடம் வந்து ''குட் ஈவினிங் மிஸ்டர் சிவசங்கரன்!'' என்றார்.

பாலகோபாலைப் பார்த்த உடனேயே சிவசங்கரனுக்கு டெலிபோனில் தம்முடன் பேசியது இவர்தான் என்று தெரிந்து விட்டது

''நீங்களா டெலிபோனில் பேசினீர்கள்?'' என்று கேட்டார்.

''ஆமாம்!'' என்றார் அவர்.

''ஏன் மாதவி அனுப்பியதாகப் பொய் சொன்னீர்கள்?''

''நான் உங்களை அவசியம் சந்திக்க வேண்டி யிருந்தது. மாதவியின் பெயரைச் சொன்னால் நீங்கள் தனியே சந்திக்க வருவீர்கள் என்று நம்பினேன். ஆனால் உங்களுக்குக் கோபம் வந்து விட்டது. அதனால் இங்கேயே வந்து உங்களை வெளியே அழைத்துப் போகலாம் என்று வந்தேன்.''

''நான் எங்கேயும் வர முடியாது. ஏதாவது சொல்ல வேண்டுமானால் இங்கேயே சொல்லுங்கள்''

''இதனால் ஏற்படும் விளைவுக்கு என்னை நீங்கள் பொறுப்பாளியாக்கக் கூடாது. உமது நண்பர் வந்து விட்டாலும் நான் சொல்ல வேண்டிய விஷயத்தைச் சொல்லலாம் அல்லவா?''

''தாராளமாகக் கூறலாம். முதலிலேயே நீங்கள் அப்படி மர்மமாக டெலிபோன் பண்ணாமல் நேரே இங்கு வந்திருக்கலாமே!''

''உண்மையைச் சொல்லுங்கள், சிவசங்கரன்! நான் பாலகோபால் என்று கூறியிருந்தால் நீங்கள் என்னைப் பார்க்கச் சம்மதித்திருப்பீர்களா? மேலும் நீங்கள் இங்குதான் இருக்கிறீர்களா என்று எனக்கு நிச்சயம் செய்து கொள்ள வேண்டி யிருந்தது. நான் நேரில் இங்கே வருவதற்கு ஏன் விரும்பவில்லை என்பது, விஷயத்தைக் கேட்டால் உங்களுக்கு விளங்கி விடும். உங்களுடைய நன்மைக்காகவேதான் தனியாகப் பார்க்க விரும்பினேன்.''

''நீங்கள் விஷயத்தையே சொல்லாமல் சுற்றி வளைத்துப் பேசி என் நேரத்தை வீணாக அடிக்கிறீர்கள்.''

''எனக்கு எப்படி ஆரம்பித்துச் சொல்வது என்று புரியாதபடியால் ஒரே தயக்கமாக இருக்கிறது. இன்றையப் பத்திரிகையைப் படித்தீர்கள் அல்லவா?'' என்று கேட்டார்.

''ஆம்!'' என்றார் சிவசங்கரன்.

''அச்சுதனைக் கைது செய்திருக்கிறீர்கள். அவர் நம் இருவருக்கும் நண்பர். அவருக்கு இப்படி ஒரு ஆபத்து வந்திருக்கும் போது நீங்கள் இங்கே வந்திருப்பது சரியல்ல. நீங்கள் மனம் வைத்தால் அவரை விடுதலை செய்ய முடியும்!''

சிவசங்கரன் கம்பீரமான குரலில், ''பாலகோபால்! அச்சுதனைப் பற்றி நான் மிகவும் நல்ல அபிப்பிராயம் கொண்டிருக்கிறேன். என்னுடைய நல்ல எண்ணத்தைக் குலைத்து விடாதீர்கள்'' என்று கூறினார்.

''உங்களைப் பற்றியும் நாங்கள் இருவரும் இது வரை அப்படித்தான் நினைத்து வந்தோம். நீங்கள்படு கொலைக்கும் அஞ்சாதவர் என்று இப்போதுதான் தெரிந்தது. ஒரு நிரபராதி தண்டனை யடையக்கூடும் என்று தெரிந்தும், நீர் மாஜிஸ்திரேட் ஆக இருந்து கொண்டே அதைத் தடுப்பதற்கு முயற்சி செய்யாமல் இருப்பது மகா பாதகம் அல்லவா?''

''லஞ்சம் கொடுத்து என்னை ஏதும் செய்யச் சொல்ல முடியாது. நான் எனக்குச் சரியென்று தோன்றுவதைச் செய்ய ஒரு நாளும் தயங்க மாட்டேன். நீங்கள் போகலாம்.''

''நான் போவதற்கில்லை. நீங்கள் ராஜினாமாக் கடிதம் அனுப்பி விடுவீர்கள் என்று அச்சுதன் எதிர்பார்க்கிறார். அவ்விதம் செய்யக்கூடாது என்



வழக்கமாக 2-நிமிஷம் பிரஷால் தேய்த்தால்
கால்கேட் டூத் பவுடர்
மூன்று நன்மைகளையும் அளிக்கிறது!
✓ வாயில் நறுமணம்!
✓ ஒளிவீசும் பற்கள்!
✓ சொத்தைகுறையும்!
வாய்க்குப் பாதுகாப்பும், சுத்தமான ஒளிப் பற்களும் பெற, பல் டாக்டர் அங்கீகரிக்கும் இந்த முறையில் தினசரி கால்கேட் டூத்பவுடரை உபயோகியுங்கள்.
● சாப்பிட்டவுடன் கால்கேட் டூத்பவுடரால் பற்களை 2 நிமிஷம் பிரஷ் கொண்டு தேய்க்கவும்.
● பல்லின் நுனி, முன்புறம், பின்புறம் எல்லாவற்றையும் தேய்க்கவும்.
● எப்போதும் ஈற்றிலிருந்து பல் நுனி நோக்கி தேய்க்கவும்.
கைகண்ட முறையை இன்றே கையாளுங்கள்!
COLGATE TOOTH POWDER
பெரிய சைஸ் வாங்கி பணத்தை மிச்சப்படுத்துக
பல்டாக்டர் அங்கீகரித்த சிறந்த பலன்தரும் முறை!



உங்கள் குடும்பத்தைக் காப்பாற்றுங்கள்
அபாயம் இருக்கிறதோ
அங்கெல்லாம்
பென்ஸிடாலை
தாராளமாகக்
கையாளுங்கள்
BENZYTOL
பென்ஸிடால்
விஷமில்லை • ரணமாகாது • கறைபடாதது
தயாரிப்பவர்
தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிட்.
கல்கத்தா—29
தென் இந்திய ஆபீஸ் : 5/149, பிராட்வே, சென்னை - 1

ரும். நீங்களே வந்து இந்த வழக்குக்குத் தீர்ப்புக் கூறவேண்டும் என்றும் உங்களிடம் வாக்குறுதி பெற்றுக் கொண்டு போகவே வந்திருக்கிறேன்.''

''அச்சுதன் நிரபராதி என்று உங்களுக்குத் தெரிந்தால் யார் நீதிபதியாக இருந்தாலும் நிரூபித்து விட முடியும். தயவுசெய்து என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம்'' என்று கடுமையாகக் கூறினார் சிவசங்கரன்.

''இல்லை, மிஸ்டர் சிவசங்கரன்! நீங்கள் நிலைமையை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். சாட்சியங்கள் அனைத்தும் அச்சுதனுக்கு எதிராக இருக்கின்றன. ஆனால் அவர் நிரபராதி. இன்னொருவருக்கு உதவி செய்வதற்காகப் போய் அதனால் இதில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார். ஆனால் அதற்காக அவர் வருந்தவில்லை. உங்கள் ஒருவருக்குத்தான் அவர் அந்தப் படுபாதகமான செயலைச் செய்யவில்லை என்பது தெரியும். அச்சுதனைத் தவிர எனக்கும் தெரியும். நீங்கள் திரும்ப வந்து வழக்கை நடத்தினால் வெளியிட மாட்டோம். நீங்கள் வரவில்லையானால் குற்றவாளி யார் என்பதை நான் வெளியிடும்படி நேரிடும்.''

''ரொம்ப நல்லதாயிற்று.''

''குற்றம் செய்தது யார் என்று என்னால் நிரூபிக்க முடியும் என்பதை அறிந்தால் இவ்வாறு பேச மாட்டீர்கள்'' என்றார் பாலகோபால்.

''பாலகோபால்! என்னைப் பயமுறுத்தி எந்தக் காரியத்தையும் யாரும் இதுவரை சாதித்துக் கொண்டதில்லை. இனிமேலும் அது முடியாது. என் கடமை என்னவென்பது எனக்குத் தெரியும். அதை நான் கட்டாயம் செய்வேன். அச்சுதன் என் நண்பர். அவரிடம் கவலைப் படவேண்டாம் என்று சொல்லுங்கள். நான் என் கடமையைச் செய்ய என்றுமே தயங்கியதில்லை. ஆனால் இன்று நீங்கள் இங்கு வந்து பேசிய விதம் எனக்கு மிகவும் மன வருத்தத்தை அளிக்கிறது. அச்சுதன் உங்களை அனுப்பியிருந்தால் அவரிடம் நான் இதைக் குறித்து ரொம்ப வருத்தப் பட்டேன் என்பதைச் சொல்லுங்கள்'' என்று கூறிவிட்டு விடுவிடென்று எழுந்து வேகமாக வீட்டுக்குள்ளே சென்றார் சிவசங்கரன்.

பாலகோபால் சற்று நேரம் அங்கேயே தயங்கி நின்றார். பிறகு நிதானமாக நடந்து வெளியே சென்றார்.

அத்தியாயம் 4

மூர்த்தியின் கவலை

சிவசங்கரன் உள்ளே போனதும் அங்கே நின்று கொண்டிருந்த சீனிவாச மூர்த்தியின் மனைவி சுபாஷிணி, ''உங்களுடன் பேசிக்கொண்டிருந்தாரே, அவர் யார்?'' என்று ஆங்கிலத்தில் கேட்டாள்.

''யாரோ பழைய சிநேகிதர்'' என்று பதில் சொன்னார் சிவசங்கரன்.

''அவரைப் பார்த்தால் சிநேகிதர் மாதிரி தோன்றவில்லையே?''

''ஆம்'' என்றார் சிவசங்கரன்.

சுபாஷிணி கலகலவென்று சிரித்தாள். ''நீங்கள் ஏன் இப்படிச் சம்பந்தமில்லாமல் பேசுகிறீர்கள்? மூர்த்திகூட உங்களைப் பற்றிக் கவலைப்படுகிறார்.''

''ஆம்! என்னைப் பற்றிக் கவலைப்பட மூர்த்தி ஒருவர்தான் இருக்கிறார்.''

''நீங்கள் இப்படி ஒரு குற்றவாளியைப் போல நடந்து கொள்வதைப் பார்த்தால் எங்கள் இருவருக்குமே வேதனையாக இருக்கிறது. மூர்த்தியிடம் காரணத்தைச் சொல்ல மாட்டேன் என்கிறீர்களாம். இது நியாயமா?'' என்று கேட்டாள் சுபாஷிணி.

சிவசங்கரன் ஒரு கணம் சுபாஷிணியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார். மறுபடியும் கீழே பார்த்துக்கொண்டே, ''என்னைப் பற்றி இவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்ளும் உங்கள் இருவருக்கும் நான் மிகவும் நன்றிக்கடன்பட்டிருக்கிறேன். எனக்கு மிகவும் களைப்பாக இருக்கிறது. நான் மாடிக்குப் போகிறேன்'' என்று கூறிவிட்டு மெதுவாக மாடியேறிச்சென்றார். அவருடைய உடல் களைத்திருந்தது போலவே, உள்ளமும் மிகவும் சோர்ந்து போயிருந்தது.


தமக்கென்று சீனிவாசமூர்த்தி கொடுத்திருந்த அறையில் சென்று படுக்கையில் சாய்ந்தார் சிவசங்கரன். அவர் கண்முன் மாதவியின் அழகிய முகம் தோன்றியது. ''மாதவி! உனக்கு நான் பெரும் துரோகம் செய்து விட்டேன். உன்முகத்தில் இனி எப்படிவிழிப்பேன்?'' என்று முணுமுணுத்தார்.

அவர் முன்னிருந்த மாதவியின் தோற்றம் மறைந்தது. அதற்குப் பதில் ஒரு மலைப் பிரதேசம் தோன்றியது.

வானோங்கிய பெரியமரங்கள் அடர்ந்த ஒரு பிரதேசத்தில் ஒருவன் துப்பாக்கியுடன் நடந்து வந்துகொண்டிருக்கிறான். பக்கத்திலிருந்து புதரில் ஏதோ சத்தம்

அருள் வாக்கு

ஒரு சமயம் காமமாக இருப்பதே பின்பு கோபமாக ஆகிறது. ரப்பர் பந்தைச் சுவரில் எறிகிறோம். எறிந்த அந்தப் பந்து பின்பு திரும்பி வருகிறது. எறியப் படும்போது அது காமம் போலிருக்கிறது. திரும்பி வருவதைப் போல்வது குரோதம்.



ஸ்ரீ சங்கராச்சாரியார்.

கேட்கிறது. தன்னையும் அறியாமல் அவன் கை துப்பாக்கியை எடுத்துப் புதரை நோக்கிச் சுடுகிறது. 'ஆ' என்ற அலறல் ஒலி கேட்கிறது...

சிவசங்கரன் அதைக் காணச் சகியாதவர்போல் தம் கண்களை அழுத்தி மூடிக்கொண்டார். உடனே எழுந்து வேகமாக அந்த அறையைச் சுற்றிச் சுற்றி நடக்கத் தொடங்கினார்.

சீனிவாசமூர்த்தியும், அவருடைய மனைவி சுபாஷிணியும் சேர்ந்து காலையில் காப்பி அருந்துவதிலிருந்து இரவு விருந்துவரை செய்யும் உபசாரமும், அவர்கள் தம்மிடம் காட்டும் பரிவைப் பற்றியும் நினைத்ததும் அவருக்குச் சிறிது ஆறுதல் உண்டாயிற்று.

அவர்கள் இருவரும்தான் எத்தனை ஒற்றுமையாகவும், அன்பாகவும் இருக்கிறார்கள். இத்தனைக்கும் அவர்களுடைய பாஷைகள் வேறு; ஊர்கள் வேறு. பழக்க வழக்கங்களில் எத்தனையோ வித்தியாசம். சீனிவாசன் தம் பெற்றோர்கள் விருப்பத்துக்கு விரோதமாகவே சுபாஷிணியை மணந்துகொண்டார். சுபாஷிணி விவாகம் ஆகி ஆறு வருஷங்களில் தமிழைப் பேசக் கற்றுக்கொண்டு விட்டாள். அவள் மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த பெண். கல்லூரியில் படித்தவள். சீனிவாசனும் அவளும் எப்படிச் சந்தித்தார்களோ? எப்படிக் காதல் கொண்டார்களோ? அது சிவசங்கரனுக்குத் தெரியாது. ஆனால் அவளைக் கல்யாணம் செய்து கொள்வதற்கு முன்னால் நடந்த ரகளைகள் மட்டும் அவருக்குத் தெரியும். சீனிவாசனே சொல்லியிருக்கிறார்.

அவர்கள் வாழ்க்கை இத்தனை விரோதங்களுக்கிடையிலேயும் அமைதியாக இருப்பதை, தம் அனுபவங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தார் சிவசங்கரன்.

'ஏன் என் வாழ்க்கையில் மட்டும் இப்படி யெல்லாம் நிகழ வேண்டும்? நான் என்ன துர்ப்பாக்கியம் செய்தேன்? நான் மனப்பூர்வமாக நேசிக்கும் மாதவிக்கும் எனக்கும் இடையே இவ்வளவு பெரிய பிளவு ஏற்பட்டு விட்டதே! இது என்றேனும் மாறுமா? நான் செய்த துரோகத்தை மாதவி மன்னிப்பாளா? அவளிடம் சொல்லா விட்டால் எனக்கு அமைதி கிட்ட முடியுமா? மாதவி! மாதவி!! நீ அன்று அப்படி என்னைத் துச்சமாகப் பேசியிரா விட்டால் இப்படி யெல்லாம் நேர்ந்திருக்குமா?' என்றெல்லாம் தொடர்பில்லாமல் சிந்தனை செய்து கொண்டே சிவசங்கரன் நடந்து கொண்டிருந்தார். அவருடைய இதயமே பிளந்து விடுவது போன்ற வேதனை உண்டாயிற்று.

வெகுநேரம் இப்படி அவர் நடந்து சோர்ந்து போனார். வேதனை பொறுக்க முடியாமல் போனதும், தம் கைப்பெட்டியைத் திறந்து அதிலிருந்து மாத்திரைகளை எடுத்தார். மேஜையின் மீது கண்ணாடி ஜாடியில் வைக்கப்பட்டிருந்த தண்ணீரை எடுத்து டம்ளரில் விட்டுக் கொண்டார். இரண்டு மாத்திரைகளையும் வாயில் போட்டு விழுங்கினார். அந்த டம்ளர் தண்ணீரை எடுத்துக் குடித்தார். இச்சமயத்தில் சீனிவாசமூர்த்தி அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார்.

"என்ன சங்கர்! உடம்பு சரியாக இல்லையா? ஏன் இப்படி வியர்த்துக் கொட்டியிருக்கிறது? டாக்டருக்கு 'போன்' பண்ணட்டுமா?" என்று பரபரப்புடன் கேட்டார் சீனிவாசமூர்த்தி.

"வேண்டாம்! ஸ்ரீநிவாஸ்! எனக்கு ஒன்றும் இல்லை" என்றார் சிவசங்கரன்.

"யாரோ உன்னைப் பார்த்துவிட்டுப் போனார்களாமே? சுபாஷிணி சொன்னாள். யார் வந்தார்கள் உன்னைப் பார்க்க? அந்தக் கிருஷ்ணனா?"

"டெலிபோன் பண்ணியவன்தான். ஆனால் அவன் பெயர் கிருஷ்ணனில்லை. பாலகோபால்."

"அவன் யார்?"

"உனக்குச் சொன்னால் புரியாது. அடியிலிருந்து சொல்ல வேண்டும்."

"நீ சொன்னால் நான் கேட்கத் தயாராக இருக்கிறேன்."

"இப்போது ரொம்ப நேரமாகி விட்டது, மூர்த்தி. நாளைக்குக் கட்டாயம் சொல்கிறேன். இப்போதுதான் ஒரு தூக்க மாத்திரை சாப்பிட்டேன். இன்னும் பத்து நிமிஷத்துக்கு மேல் என்னால் விழித்துக் கொண்டிருக்க முடியாது" என்றார் சிவசங்கரன்.

"சரி, நீ தூங்கு" என்று கூறிவிட்டு மிகுந்த கவலையோடு வெளியே சென்றார் சீனிவாசமூர்த்தி. **(தொடரும்)**


இக் கதையில் வரும் ஒரு காட்சியே இவ்விதழ் அட்டைச் சித்திரமாகத் திகழ்கிறது.



இருமலை
நிறுத்த
பெப்ஸ்
உபயோகியுங்கள்

ஜலதோஷம், இருமல், தொண்டைப்புண் பிராங்கைடிஸ், இன்ப்ளுயன்ஸா இவைகள் அபாயத்திற்கிடமான உபாதைகள், பெப்ஸ் மூலம் சுவாச அடைசலை அகற்றுங்கள். பெப்ஸிலுள்ள குணமளிக்கும். மருந்து சத்துகள், இருமலை உடனே நிறுத்தி, ரணத்தை ஆற்றுகின்றன. மேலும் தீங்கிழைக்கும் கிருமிகளை நாசம் செய்து, உங்கள் சுவாசப்பைகள், தொண்டை இவைகளுக்கு இதமளிக்கின்றன. டாக்டர்கள் பெப்ஸை சிபாரிசு செய்கின்றனர். குழந்தைகளும், வயோதிகர்களும் உபயோகிக்கலாம். தீங்கு விளைவிக்கும் மருந்துகள் இதில் இல்லை.

PEPS



பெப்ஸ் தொண்டை மார்பு உபாதைகளுக்கு சமனமூட்டும் வில்லைகள்.

FPY-42-TAM

சோல் ஏஜண்டுகள்:

தாதா அண்டு கம்பெனி


86, நைனியப்ப நாயக் தெரு, சென்னை-3

பாதி விலைக்கும் குறைவு
15 நாட்களுக்கு மட்டும்

எல்லாக் கெடிகாரங்களும் புகழ் பெற்ற தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டவை

பத்து வருஷங்களுக்கு உத்தரவாதம்

இலவசம் – 3 கைக் கெடிகாரங்கள் ஒரே சமயத்தில் வாங்குபவர்களுக்கு ஒரு கைக் கெடிகாரமும், இரண்டு வாங்குவோருக்கு ஒரு பாக்கெட் கெடிகாரமும், ஒன்று மட்டும் வாங்கினால் ஒரு பவுண்டன் பேனாவும் இலவசம்.




பாக்கெட் கெடிகாரம்	26/- 13/-
ரேடியம் பாக்கெட் கெடிகாரம்	30/- 15/-
ஜெர்மனி டைம்பீஸ்	30/- 15/-
உயர்ரக அலாரம்	34/- 17/-



21 ஜு. வாட்டர்புரூப் குரோம்	78/- 39/-
21 ஜு. ,, ரோல்டு கோல்டு	84/- 42/-
15 ஜுவல்ஸ் வாட்டர் புரூப்	75/- 38/-



21 ஜு. வாட்டர்புரூப் குரோம்	84/- 42/-
21 ஜு. ,, ரோல்டு கோல்டு	90/- 45/-
17 ஜுவல்ஸ் வாட்டர் புரூப்	74/- 37/-




15 ஜு. ரோல்டு கோல்டு	78/- 39/-
15 ஜு. ,, 10 மைக்ரோன்ஸ்	76/- 38/-

PIONEER WATCH CO.

POST BOX No. 11428 - CALCUTTA-6


தாமரையின் அழகை நீங்களும் பெறலாம் . .
கேர்த்தியாயும், மிருதுவாயும், பட்டின் மென்மையுடன் கூடிய
எழிலைப் பெற இந்திய மங்கையர்கள் ஆஷா
முகப் பவுடரை உபயோகிக்கிறார்கள்.
உங்கள் விலைக்குகந்த
உங்களுக்குரிய பவுடர்
Asha
ஆஷா முகப் பவுடர்
Asha FACE POWDER
விநியோகஸ்தர்கள்:
ஜியாப்ரே மானேர்ஸ் அண்ட் கோ ப்ரைவேட் லிட்.
பம்பாய்—கல்கத்தா—டில்லி—மதராஸ்


LIPTON'S TEA GIRL
FINEST DUST TEA
LIPTON'S TEAGIRL FINEST
டீ கேர்ல்
டீ
இது சிறந்த ஸ்ட்ராங்
டீ தருகிறது
LIPTON LTD. (Incorporated in England)
LTGC.31 TM
LIPTON'S TEA GIRL
FINEST DUST TEA

ரகுபதி ராகவ



[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

71

மனிதன் அழகைக் கண்டான். அழகிய பொருள்களைத் தான் செய்யும் ஆற்றலையும் பெற்றான். அறிவு வளர வளர எது நன்மை எது தீமை என்பதைக் கண்டு பயனற்றவைகளையும் தீயவைகளையும் விலக்கி, அழகோடு பயனும் பண்பும் கலந்த கற்பனைகளையும் பொருள்களையுமே போற்றும் படியான பகுத்தறிவை அடைந்தான். வாய்க்கு ருசியான பண்டங்களை உண்பதில் மகிழ்ச்சியைக் கண்ட போதிலும் அளவு கண்டு உயிருக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு மட்டும் உண்பதுவே நன்மை என்று கண்டான். பிறருக்காக வாழ்வதில் தனக்கு மட்டும் வாழ்வதைவிட அதிக மகிழ்ச்சியைக் கண்டான். மக்களுக்குப் பணி செய்து அதன் மூலம் ஈசனை வழிபடுவதிலுள்ள ஆனந்தத்தைக் கண்டான். இவ்வாறு அறிவு முதிர்ந்து, ஆண் பெண் சேர்க்கையும் சிற்றின்பத்துக்கு அல்ல, மக்கட்பேறு அடைவதற்காக என்பதை மனித ஜாதி உணர்ந்துவிவாகம் என்கிற வாழ்க்கை முறையை ஏற்படுத்திக் கொண்டது. அதுவின்றி ஆண் பெண் சேர்க்கை அவலட்சணமாகும், அபாயமுமாகும், சமூகத்தையே கொல்லும் சத்துருவாகி முடியும் என்பதை உலகம் முழுதும் மக்கள் ஜாதி அறிந்து கொண்டது. — ஹரிஜன் 4—4—36

மனித வாழ்க்கை என்பது அறிவின் மலர்ச்சியே யாகும். புலன்கள் செல்லும் வழியில் அவற்றை விடாமல் தடுத்து அடக்கி யாள்வதே நன்மையைத் தரும். ஆனபடியால் புலனை அடக்கியாளவே உலகத்தில் விவாக முறை தோன்றிற்று. மக்கட் பேறு விரும்பி அதைப் பெறவும் சிற்றின்பத்துக்கு வேலி போட்டு அடைக்கவும் விவாக முறை உண்டாயிற்று.

யங் இந்தியா, 16—9—26

சந்தானக் கட்டுப்பாடு அவசியம் என்பது உண்மை. யோசனையின்றி மக்களைப் பெற்றுக் கஷ்டப் படுவதில் பயனில்லை; துன்பமே யாகும். ஆனால் மக்கட் பேறு கட்டுப் படுத்துவதற்கு வழி பெரியோர்கள் காட்டியிருப்பது— பிரம்மசரியம் அல்லது புலனடக்கம். தன்னைத்தான் அடக்கியாளுதல். இது தான் நல்ல முறை. மற்றவையெல்லாம் தீமை பயக்கும். இதற்கென்று புதிதாகக் கையாளும் முறைகள் சமூகத்தில் பாவம் பரவச் செய்யும்.

கருவைச் சிதைக்கும் முறைகளை விட்டு விட்டுத் தன்னைத் தான் அடக்கியாள்வதற்கு ஏதேனும் வழியிருந்தால் அதை வைத்திய நிபுணர்கள் காண வேண்டும். அப்படி அவர்கள் கண்டு மக்களுக்கு உதவினால் மக்கள் யாவரும் அவர்களுக்கு நன்றி செலுத்துவார்கள்.

கெட்ட நடத்தைக்கு வழி காட்டுவதாகும் கர்ப்பத்தடை முறைகள். அளவுக்குமிஞ்சி சிற்றின்பத்தில் இறங்குவதற்குத் தூண்டுவதாகும். இந்த முறைகளை விளம்பரப் படுத்தியும் அவற்றைக் கையாளச் சௌகரியங்களை அமைத்துக் கொடுத்தும் வருவதனால் சமுதாயப் பண்பாடே கெட்டுப் போய் வருகிறது. மக்களுடைய ஆரோக்கியமும் குலைந்து வருகிறது. ஒரு நோய்க்கு மருந்து செய்யப் போய், நோயை விட மருந்து பெரிய நோயாகி வருகிறது. மக்கட் பேற்றின் எண்ணிக்கையைக் குறைக்கப் போய்ச் சமூகத்தின் சீலத்தையே அழித்து விடுவோம்.

எதைச் செய்கிறோமோ, அதன் பயனை அனுபவித்தலே நன்மை. சுகமாயினும் துக்கமாயினும் பயனை அனுபவித்தாலே தான் அறிவு பெறுவோம். பயனை விலக்கி விட வழி தேடினோமானால் ஒருநாளும் நல்லறிவைப் பெற மாட்டோம். அளவுக்குமிஞ்சி உண்டவனுக்கு அஜீரணத்தினால் வயிற்றுவலி உண்டாவதும் பிறகு ஏற்படும் லங்கணமும் நன்மையே யாகும். வரம்பு கடந்து தின்றுவிட்டு மருந்துகள் உண்டு தன்னுடைய அக்கிரமத்தின் பலனின்று தப்பித்துக் கொள்வது ஒருவனுக்குத் தீமையையே உண்டாக்கும். பசியைப் பற்றியும் உணவைப் பற்றியும் இதுவாயின், பசுதர்மத்தைப் பற்றியும் அதுவே உண்மை. செயலின் பயனைப்

புது முறைகளைக் கொண்டு விலக்கிச் சிற்றின்பத்தில் ஈடுபட்டோமானால் இயற்கை தேவி நம்மைச் சும்மா விட மாட்டாள். தண்டனை தருவாள் என்பது நிச்சயம். பெருந் தண்டனையாக முடிவில் அனுபவிக்க வேண்டியதாகும்.

புனிதப் பயன்களை அடைய வேண்டுமானால் புனித முறைகளைத் தான் கையாள வேண்டும். மற்ற முறைகள் தீமைகளை விளைத்துச் சமுதாயத்துக்கு நஷ்டமுண்டாக்கும் என்பதில் ஐயமில்லை. **யங் இந்தியா 12—3—25**

பிரஜோற்பத்திக்காக இயற்கையில் அமைந்திருக்கும் சக்தியைக் கண்டபடி பயன் படுத்திக் கெட்டுப் போகலாகாது. அடக்கியாண்டோமானால் இந்த இயற்கை அமைப்பைப் பற்றி வெட்கப் பட வேண்டிய அவசியமே யில்லை. முறையும் வரம்பும் தவறினோமானால் ஆண்டவன் தந்திருக்கும் வரப் பிரசாதமானது பாபத்தில் முடியும். ஆண்டவனுக்கும் மக்கள் சமூகத்துக்கும் செய்த துரோகமாகும்.

ஹரிஜன் 28—3—46

புது முறைகள் மனிதனைக் கேவலம் மிருகமாக்கி விடும். மனிதனுடைய பண்பைக் கெடுத்து அவனை மிருகமாக்குவது வெகு எளிது. மிருகமாக்கும் முறைகளுக்கு அழகிய விளம்பரங்களும் தந்து பிரசுரித்தால் சொல்ல வேண்டியதே இல்லை. இது அக்கிரமம் என்கிற உணர்ச்சியையே இழந்து விட்டுத் தங்கு தடையின்றி அதில் இறங்குவான். கர்ப்பத்தடைக்காரர்கள் செய்யும் பணி இதுவே. **ஹரிஜன் 31—3—35**

படித்துப் பாருங்கள்

யுகப் பிரபாத் (ஹிந்திப் பத்திரிகை)

தென்னாட்டு மண்ணிலே தனி ஒரு சக்தி இருக்கிறது. எந்த மொழியையும் நன்கு கற்று லாகவமாகக் கையாண்டு, அந்த மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் கூட வியப்பில் மூழ்கும்படி செய்து விடுவார்கள் நம் தென்னாட்டவர்கள்.

இதற்குச் சான்று வேறு வேண்டுமா? தேசிய மொழியின் ஸ்தானத்தை அலங்கரிக்கப் போகும் ஹிந்தியிலே புலமை பெற்று எத்தனையோ பேர், ஹிந்தியில் கதை, கட்டுரை, கவிதைகள் எழுதி வருகிறார்கள், வட நாட்டார்களும் வியந்து பாராட்டக் கூடிய நிலைமையில்.

தென்னாட்டில் ஹிந்தி கற்ற அறிஞர்கள் வடநாட்டுப் பத்திரிகைகளையே எதிர் பார்க்க வேண்டிய அவசியம் இல்லாமல் செய்வதற்காகக் கேரள நாட்டைச் சேர்ந்த மாத்ருபூமி காரியாலயத்தார் 'யுகப்பிரபாத்' என்னும் மாதமிரு முறை ஹிந்திப் பத்திரிகையைச் சீரிய முறையில் வெளியிட்டு வருகிறார்கள்.

தென்னிந்திய இலக்கியத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வட நாட்டினருக்குத் தென்னிந்திய இலக்கியத்தை உணர்த்தும் முறையில் இப்பத்திரிகை வெளிவருவதோடு, ஹிந்தி அறிந்த தென்னிந்தியர்களும் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் அமைந்திருக்கிறது.

கிடைக்குமிடம்: மானேஜர், 'யுகப்பிரபாத்' ஹிந்தி பத்திரிகை, மாத்ருபூமி காரியாலயம் கோழிக்கோடு—1 வருஷ சந்தா ரூ. 6. தனிப்பிரதி அணா 4.

சமையலும் சிற்றுண்டிகளும்

நவநாகரிகம் முதிர்ந்துள்ள இந்நாளில் சமையல் கலையில் பெண்களுக்குள்ள திறமையும் ஆர்வமும் குறைந்து வருகின்றன. இதைக் குறித்து ஒரு ஹாஸ்யம் கூட உண்டு: ஒரு வீட்டில் புதிதாக மணம் புரிந்து கொண்ட இளம் தம்பதிகள் குடியிருந்தனர். அந்தப் பெண்ணின் கணவனுக்கு அன்று ஆபீசுக்கு நேரமாகி விட்டது. இன்னும் அவள் சமையலே செய்யவில்லை. நேரம் ஆக ஆக அவள் கணவன் பொறுமை இழந்து, கோபத்தோடு, "எனக்கு நேரமாகி விட்டது. சமையல் ஆவதற்குள் விடிந்துவிடும் போலிருக்கிறதே. நான் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொள்கிறேன்" என்று கூறிப் புறப்பட்டான். உடனே அந்தப்பெண், "கொஞ்சம் இருங்கள், இதோ வந்துவிட்டேன்!" என்று கூறினாள். "எதற்கு?" என்று கேட்டான் அவள் கணவன் வெறுப்பாக. "நானும் டிரஸ் செய்து கொண்டு வருகிறேன். இருவரும் சேர்ந்து ஹோட்டலுக்குப் போய்ச் சாப்பிட்டு விடலாம்!" என்றாள் அந்தப் பெண். அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது!

ஒரு பெண் தன் கணவனுக்கு முகமலர்ச்சியுடன் அறுசுவை யுண்டியளித்து முகம் கோணாமல் நடந்து கொள்வதுதானே நம் பாரதப் பண்பு? இந்தப் பண்பை வளர்த்துக் கொள்வதுதானே முறை?

அருங் கலையான சமையல் கலையில் பெண்கள் பயிற்சியடைவதற்குச் 'சமையலும் சிற்றுண்டிகளும்' என்னும் இப் புத்தகம் பேருதவியாக இருக்கும். பாயசம், பச்சடி, ஊறுகாய், கறி வகைகள், தின்பண்ட வகைகள், சிற்றுண்டி வகைகள் செய்வதற்குத் தேவையான பொருள்கள், செய்யும் முறை, இவற்றையெல்லாம் தெளிவாக இந் நூலாசிரியை விளக்கி யிருக்கிறார். இந் நூலை ஒருமுறை படித்துப் பாருங்கள்; நூலில் கண்ட சிற்றுண்டிகளையும் செய்து பாருங்கள்!

நூலாசிரியை: ஸ்ரீமதி கே. செல்லம்மாள்; பிரசுரம்: சென்ட்ரல் ஆர்ட்பிரஸ், 11, மெக்னிகல்ரோட், சென்னை—31. விலை ரூ. 3.

மக்ளீன்ஸ் *இப்போது* பற்களை முன்னைவிட அதிவெண்மையாக சுத்தம் செய்கிறது!



மகத்தான ஓர் செய்தி! மக்ளீன்ஸ் தயாரிப்பில் இப்போது வியக்கத்தக்கதோர் புதிய பொருள் சேர்க்கப்படுவதால் அதை உபயோகித்து பற்களைச் சுத்தம் செய்யும்பொழுது பற்கள் முன்னைவிட அதிவெண்மையாகவும் சுத்தமாகவும் விளங்குவதுடன் நல்ல ஆரோக்கியத்தைக் குறிக்கின்றது. நீங்களும் மக்ளீன் பற்பசையை உபயோகித்து உங்கள் பற்கள் எவ்வளவு வெண்மையாக விளங்குகின்றன என்று கவனியுங்கள்.

மக்ளீனல் வெண்மையாக்கப்பட்ட பற்கள்

ஆரோக்கியமானதுமட்டுமல்லாமல் பற் சிதைவினின்றும் காப்பாற்றப்படுகின்றன

மக்ளீன்ஸ் பற்பசையினுல் பற்களை சுத்தம் செய்யுங்கள். முதலில் குளுமையும் புதுமை மணம் கமழுவதையும் உணர்வீர்கள். பின்பு பற்கள் முன்னைவிட அதிவெண்மையாக சுத்தம் செய்யப்பட்டிருப்பதை குறிக்கின்றது. உங்களுடைய பற்களின்மேல் படர்ந்திருக்கும் வழுவழுப்பான அசுத்தத்தில் 'ஃபிப்பாபிட்ஸ்' என்று கூறப்படும் அசுத்தம் கலந்திருக்கிறது இந்த 'ஃபிப்பாபிட்ஸ்' முறையே சரியாக அகற்றப்படா விட்டால் அமிலங்கள் பற்களின் இனுமலை அரித்து, பற்கள் சிதைவடைகின்றன. 'ஃபிப்பாபிட்ஸ்'ஸை அறவே அகற்ற, இதை கரையச் செய்வதுதான் சரியான வழி. மக்ளீன்ஸ் பற்பசை ஒன்றில் மட்டுமே 'ஃபிப்பாபிட்'ஸை கரைக்கக்கூடிய விசேஷ பொருள் சேர்க்கப்பட்டிருக்கிறது. இது 'ஃபிப்பாபிடஸை' மிருதுவாக, அபாயமின்றி. சீக்கிரத்தில் கரைத்து அப்புறப்படுத்துகிறது. இதுவே பற் சிதைவினின்றும் பற்களைத் தவிர்ப்பதற்கான சிறந்த மார்க்கம்.

சுத்தமான, வெண்ணிற, ஆரோக்கிய பற்களை அடைய தினந்தோறும் காலையிலும் இரவிலும் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையை உபயோகித்து பற்களைச் சுத்தம் செய்யுங்கள்.

மக்ளீன்ஸ் பிலிமி ரிம் ஜிம் —சினிமா உலகத்தில் சமீபத்திய செய்திகளும் சங்கீதமும் சேர்ந்த இந் நிகழ்ச்சியை பிரதி திங்கட்கிழமைதோறும் இரவு 8-30 முதல் 9 மணி வரை ரேடியோ ஸிலோன் 41 மீட்டர்களில் கேளுங்கள்.



மக்ளீன்ஸ் பற்களை அதிவெண்மையாக சுத்தம் செய்கிறது

MTY 43 TAM



குட்டித் தமாஷ்

"ஸார்! நான் புது பர்ஸ் வைத்திருந்தேனே, அது தொலைந்து விட்டது!"

"அப்படியா? அந்த அழகான பர்ஸை நானே உங்களிடம் கேட்டு வாங்கிக் கொள்ளலாம் என்றிருந்தேனே?"

"அடாடா! நீங்கள் அப்பொழுதே கேட்டிருந்தால் கொடுத்திருப்பேனே!"

"அதற்கென்ன! இன்னொன்று வாங்குவீர்களோன்னோ, அதை எனக்குக் கொடுத்து விடுங்கள், போதும்!"

★

குடை ராட்டினத்தில் ஒருவர் இறங்காமல் சுற்றிக் கொண்டிருந்தார். அவருக்கு அருகில்



நின்று கொண்டிருந்த ஒருவர், "ஏன் ஐயா இதுவரை நூறுதடவை இறங்காமல் சுற்றிக் கொண்டிருக்கிறீரே? தலையைச் சுற்ற வில்லையா?" என்றார் அதிசயத்துடன்.

"தலையைச் சுற்றிக் கீழே விழுந்தாலும் இன்னும் ஐம்பது சுற்று சுற்றி விட்டுத்தான் கீழே இறங்கப் போகிறேன்!"

"அப்படி ஏன் செய்கிறீர்கள்?"

"இந்தக் குடை ராட்டினச் சொந்தக்காரன் எனக்கு இரண்டு ரூபாய் கடன் தர வேண்டும்! நான் இதைத் தவிர அவனிடமிருந்து பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு வேறு வழியில்லை!"

★

"முனியா! என்னடா ஒட்டுக் கேட்கிறாய்?"



"இல்லையம்மா! ஐயாவிடம் யாரோ ஒட்டு கேட்டுக் கொண்டு வந்திருக்கிறாங்க!"

★

கணவன் (ஸ்டேஷனுக்குள் நுழைந்ததும் சிறிது யோசனையுடன்): அடாடா! உன் ஹார்மோனியப் பெட்டியைக் கொண்டு வராமற் போனமே!

மனைவி (சிறிது கோபத்துடன்): என்ன பரிகாசம் வேண்டிக் கிடக்கிறது. என்னுடைய பாட்டைப் பற்றிப் பரிகாசம் பண்ண இதுவா சமயம்?

கணவன்: அடாடா! உன்னை நான் பரிகாசம் செய்ய வில்லை. நாம் ஊருக்குப் போக வாங்கிய டிக்கட்டுகளெல்லாம் அதற்குள்ளே தானே இருக்கின்றன!

அடுத்த வீட்டுக்காரி (குதூகலமாகத் தன் பக்கத்து வீட்டுக்காரியிடம்): நாங்கள் சீக்கிரத்திலே நல்ல மனிதர்கள் வசிக்கிற இடத்துக்குக் குடி போகிறோம்!

பக்கத்து வீட்டுக்காரி: நாங்கள்கூடத்தான்!

அடுத்த வீட்டுக்காரி (ஆச்சரியத்துடன்): என்ன நீங்கள்கூட வேறு வீட்டுக்குக் குடி போகிறீர்களா?

பக்கத்து வீட்டுக்காரி: இல்லை, இல்லை; நாங்கள் இந்த வீட்டிலேயேதான் இருக்கப் போகிறோம்!

★

தேர்தலுக்கு நிற்பவர்:— இந்தாருங்கள், பணம்! நீங்கள் அவசியம் எனக்கே வோட்டைப் போடவேண்டும்!

முதல் மனிதர்:— நமக்குப் பணம் வேண்டாங்க!



பக்கத்திலிருப்பவர்:—அட வாங்கிக் கொள்ளுங்க, ஐயா! இப்பொழுதுதான் ஏழைங்களுக்குப் பணம் கொடுப்பாரு. அப்புறம் அவர் ஜயித்து விட்டால் ஏழைகளுக்கு அவராலே ஒரு லாபமும் இருக்காது!

★

"உங்கள் கல்யாண அழைப்பு வந்தது. நான் வெளியில் எங்கிலும் செருப்பில்லாமல் வர முடியாது. கல்யாணத்துக்கு வந்தால் செருப்பு நிச்சயம் தொலைந்து போகிறது. அதனால் கல்யாணத்துக்கு வர முடியாததற்கு மன்னிக்கவும்."

—ஒரு கடிதம்

★

"ஏன் ஐயா! உமக்கு என்ன? அநாவசியமாகத் தும்மிக் கொண்டிருக்கிறீர்கள்? நாங்கள் ஒன்றும் சுப காரியத்தைப் பற்றிப் பேச வில்லை!"



★

கடன் கொடுத்தவர்: நான் கொடுத்ததெல்லாம் திருப்பிக் கொடுத்து விடுவதாகச் சொன்னீர்களே, எப்பொழுது தரப்போறீங்க?

பயில்வான்: கையிலே கொஞ்சம் பலம் வந்ததும் திருப்பித் தந்துவிடலாமென்று இருக்கேன்!

★


"ஸார்! இப்பொழுது மணி என்ன இருக்கும்?"

"நிச்சயமாக மணி ஆறு ஆகி யிருக்காது!"



"கடிகாரமில்லாமலே எப்படி இவ்வளவு சரியாகச் சொல்கிறீங்க?"

"ஆறுமணி அடிச்ச அப்புறந்தானே நீங்க எனக்கு லேலை கொடுப்பீங்க!"



உனக்கு மட்டும்

நா. பார்த்தசாரதி

பழனி மலையில் கோயிலுக்கு வெளியே தென்புறத்துப் பிராகாரத்தில் உட்கார்ந்து யோசனையில் மூழ்கியிருந்தேன். பின்புறம் கொடைக்கானல் மலைத்தொடர் நீலக் காரிருளின் நடுவே பனியிலும் மேகத்திலும் நெய்த வெண்பட்டுப் போர்வைக்குள் உறங்கிக் கொண்டிருந்தது. கீழே ஊர் விளக்குகள் மினுக்கிக் கொண்டிருந்தன. ஊரின் ஓசைகளும் சந்தடிகளும் எட்டாத உயரத்தில் உட்கார்ந்திருந்தேன்.

* * *

பார்வதி! கதையை மேலே எழுதுவதற்கு முன்னால் உனக்கு ஒரு வார்த்தை. உன்னைப் பற்றித்தான் எழுதப் போகிறேன் என்பதை இதற்குள் நீ புரிந்து கொண்டிருப்பாய். ஆனால் யாருக்காகவோ, எதற்காகவோ, எதையோ, எழுதுகிறேன் என்று நினைத்து நீ படிக்காமல் இருந்துவிடக் கூடாது அல்லவா? உன்னையே நினைத்து, உன்பொருட்டு, உனக்கு மட்டுமே இதை எழுதுகிறேன். ஏக்கத்தை உண்டாக்கியவள் நீ. அன்பை அளித்து மறைந்தவள் நீ. உனக்குத்தானே சொல்ல வேண்டும்? நீ எங்காவது இருக்கத்தான் இருப்பாய்! ஆளைக் கொள்ளை கொள்ளும் அந்த அழகும் உன்னோடு இருக்கத்தான் இருக்கும். இதை நீ படிக்காமலிருக்கமாட்டாய்! இவ்வாறெல்லாம் எனக்கு நானாகவே நம்பிக்கொண்டுதான் சிதறிப்போன ஆசையின் பின்னங்களை இப்படி எழுத்தில் வாரி இறைத்திருக்கிறேன்.

ஊர் சந்தடி நிறைந்திருந்தால் என்ன? மயான பூமிபோல் அமைதியாக இருந்தாலென்ன? விளக்குகள் மினுமினுத்தால் என்ன? தனி இடத்தில் தற்கொலை செய்து கொள்வதற்காக உட்கார்ந்து கொண்டிருப்பவனுக்கு இதனாலெல்லாம் ஆகவேண்டியதென்ன? ஆகப்போவதுதான் என்ன?

மூன்று தடவைகள் பரீட்சையில் தவறிவிட்டு, மாதம் முப்பது ரூபாய்ச் சம்பளத்தில் ஒரு வேலை கூடக் கிடைக்காமல் திண்டாடிக் கொண்டிருந்த சமயம் அது. அன்றாடங் காய்ச்சியான ஒரு ஏழைக் குடும்பத்து வாலிபனுக்கு இந்த வறண்ட நிலையை எவ்வளவு காலம் சகித்துக் கொண்டிருக்க முடியும்? வீட்டுக்கும் பாரமாகத் தனக்கும் பாரமாக வாழ்வதை விடச் சாவது எவ்வளவோ மேல்.

அப்போது எனக்கு இருந்த மன நிலையில் அவநம்பிக்கையும், வறட்சியும் தற்கொலை நினைவுகளும், இடைவிடாமல் குமுறிக் கொண்டிருந்தன. எங்கும் புறக்கணிப்பு, எதிலும் தடை, வாழத் துடிதுடிக்கும் வயசில் வசதியற்ற நிலை. இப்படி இருந்தால் எந்த இளைஞனுக்குத்தான் தற்கொலை நினைவு தோன்றாது?

நான் பள்ளிக்கூடத்தில் படித்த புத்தகங்களையும், பேப்பர்களையும் பழைய சாமான்களையும் விலைக்குப் போட்டுச் சேர்த்து வைத்திருந்த பத்து ரூபாய்ப் பணத்தை எடுத்துக் கொண்டேன். உடுத்திய அரை வேஷ்டியோடும் போட்டுக் கொண்டிருந்த மேல் சட்டையோடும் வீட்டில் யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் கிளம்பிவிட்டேன். வீட்டிலிருந்து கிளம்பும்போது இரவு ஏழேகால் மணி. கால் போன போக்கில் எங்கெல்லாமோ நடந்து பேச்சியம்மன் படித்துறை வழியே வைகையைக் கடந்து செல்லூர் ரஸ்தாவை அடைந்தேன். மேற்குப் புறம் திரும்பித் தத்தனேரி ரோட்டில் மதுரைப் பாலத்தை நோக்கிச்

சென்றபோது பாதை வழியே பஸ் வந்தது. கையை நீட்டி நிறுத்தி அதில் ஏறிக்கொண்டேன் அது 'எந்த ஊருக்குப் போகிற பஸ்?' என்றுகூடப் பார்க்கவில்லை. ஏறி உட்கார்ந்து கொண்டபின் பஸ்கண்டக்டர் டிக்கெட்டுக்குப் பணம் கேட்டபோதுதான் அது பழனிக்குப் போகிறது என்று தெரிந்தது

கண் காணாத இடத்தில் தெரிந்தவர்களுடைய முகத்தில் விழிக்காமல் உயிரைப் போக்கிக் கொள்ள வேண்டும். 'அந்த இடம் பழனியாகத்தான் இருக்கட்டுமே!' என்று எண்ணிக் கொண்டேன். சாதாரண நாளாக இருந்தால் மாலை நாலரை மணிக்கு மேல் மதுரையிலிருந்து பழனிக்குப் போவதற்கு பஸ் கிடையாது. தைப் பூசத்துக்காக ஸ்பெஷல் பஸ் விட்டிருந்ததனால் நான் அந்த நேரத்திலும் அன்று பழனிக்குப் போவதற்கு முடிந்தது.

முன்பின் போய்ப் பழக்கமில்லாதவன் புது ஊருக்கு நள்ளிரவில் போய் எங்கே இறங்குவது? எப்படித் தங்குவது? இதைப்பற்றியெல்லாம் யோசிக்கவே தோன்றவில்லை. கலங்கிப்போன மனத்துக்கு, வேதனையால் தளர்ந்திருக்கும் சந்தர்ப்பத்தில் முன்யோசனை குறைவு. நடக்கப்போவதை எண்ணி வருவனவற்றை அனுமானித்து, எச்சரிக்கையாக இருக்கும் இயல்பு வெறுப்பும் வேதனையும் நிறைந்த உள்ளத்துக்குக் கிடையாது.

பஸ் பழனியை அடையும் போது ஏறக்குறையப் பன்னிரண்டுமணி. வழியில் ஒட்டன் சத்திரத்தில் பஸ் நிற்குமிடத்தில் நாலைந்து மலைப் பழங்களை வாங்கிச் சாப்பிட்டதுதான்! இரவுச்சாப்பாட்டுக்கு அது போதும்.

சட்டைப்பையில் ஏழு ரூபாய் பதினைந்தணா மீதப்பணத்தோடும் மனத்தில் இவ்வளவென்று தொகை வகுத்துச் சொல்ல முடியாத கவலைகளோடும், பஸ்ஸிலிருந்து இறங்கினேன். புதிய இடம், புதிய ஆள், புதிய பார்வை. விழிகள் மிரண்டு மிரண்டு சுழன்றன. யார் யாரிடமோ வழி விசாரித்துக் கொண்டு மலை அடிவாரத்திலிருந்த ஒரு சத்திரத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். ஆறணா வாடகையில் ஒரு அறை பிடித்துத் தங்கினேன்.

உள்ளத்தில் ஒரே குழப்பம். உடலில் அலுப்பு. சாவுக்கு ஆசைப்பட்டுப் புது இடத்தைத் தேடிவந்தால்மட்டும் போதுமா? மனம் திடீரென்று துணிய மறுக்கிறதே! அறையை உட்புறமாகத் தாழிட்டுக் கொண்டு வெகு நேரம் யோசித்தேன்.

உயிரை எந்தெந்த விதங்களில் போக்கிக் கொள்ளலாம்? தினப் பத்திரிகைகளிலும் கதைகளிலும் தற்கொலைகளைப் பற்றி எவ்வளவோ நாட்கள், எத்தனையோ பல சம்பவங்களைப் படித்திருக்கிறேன். ஆனால் சொந்த அநுபவத்துக்கென்று பயன்படுத்தத் தேடும் போது அவையெல்லாம் அசாத்தியமானவையாகத் தோன்றுகின்றன. பயங்கரமாகவும் குரூரமாகவும் படுகின்றன.

சிந்தித்தபடியே வெறுந் தரையில் படுத்து உறங்கிவிட்டேன். அன்று இரவு அப்படியே கழிந்துவிட்டது. மறுநாள் காலையில் குளித்து விட்டு மலைக்குப் போனேன். முருகனைத் தரிசித்துவிட்டு மலைப்பிராகாரத்தில் சுற்றி வரும்போது, 'தற்கொலை செய்து கொள்வதற்கு இதைவிட வசதியான இடம் வேறில்லை' என்று தீர்மானித்தேன்.

மலையின் தென்புறச் சரிவில் ஒரு பெரிய பூவரச மரம். கைக்கு எட்டுகிறாற்போல ஒரு கிளை தென்புறத்தில் பள்ளத்தை நோக்கி இறங்கியிருந்தது. சாவதற்குக் கூட முன் கூட்டியே திட்டம்போடவேண்டியிருக்கிறதே?

அந்த மரக் கிளையில் ஒரு பாக நீளமுள்ள கயிற்றைக் கட்டிக் கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டு தொங்கிவிட்டால் காரியம் முடிந்து விடும். திருவிழாக் காலம் ஆகையினால் மலைமேல் ஜனசந்தடி ஓய்ந்து தனிமைபெறுவதற்கு இரவு பதினொரு மணிக்கு மேலும் ஆகலாம். ஆனாலும் பரவாயில்லை. அதுவரை காத்திருந்தாவது எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டியதுதான்.

பகற்பொழுதை எப்படியோ கழித்துவிட்டேன். அவ்வளவு பெரிய ஊரில் திருவிழாக் கோலாகலத்திலும் கூட்டத்திலும் பொழுதைக் கழிப்பதா பெரிய காரியம்?

இரவு எட்டரை மணி. சாப்பாட்டை முடித்துக் கொண்டேன். ஜன்மத்திலேயே கடைசிச் சாப்பாடு அது! சத்திரத்து அறையில் எனக்குச் சொந்தமென்று சொல்லிக்கொள்ள எந்த மூட்டை முடிச்சுமில்லை. எல்லாச் செலவும் போக எஞ்சியிருந்த ஆறரை ரூபாய்ப் பணமும் சட்டைப் பையிலேயே இருந்தது. ஆனாலும் அறையை இழுத்துப் பூட்டிச் சாவியையும் பைக்குள்ளேயே போட்டுக் கொண்டேன். அது இனிமேல் என்னிடம் இருக்க வேண்டிய அவசியமில்லை. மரணப்பூட்டையே திறக்கத்துணிந்தவனுக்கு அறையின் பூட்டைத்



திறக்கும் சாவி தேவையில்லைதான். ஆனாலும் எனக்கென்னவோ அது என்னிடம் இருக்க வேண்டுமென்று தோன்றியது.

மனம் பதற உடல் நடுங்க, ஏதோ செய்யத் தகாத காரியத்தைச் செய்யத் துணிந்தவன் போல் படிகளில் ஏறி மலையுச்சியை அடைந்தேன். கடைசித் தடவையாக முருகனைக் கண்குளிரத் தரிசித்துக் கொண்டபின் காலையில் பார்த்து வைத்திருந்த மரத்தடியை அடைந்தேன்.

கோவிலுக்கு வெளியே மலைப்பிராகாரத்திலிருந்த விளக்குகளை எல்லாம் அணைத்துவிட்டார்கள். மணியும் பதினொன்றுக்குக் குறையாமல் ஆகியிருந்தது. சுற்றிலும் இருள் கவிந்து விட்டது. மேல் துண்டை இரண்டாகக் கிழித்துக் கயிறுபோல முறுக்கினேன். சுருக்குப் போட்டேன். இறுதியாக ஒரு முறை சுற்று முற்றும் பார்த்தேன். பார்த்தவன் அப்படியே அரண்டுபோய் நின்றேன். இருளில் நிழல் வடிவமாகத் தெரிந்த அந்தக் காட்சி என்னைத் திடுக்கிடச் செய்தது. பத்துப் பன்னிரண்டடிக்கு அப்பால் இருந்த மற்றோர் மரத்தில் என்னைப் போலவே வேறொரு மனித உருவமும் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டிருப்பதைக் கண்டேன். சில விநாடிகள் என் கண்களையே என்னால் நம்ப முடியாமல் இருந்தது.

தான் விரும்பிச் செய்து கொள்ளுகிற ஓர் தவறான காரியத்தை மற்றவர் செய்து கொள்ளக் கண்டால் மனித மனம் திடுக்கிடுகிறது. அது தழும்பேறிப் போன இயற்கை.

குபீரென்று என் கையிலிருந்த சுருக்குக் கயிற்றைத் தூர எறிந்துவிட்டு அந்த மரத்தை நோக்கி வேகமாக ஓடினேன்

''யாரது? நில்லுங்கள்....நில்லுங்கள்.. வேண்டாம்'' என்று இரைந்து கத்திக்கொண்டே ஓடினேன்.

அந்த உருவத்தினிடமிருந்து பதில் வரவில்லை.

'பேயா? பிசாசா?—அல்லது நம் கண்களை ஏமாற்றும் வெறும் பிரமையா?'

''யாரது? பதில் சொல்லுங்கள்!'' என் தைரியத்தை எல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு கத்தினேன்.

''நான்தான்...'' மிரண்டு குமறுகிற தொனியில் ஓர் இனிய பெண் குரல் என் காதுகளில் ஒலித்தபோது எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''நான்தான் என்றால்....யார்?....இந்த மாதிரி அசட்டுத்தனம் செய்யலாமா? எல்லோரையும் காத்து அருள் புரியும் முருகன் சன்னிதிக்குப் பின்புறமே இந்த அக்கிரமத்தைச் செய்யத் துணியலாமா?'' என் குரலில் அதட்டும் தன்மை ஒலித்ததைக் கண்டு நானே வியந்து கொண்டேன். அந்தப் பெண்ணை அதட்டும்போது சற்றுமுன் அதே அக்கிரமத்தை அதே இடத்தில் நானும் செய்து கொள்ள இருந்தேனென்பதை மறந்து விட்டேன். அப்படி மறந்துவிடுவதுதானே மனித சுபாவம்!

''அதைத்தான் நானும் திருப்பிக் கேட்கிறேன்! நீங்கள் யார்? ஏதோ என் வேதனை எனக்கு!''—குரல் இளங் குரலாகத்தான் ஒலித்தது.

''வேதனைகள் எல்லோருக்கும் எப்போதும் உண்டு. அம்மா! உங்கள் குரல் இளங் குரலாகத் தென்படுகிறது. இந்த வயதில் இவ்வளவு விரக்தி கூடாது. உயிரைக் கொடுத்தவனுக்கு எப்போது அதைத் திருப்பி எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது தெரியும். அவனை முந்திக் கொண்டு நாமாகவே அதை அவனிடம் ஒப்படைக்க முயல்வது திருஷ்டியோடு எதிர் நீச்சப் போடுவதாகும்..''

''ஐயா! நீங்கள் யாராயிருந்தாலும் சரி. உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். பேசாமல் போய்ச் சேருங்கள். எனக்கு வேண்டாம், இந்த வறட்டு வேதாந்தமெல்லாம்..''

''அப்படிச் சொல்லாதீர்கள். வாருங்கள், கீழே போகலாம்.''

அந்தப் பெண் கீழே வர முடியாதென்று சண்டித்தனம் செய்தாள். சுயத்திலும் பயத்திலுமாக அவளை மிரட்டி அங்கிருந்து அவளைக் கீழே அழைத்துக் கொண்டு போனேன்.

என் இதயத்தில் அப்போது என்ன என்ன எண்ணங்கள் தோன்றின, தெரியுமா?



''முருகா! நீ கண் கண்ட தெய்வம்! உயிர்களின் ரட்சகன். தற்கொலைக்காக உன் கோவிலை நாடி வந்தேன். நீ என்னைக் கொண்டு என்னையே காப்பாற்றி விட்டாய்! என்னை மட்டுமா? இன்னொரு பெண்ணையும் காப்பாற்றச் செய்து விட்டாய்! பிழைப்பது, பிழைக்கச் செய்வது, வாழ்வது, வாழ்விப்பது! இதுதான் உன் அருள் போலும்.''

இருளில் படிகளின் பாதையாக இறங்குவது சாத்தியமில்லை. இருவரும் சிறு ரோடு போலிருந்த யானைப் பாதை வழியே மலையிலிருந்து கீழே இறங்கினோம். அவள் முகத்தையோ, உருவத்தையோ, இருளில் சரியாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை. அடிவாரத்துக்கு வந்து சேர்ந்ததும் தெரு விளக்கின் வெளிச்சத்தில் ஒருவரை ஒருவர் நன்றாகப் பார்த்துக் கொண்டோம். நான் எதிர்பார்த்ததை விட அதிகம் சிறு வயது அவளுக்கு. பதினெட்டு அல்லது பத்தொன்பது வயது இருக்கும். பருவத்தின் அழகை எடுத்துக் காட்டும் வளர்ச்சி. வளர்ச்சியோடு இயைந்த வாளிப்பு. வஞ்சிக் கொடி துவண்டு நிற்பது போல் அந்த ஒற்றை நாடியான சௌந்தரிய சரீரம் எனக்கு முன் தெரு விளக்கின் மங்கிய ஒளியில் துவண்டு நின்றது.

''உனக்கு எந்த ஊர்?''

சிறிது நேரம் அவள் பதிலே பேசவில்லை. கால் பெருவிரலால் தரையைக் கீறிக்கொண்டு நின்றாள்.

''உன்னைத்தான் கேட்கிறேன்! பேசமாட்டாயா?..உனக்கு எந்த ஊர்?''

''எனக்குத் தாராபுரம்..'' இரண்டு நீளமான ரோஜா மொட்டுக்களைப் பூட்டி வைத்திருந்தாற் போன்ற அந்த அழகிய உதடுகள் மெல்லத் திறந்தன.

''உன் பெயர் என்னவோ?''

இப்படிக் கேட்டவுடன் தலை நிமிர்ந்து தீர்க்கமாக என்னை ஒரு பார்வை பார்த்தாள் அவள். பின்பு மெல்லிய குரலில் பதில் கூறினாள்: ''என் பெயர் பார்வதி.''

''தனியாகத்தான் பழனிக்குப் புறப்பட்டு வந்தாயா?''

''தற்கொலை செய்து கொள்ள வருகிறவர்கள் தனியாக வராமல் நாலைந்து பேரைத் துணைக்குக் கூட்டிக்கொண்டா வருவார்கள்?'' வறண்ட—உணர்வற்ற சிரிப்பு ஒன்று அவளிடமிருந்து கிளம்பிற்று.

''அதற்குக் கேட்கவில்லை! இந்த வயதில் இப்படிப்பட்ட துணிச்சல் ஒரு பெண்ணுக்கு இருக்க முடியுமா என்று ஆச்சரியமாக இருக்கிறது. அதனால்தான் கேட்டேன!''

''அதே கேள்வியை நான் உங்களைத் திருப்பிக் கேட்டால் என்ன பதில் சொல்வீர்களோ? இந்த வயதில் இப்படித் துணிச்சல் ஒரு ஆணுக்கு..?''

எனக்குப் பகீரென்றது!

''என்ன? நீ எதைச் சொல்லுகிறாய்?''

''எதையா? நீங்கள் அந்தப் பூவரச மரத்தடியில் என்ன செய்து கொண்டீர்கள் என்பது எனக்கும் தெரியும்!'' குறும்புத்தனம் இழையோடும் அவள் வாயிதழ்களில் சிரிப்பொலி எழுந்தது.

முதல் தடவையாக அந்தப் பெண்ணுக்கு முன்னால் நான் தலை குனிந்தேன். என் துணிவு அடிபட்டுச் செத்த பாம்பு மாதிரிச் சுருண்டு விழுந்து விட்டது.

''சரி! இனிமேலும் இந்த நள்ளிரவில் இப்படி மலையடிவாரத்தில் தனி வழியில் நீயும் நானும் நின்று கொண்டிருப்பது பொருத்தமில்லை. ஜனங்களோ, ரோந்து போலீஸ்காரர்களோ இந்த நிலையில் உன்னையும் என்னையும் பார்த்தால் தப்புக் கணக்குப் போட்டு விடுவார்கள்! வா..போகலாம்..''

''எங்கே போவது..?''


''நீ எங்கேயாவது தங்கி யிருக்கிறாயா?''

''தங்கவாவது ஒன்றாவது? தாராபுரத்திலிருந்து இரவு எட்டரை மணிக்கு மேல் தானே வந்தேன்? பாழும் உயிர் இதற்குள் போயிருக்க வேண்டியது! நீங்கள் போட்டித் தற்கொலைக்கு வந்து எல்லாம் குட்டிச்சுவராய் அடித்து விட்டீர்கள்!''

''உன்னாலே நான் கெட்டேன். என்னாலே நீ கெட்டாய். அப்படித்தானே?''

அவள் பதில் சொல்லாமல் சிரித்தாள். மனத்தைக் கவரும் அந்தக் கன்னிச் சிரிப்பில் என் உணர்வுகள் கிறங்கின.

''நான் ஒரு சத்திரத்தில் அறை எடுத்திருந்தேன். இன்னும் சாவி என்னிடம்தான் இருக்கிறது. நீ கதவை உட்புறம் தாழிட்டு



இந்திய சோப் மற்றும் டாய்லெட் வகைகள் தயாரிப்பாளர்கள் சங்கத்தினர் நடத்திய 'சுலோகன்' போட்டியில் பம்பாய் மாதுங்காவைச் சேர்ந்த திரு சாரங்கராஜன் ரூ 1000 பரிசு பெற்றார். அப் பரிசை சினிமா நட்சத்திர நடிகை ஸ்ரீமதி மெஹதாப் வழங்கினார். சங்கத்தின் தலைவர் ஸ்ரீ எஸ். பி. கோத்ரெஜ் கை தட்டித் தமது மகிழ்ச்சியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறார்.

அறைக்குள் படுத்துக் கொள். நான் சத்திரத்து வெளிவராந்தாவில் படுத்துக் கொள்கிறேன்.''

''நாளை பொழுது விடிந்தால் உங்களையும் என்னையும் சேர்த்துப் பார்க்கிற உலகம் என்ன எண்ணும்?''

''உலகம் ஆயிரம் எண்ணும். உனக்கு உன் மேலும் என் மேலும் நம்பிக்கை இருக்கிறதா இல்லையா? உன்னால் முடியுமானால் வரலாம். முடியாவிட்டால் அப்புறம் நான் வற்புறுத்தத் தயாராயில்லை.''

''உங்களை நான் எப்படி நம்புவது? என்னை உள்ளே படுத்துக் கொள்ளச் சொல்லி விட்டுத் திரும்பவும் ஓசைப்படாமல் மலைக்குப் போய் அந்தப் பூவரச மரத்தில் தொங்கி விட்டால்?''—அவள் என்னை மறுபடியும் கேலி செய்தாள்.

''உன்னை மட்டும் நான் எப்படி நம்புவது? வெளி வராந்தாவில் நான் தூங்கிய பிறகு ஓசைப்படாமல் கதவைத் திறந்து கொண்டு போய் உயிரை மாய்த்துக் கொண்டால்..?''

இந்தப் பரஸ்பர விவாதத்தால் இருவருமே சிரித்து விட்டோம்.

''சரி, நான் வருகிறேன். வாருங்கள். உங்கள் சத்திரத்துக்குப் போகலாம்.'' கடைசியாக அவள் என்னோடு வர இணங்கினாள்.

இருவரும் மலையடிவாரத்திலிருந்து சத்திரத்துக்குப் போகிற பாதையில் நடந்தோம்.

நல்ல வேளையாக சத்திரத்துவாசற் கதவு திறந்தே இருந்தது. சத்திரத்து வேலைக்காரன் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான். அந்த நிலையில் அந்தப் பெண்ணோடு என்னை யாரும் பார்த்துவிடக் கூடாதே என்று உள்ளூற பயமாக இருந்தது.

பூட்டைத் திறக்கும் ஓசைகூடக் கேட்காமல் மெல்லக் கதவைத் திறந்தேன்.

''பார்வதி! உள்ளே போய்க் கதவைத் தாழிட்டுப் படுத்துக் கொள்.''

அந்த அழகிய யுவதி அறைக்குள் போனாள்.

''இந்தா! இந்தச் சட்டையை உள்ளே மாட்டி வை. பணம் இருக்கிறது!'' நான் சட்டையைக் கழற்றி அவளிடம் கொடுத்தேன். அவள் புன்னகையோடு அதை வாங்கிக் கொண்டாள்.

கதாசிரியர்கள் எந்த எந்தச் சந்தர்ப்பங்களில் எல்லாமோ காதல் பிறப்பதாக அளக்கிறார்களே! இங்கே எனக்கும் பார்வதிக்கும் இடையே பிறந்த காதல் சாவின் முனையிலே தோன்றியது. வாழ்க்கை முட்களில் விழுந்து வேதனையடைந்த இரண்டு இளம் உயிர்கள் தற்கொலை என்னும் இலட்சியத்தை எட்டிய போது அகஸ்மாத்தாகப் பிணைந்த இணைப்பு!

'பயம்', 'பறிபோய் விடுமோ' என்ற அவநம்பிக்கை — இதெல்லாம் ஏழைக்குத்தான் அதிகமாக இருக்கின்றன. பையிலிருந்த ஆறரை ரூபாய் காசுகளை எவனாவது தட்டிப் பறித்துக் கொண்டு போய் விடுவானோ என்று பயந்து உள்ளே பார்வதியிடம் கொடுத்து வைத்திருக்கிறேன் நான். இந்தப் பாலக்காட்டுப் பேர்வழியோ ஆயிரக்கணக்கில் பெறுமானமுள்ள நகைகளுடன் திறந்த கதவை மூடாமல் தம் அறையில் நிம்மதியாக உறங்குகிறார்! விசித்திரமாகத்தான் இருக்கிறது.

அறைக்குள்ளே வளையல்கள் குலுங்கும் ஒலி இனிமையாகக் கேட்டது. சில மணி நேரப் பழக்கத்துக்கு எவ்வளவு சக்தி? அவளையே எண்ணி ஏங்க வைத்து விட்டாளே!

மூன்றுமணி வாக்கில் நானும் உறங்கி விட்டேன். சர்க்கரைப் பாகு போல இனிய எண்ணங்களுடன் கண்களை உறக்கம் தழுவி விட்டது. என்னை மறந்து தூங்கி விட்டேன்.

எவ்வளவு நேரம் அப்படித் தூங்கினேனோ, எனக்கே தெரியாது.

விலாவில் ஏதோ ஒரு தடிக்கம்பால் ஓங்கிக் குத்தின மாதிரி இருந்தது! அலறி உளறிக் கொண்டே வாரிச் சுருட்டி எழுந்திருந்தேன். பொழுது விடிந்திருந்தது. ஏழெட்டு போலீஸ்காரர்கள் சத்திரத்து வராந்தாவில் என் அறை வாசலில் என்னைச் சுற்றி நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன்தான் கையிலிருந்த லத்திக் கம்பினால் என்னை விலாவில் குத்தி எழுப்பியிருந்தான்.

என் எதிரே அடுத்த அறையில் இருந்த பாலக்காட்டு வியாபாரி முகத்தில் என்னும் கொள்ளும் வெடிக்க ஆத்திரத்தோடு நின்று கொண்டிருந்தார். அவர் கை விரல்களில் மோதிரம் ஒன்றுகூட இல்லை. என்னுடைய அறையைப் பார்த்தேன். கதவுகள் திறந்து கிடந்தன. உள்ளே ஒரு 'ஸூட்கேஸ்' திறந்து அதிலிருந்த பொருள்களெல்லாம் அலங்கோலமாகச் சிதறப்பட்டிருந்தன. உள்ளே பார்வதி

யைக் காணவில்லை. பாலக்காட்டுக்காரரின் சூட்கேஸ் என் அறையில் கிடப்பதற்குக் காரணம் எனக்குப் புரியவில்லை.

''எந்தாயா மனுஷ்யன்? அயோக்கியத் தனமா பண்ணறே?''? என்று மலையாளத்தில் இரைந்து கத்தினார் பாலக்காட்டு வியாபாரி. நான் உள்ளே போய்ப் பார்த்தேன். சுவரில் மாட்டியிருந்த என் சட்டைப் பை காலியா யிருந்தது அதிலிருந்து ஆறு ரூபாய் எட்டணா வைக் காணவில்லை.

பார்வதி மோசம் செய்து விட்டாள். நான் ஏமாந்து விட்டேன். பழிகாரி! என்ன நடிப்பு நடித்தாள்? சிரித்துச் சிரித்துக் கடைசி யில் கழுத்தை அல்லவா அறுத்து விட்டாள்?

பாலக்காட்டுக்காரருக்குப் பத்தாயிரம் ரூபாய் இருட்டுப் போய் விட்டது. மோதி ரங்கள், பணம், கைக்கடிகாரம் எல்லாம் சேர்த்துத்தான்! நான் நடந்ததை நடந்த படியே அவரிடம் சொல்லிக் கதறினேன்.

அவர் அதை நம்பவில்லை. யார்தான் நம்புவார்கள்? கான்ஸ்டேபிள் ஒருவன் என் கைகளில் விலங்கு மாட்டினான். நான் கத்தின கதறலையும் அழுத அழுகையையும் எவரும் லட்சியம் செய்யவில்லை.

போலீஸ் ஸ்டேஷனில் அடி, உதை, நகக் கண்களில் ஊசி ஏற்றுதல் எல்லா மரியாதை களும் நடந்தன. நான் சொன்னதையே விடாப் பிடியாகத் திருப்பித் திருப்பிச் சொன்னேன். நம்பவில்லை. பாலக்காட்டுக்காரரிடம் வழக் கைப் பதிவு செய்து கொண்டு என்னைச் சிறை யில் அடைத்தார்கள். சில நாட்களில் விசா ரணை நடந்தது. எனக்கு ஆறு வருஷம் கடுங் காவல் தண்டனை கிடைத்தது. ஒரு பெண் ணின் சிரிப்பையும் பேச்சையும் வெள்ளை உள்ளத்தோடு நம்பிய எனது நம்பிக்கைக்குக் கிடைத்த தண்டனை அது!

★

''பார்வதி! முடிந்து விட்டது. உனக்கு நான் எழுதிய கதை முடிந்து விட்டது. நீ பெண் இல்லை. பெண் உருவில் உலாவும் வஞ்சகி. ஆனாலும் உன்னை, உன் சாமர்த்தி யத்தை. அந்தச் சாமர்த்தியத்துக்குப் பொருத்தமான அழகை எண்ணி, இந்த ஐந்தரை வருஷங்களுக்கு அப்பாலும் நான் ஏங்குகிறேன். வெறுப்புக்குப் பதிலாக இந்த ஏக்கம் ஏன் உண்டாகின்றதென்று என்னா லேயே புரிந்து கொள்ள முடியவில்லை.

நன்னடத்தைக்காக ஆறு மாதங்களுக்கு முன் என்னை விடுதலை செய்துவிட்டார்கள். வேலூர் சப்-ஜெயிலிலிருந்து நேரே பழனிக்குத் தான் திரும்பி வந்திருக்கிறேன். இதோ இப் போது நான் உட்கார்ந்து கொண்டிருக்கும் இடமும் அதே பழைய பூவரச மரத்தடியில் தான். அன்று மாதிரி இப்போதும் இருள் தான் என்னைச் சூழ்ந்திருக்கிறது

என்னிடமிருந்து நீ திருடியது கொஞ்சம் தான். ஆறரை மணி நேரத்தையும், ஆறரை ரூபாயையும் தான் உன்னால் திருட முடிந்தது? பாலக்காட்டுக்காரர் தான் நிறையப் பறி கொடுத்தவர். அது அவர் தலை எழுத்து. பணத்தையும். நேரத்தையும் தவிர ''இன்னும் வேறு ஏதாவது'' நீ என்னிட மிருந்து திருடிக் கொண்டு போயிருந்தால் உடனே திருப்பி அனுப்பி விடு. உனக்கு மட்டும் காதோடு இதைச் சொல்கிறேன்: ''கட்டாயம் அதைத் திருப்பி அனுப்பி விடு.''

ராஜாஜியின் சேலம் விஜயம்

''அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்''

என்று மகாகவி பாரதியார் பாடினார். அப்படிப்பட்ட அற்புதப் பணியாகிய கல்வி கற்பிக்கும் பணிக்கு உதவுபவர்கள் யாராயினும் உலகம் அவர்களைப் போற்றிப் பாராட்டுகிறது. சேலம் வர்த்தகப் பிரமுகர் திரு என். கே. சித்தய்ய செட்டியார் அவர்கள் எண்பதினாயிரம் ரூபாய் செலவில் திரு என். எஸ். குப்புசாமி செட்டியார், என். எஸ். கற்பூர செட்டியார் ஞாபகார்த்தமாகக் கட்டியுள்ள பள்ளிக்கூடத்தைச் சென்ற மாதம் 24-ம் தேதி காலை ராஜாஜி அவர்கள் தமது பொற் கரங்களால் திறந்து வைத்தார். அன்று சேலம் நகரமே கோலாகலமாகக் காட்சியளித்தது. தெருக்களிலும், வீடுகளிலும் தோரணங்களும் கட்டிச் சேலம் பொது மக்கள் ராஜாஜி அவர்களுக்கு உள்ளத்தில் அன்பும் மகிழ்ச்சியும் பொங்க வரவேற்பளித்தனர்

அன்று மாலை பழைய தேசபக்தர் காலஞ்சென்ற வி. விஜயராகவாச்சாரியார், ஞாபகார்த்தப் பிரசங்கத்தில் ராஜாஜி அவர்கள் 'எதிர்க்கட்சி' என்ற தலைப்பில் ஒரு அற்புதச் சொற்பொழிவு நிகழ்த்தினார். சேலம் நகரப் பொது மக்கள் திரளாக வந்திருந்து, ஜனநாயகம் நல்ல முறையில் தொழிற்பட ஒரு நல்ல எதிர்க்கட்சி வேண் டும் என்பதற்கு ராஜாஜி பல காரண காரியங்களை எடுத்துக் கூறி விளக்கியதைக் கேட்டு மகிழ்ந்தனர்.

இவ்வைபவங்கள் சம்பந்தமான காட்சிகளை எதிர்ப்பக்கத்தில் காணலாம்.

1. ராஜாஜி திறந்து வைத்த புதுப் பள்ளிக்கூடம் 2. கோவை வர்த்தகப் பிரமுகர் திரு பி. ஏ ராஜு செட்டியார் 3 ராஜாஜிக்கு மாலை அணிவித்துக் கௌரவிக்கிறார்கள். 4 புதுக்கட்டடத்தைச் சிறப்பாகக் கட்டி முடித்த எஞ்சினியருக்கு ராஜாஜி பரிசு வழங்குகிறார். 5 திறப்பு விழாவுக்குக் கூடியிருக்கும் பிரமுகர்கள். 6 திரு எம். வி. கோபால் செட்டியார் வாழ்த்துரைகளை வாசிக்கிறார் 7 மாலைக் கூட்டத்தில் திரு பார்த்தசாரதி ராஜாஜிக்கு வரவேற்புரை கூறுகிறார். 8. மாலை மரியாதை நடக்கிறது 9. ராஜாஜியின் சொற்பொழிவைக் கேட்கத் திரளாகக் கூடியிருந்த பெண்மணிகள்.

ராஜாஜியின் சேலம் விஜயம்



போட்டோ: விச்சு



7. தினசரியை

வட மொழியிலுள்ள நாட்டு வைத்திய நூல்கள் ஒருவன் தனது ஆயுளைக் காப்பாற்றிக் கொள்ளப் 'பிராம்ம முகூர்த்த'த்தில் எழுந்திருக்க வேண்டும் என்று போதிக்கின்றன. தென் மொழியில் உள்ள நாட்டு வைத்திய நூல்களும் இதையேதான் வலியுறுத்துகின்றன. ஆயுளைக் காப்பாற்றிக் கொள்வதா? இது எதற்காக? எத்தனை காலம் வாழ்ந்தாலும் இன்னும் ஜீவித்திருக்க வேண்டுமென்ற ஆசை மனிதனை விடுவதில்லை; அல்லது மனிதன் இந்த ஆசையை விடுவதில்லை.

"நெடுநாளிருந்தபேரும் நிலையாகவேயினும்
காயகற்பம் தேடி நெஞ்சு புண்ணாவர்....."

என்பது இதற்குச் சான்று. இந்த புத்தி மாறக் கூடாதா?

"புல்லாகிப்பூண்டாகிப்புலர்ந்தநாள்போதாதோ
கல்லாய் மரமாய்க் கழிந்தநாள் போதாதோ
கிரியாய்க் கீடமாய்க் கெட்டநாள் போதாதோ
நீரியாய் ஊர்வனவாய் நின்றநாள் போதாதோ"

என்றெல்லாம் பட்டினத்தடிகள் பாடியிருக்கிறாரே! இந்தப் பாரமார்த்திகப் புத்தி எப்போது வரும்? பாமர புத்தி எப்போது நீங்கும்? இன்னும் ஆயுட்காலத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமாமே? எதற்காக? இப்படிச் சிலர் கேட்கலாம்.

சட்டி செய்யும் குயவனொருவன் சக்கரத்தைச் சுற்றி விடுகிறான். சக்கரத்தின் நடுவில் களிமண்ணை அப்பிக் கொள்கிறான் அவ்வப்போது சக்கரத்தை வேகமாகச் சுற்ற வைத்து, மண்ணிலிருந்து சட்டிகளைச் சமைக்கிறான். மண்ணையெல்லாம் சட்டியாகச் சமைத்தாயிற்று. குயவனும் வேலை முடிந்ததென்று கையைக் கழுவிக் கொள்ள எழுந்திருக்கும் நேரம். சுற்றி விட்ட சக்கரம் மட்டும் இன்னும் சுற்றிக் கொண்டே இருக்கிறது. அப்போது அருகிலிருக்கும் அவன் இல்லக்கிழத்தி கேட்கிறாள்:

"இன்னும் எதற்காக அந்தச் சக்கரம் சுற்றிக் கொண்டிருக்க வேணும்? அதை நிறுத்தி விட்டு அண்டை கட்டி விட்டுக் கை கழுவ முனையக் கூடாதா?"

இவ்விதந்தான் பட்டினத்தடிகளும் கேட்கிறார் "இறைவா, மெய்ப் பொருளுடன் தொடர்பு பெற்றேன். பொய்ப் பொருள்களுடன் தொடர்பற்று விட்டது. இனி 'வா வென்று அழைத்து' உன்பால் சேர்த்துக் கொள்வாய்! இனியும் எதற்காக — பிறவியின் பயனைப் பெற்ற பிறகும் எதற்காக, வேலை முடிந்த பிறகும் குயவனின் சக்கரம் சுற்றிக் கொண்டிருப்பது போல,—நான் இங்கு அலைந்து கொண்டிருக்கவேணும்?" என்று இறைவனைப் பார்த்து இறைஞ்சுகிறார். இது உலகியலில் உழன்றுகொண்டிருக்கும் நமக்குச் சொன்ன உபதேசமொழியல்ல.

நமக்குச் சொன்ன உபதேசம் என்ன?

"மறமலின் உகைவாழ்க்கையே வேண்டும்:
வந்துநின் அன்பர்தம் பணிசெய்நால்
அறமது கிடைக்கும்......"

அறம் என்றால் தர்மம். அந்தத் தர்மம் எத்தகையதாக இருக்க வேண்டும்? வாழ்நாளில் இன்பமெல்லாம் பெற்று நாளுக்கு நாள் முன்னேற்றம் அடையவும், பின்னர் வீடு பெறவும் ஏதுவாக அமைய வேண்டும்.

புத்த சமயத்தவரோ....?

"புத்தன் தர்மம்பூதகண மூப்புரியின் -
சேவைக்கல்லால்
தப்ப தெதற்கென்றுரைத்தோம் நாரணிதன்னில்?
மூப்பிரியின் சேவையால் ஜன்மக்கடலைத்
தாண்டத்தந்த
இக்கலமும் நாளும்வீணே ஏகிடலாமோ?
[இம்து]
நற்கயத்தில் மேய்கழுக நண்ணிய நாள்
நீகைத்துப்
பொற்பொடி பூழ்பூசிடல் போலல்லோ
வாகும்!"

என்று விளக்குகின்றனர். ஆகவே, ஆயுளைக் காத்துக் கொள்வது அவசியம். அதன் மூலம்தான் நால்வகைப் புருஷார்த்தங்களையும் சாதித்துக் கொள்ள முடியும். அதற்காகப் பிராம்ம முகூர்த்தத்தில் எழுந்திருக்க வேண்டும். இந்நேரத்தைத் 'தமிழில் வைகறை யாமம்' என்பர். சூரியன் உதயமாவதற்கு முன் உள்ள ஒரு யாம காலத்தை அதாவது ஏறத்தாழ மூன்றுமணி நேரத்தைத்தான் பிராம்ம முகூர்த்தம் என்றும் வைகறை யாமம் என்றும் கூறுகிறோம். 'வைகறைத் துயில் எழு' என்

னும் மூதுரையை மேற்கொண்டு இந்த நேரத்தில் தூங்கிஎழப் பழகவேண்டும்.

"புத்தியதற்குப் பொருந்து தெளிவளிக்கும் :
சுத்த நரம்பினரற் றுய்மையுறும் —
பித்தொழியும் :
நாலவழி வாதபித்தந் தத்தநிலை மன்னுமதி
காலை விழிப்பின் குணத்தைக்காண்."

அதிகாலையில் துயில் எழுவதனால் உண்டாகும் பயன் இவை. இவற்றைப் பெற யாருக்குத்தான் ஆசை இராது?

"என்ன ஐயா? விடியற் காலையில் மூன்று மணிக்கு எழுந்திருப்பதா? ஏதாவது நடக்கக்கூடியதைச் சொல்லுங்கள். கி. பி. இருபதாம் நூற்றாண்டு பாதிக்கு மேல் கழிந்து விட்டது. வாழ்க்கைப் போரை ஒருவாறு முடித்துக் கொண்டு இரவு படுக்கப் போகும்போது மணி பத்து அடித்து விடுகிறது. பிறகாவது நிம்மதியான தூக்கமுண்டா? மூட்டைப் பூச்சிகளின் உபத்திரவம், கொசுக்களின் 'ஐந்திர ஸம்மேளனம்', குழந்தைகள் நடுநிசியில் எழுந்து ஆரம்பிக்கும் ராகம், தானம், பல்லவி, வீட்டிலுள்ள கிழங்களின் குறட்டை அல்லது இருமல் என்று இப்படிப் பல காரணங்களால் தொந்தரவு ஒவ்வொருவனுக்கும் இல்லாமவிராது. இந்த அழகில் போதுமான தூக்கமே இராது. தூங்கவோ நேரமும் இராது. இப்படி இருக்கும்போது விடியற்காலம் மூன்று மணிக்கு எழுந்திருப்பதாவது?" என்று சிலர் கேட்கலாம்.

கோடை காலம், கடற்கரையிலுள்ள நகரங்களிலுள்ளவருக்கும் கூட இரவு ஒன்றரை மணிக்கப்புறம் கீழ்க்காற்று தொடங்கிய பிறகு தூக்கம் பிடிக்கும். மூன்று மணிக்கு எப்படி எழுந்திருப்பது?

"ஊட்டியில் ஸார்! கோடைக் காலத்திலுங்கூடக் கம்பளிச் சட்டையோ, பட்டுச் சட்டையோ வேணும். கடுங் கோடையானாலும் காலையில் 9 மணிக்கு முன் வீட்டு ஜன்னலைத் திறக்கமுடியாது. மாலையில் ஆறு மணிக்குள் வீடு சேர்ந்திடவேணும்..." என்று இப்படிப் பழக்க வழக்கம், கால தேசங்களின் பேதம் இவற்றை அநுசரித்து, எல்லோருக்கும் ஏற்கத்தக்க விதியாக ஒன்றை நிறுவ வேண்டும். யாராயிருந்தாலும், எந்த ஊராயிருந்தாலும் எந்தக்காலமாயிருந்தாலும் அதிகாலையில் மூன்று மணிக்கு எழுந்திருக்க வேணுமென்ற திட்டம் நடைமுறையில் செலாவணி பெறாது.

இதை அநுசரித்துப் பிராம்ம முகூர்த்தம் என்பதின் பொருளை உரையாசிரியர்கள் விளக்கியுள்ளார்.

இரவுப் பொழுதின் கடைசி நான்காவது பாகம், ஆறாவது பாகம், எட்டாவது பாகம், பன்னிரண்டாவது பாகம்,




பதினாறாவது பாகம் என்பதில் ஒன்றைக் கால, தேச பேதத்தையும், அவனவன் பழக்கத்தையும் அநுசரித்துத் தனக்குரிய 'எழும் நேரம்' என்று தீர்மானத்துக்கு வரவேண்டும். அவனவனுக்கும் அதுதான் உரியது. எழும் நேரம் எதுவாயினும், அது இந்த "பிராம்ம முகூர்த்தம்" என்ற கால அளவினுள் இருக்க வேண்டும், அவ்வளவுதான்.

ஆனால், விழித்தெழுந்ததும் திடீரென்று எழுந்து நடமாடத் தொடங்கி விடக் கூடாது. ஓய்வுபெறும் நிலையிலிருந்த சரீரத்தைச் சற்று சாவதானத்துடனேயே இயக்க வேண்டும். அவ்வாறே, இந்திரியங்களையும் செயலாற்றும் வகையில் ஈடுபடச் செய்ய வேண்டும். எதையும் நிதானத்துடன் செய்ய வேணுமேயன்றி, திடீரென்று செய்யக் கூடாது. நித்திரையிலிருந்து விழிப்பு பெற்றதும், கண்களை மூடியபடியே சிறிது நேரம் கிடக்கவேண்டும். அச்சமயத்தில் 'சரீர சிந்தை' செய்து, அன்றைக்குச் செய்யத் திட்டமிட்டிருக்கும் அலுவல்களைச் சிந்தித்து வகுத்துக் கொள்ள வேண்டும். கடவுளையும் மனத்தினால் வணங்க வேண்டும்.

"......வாய்வதில்
தந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை."

வாய்த்தற்கரிய தந்தை தாய் இருவரையும் தொழுது பிறகு படுக்கையினின்றும் எழுந்து நின்று நடக்கத் தொடங்க வேண்டும்.

விழிப்பு பெற்றபின் கண்ணைத்திறந்து முதன் முதலில் பார்க்கத்தக்கது தனது வலது கரம்தான். அல்லது கண்ணாடியைப் பார்க்கலாம். இதன் உட்கருத்து என்ன? அதிக தூரத்திலுள்ளதைப் பார்க்கக் கூடாது. தூங்கும்போது ஓய்வு பெற்றுக் கொண்டிருந்த கண், விழித்த பிறகு பார்க்கத் தொடங்கும் பொழுது மெல்ல மெல்லத்தான் செயலில் ஈடுபட வேண்டும். அதற்காகத் தான் இவ்விதம் ஒரு திட்டத்தை வகுத்தனர் என்பது இதிலே புதைந்து கிடக்கும் உட்பொருள். (தொடரும்)


உங்கள் தேவைக்கான
தண்ணீர்
சுலபமாகவும்...
வேகமாகவும் கிடைக்க
ஒரு மயர்ஸ் ஷாலோ - வெல் ரெஸிப்ரொகேடிங் பம்பைப் பொருத்தி, துரிதமான, நிச்சயமான, தாராளமான தண்ணீர் சப்ளை கிடைக்க வழி செய்து கொள்ளுங்கள். நீடித்த உழைப்பு, சுலபமாக இயங்குவது, முதலீட்டுச் செலவில் குறைவு. இவற்றால் இன்று மயர்ஸ் மிகவும் விரும்பப்படுகிறது. இதன் இயங்கும் சக்தி மணிக்கு 250 காலன்களுக்கு மேல். இன்றே எங்களை கலந்து ஆலோசியுங்கள்.
கஷ்டமில்லாத தண்ணீர் சப்ளைக்கு
மயர்ஸ்
ஷாலோ - வெல் ரெஸிப்ரொகேடிங் பம்பு
வாட்டர் சப்ளை ஸ்பெஷலிஸ்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்
45, தம்புசெட்டித் தெரு, சென்னை-1
MYERS WATER SYSTEM
MYERS
WSS.56.15


மதுபாலாவின்
அழகின்
இரகசியம்
கோத்ரெஜ்
வத்னி*
சாவி மார்க்
VATNI
INDIA'S POPULAR SOAP
வத்னி VATNI
100% ஸ்வதேசி
★ "தாய்நாடு"
என்று அர்த்தங்கொண்ட 'வதன்' என்ற வார்த்தையிலிருந்து திரிபு பெற்றது.

அன்புக் கடல்

ஆங்கரை பைரராமன்

பள்ளிக்கூட வாசல். காலை எட்டு மணி. குழந்தைகளின் ஆரவாரம் பள்ளிக்கூடக் கட்டடத்தையே அதிர அடித்தது. ஆசிரியர்கள் வகுப்பறைக் குள் போவதும் வருவதுமாக இருந்தனர். இரண்டொருவர் தலைமை ஆசிரியருடன் பேசிக் கொண்டிருந்தனர்.

சின்னப் பள்ளிக்கூடம்தான். கிராமக் குழந்தைகளின் கல்வி வசதிக்காக அமைக்கப் பட்ட ஆரம்பப் பாடசாலை. ஏழெட்டு ஆசிரி யர்களும் ஒரு தலைமை யாசிரியருமாக அந்தப் பள்ளியில் பணியாற்றினர்.

இன்னும் பள்ளி துவக்க வேண்டிய நேரம் வரவில்லை. வாசலில் சின்னப் பிள்ளைகளின் கூக்குரல் பலத்தது.

குற்றமறியாத கண்கள், குறு குறுப்பான சிறு முகங்கள், எத்தனை யெத்தனை குழந் தைகள் சிட்டுக் குருவிகள் போல் துள்ளி விளை யாடுகின்றனர். வீட்டிலிருந்து சீக்கிர மாகவே புறப்பட்டு மற்றக் குழந்தைகளுடன் கூடி விளையாடச் சிறு பிள்ளைகளுக்கு இருக்கும் ஆர்வம் சொல்லி முடியாது.

பரமசிவம் குழந்தைகளின் விளையாட்டில் மனத்தைப் பறி கொடுத்தார்.

''ஆகா . . நான் கட்டிய பள்ளிக்கூடம். நான் ஆரம்பித்த சின்ன ஸ்கூல். இன்று எத் தனை பிள்ளைகள் படிக்கின்றனர். என் உள்ளம் இதைக் காணத்தான் இழுத்து வந்தது. இது வன்றோ காண வேண்டிய காட்சி. அப்பனே! ஆறுமுகா! இந்த இன்பக் காட்சியைப் பார்க் கவா, மறுபடியும் சொந்த ஊருக்கு இழுத்து வந்தாய்?'' என்று உருகினார் பரமசிவம்.

''தாத்தா யாருடா?'' என்றான் ஒருவன்.

''ஏன் தாத்தா உன் பேரு என்ன? நீயும் எங்கள் பள்ளிக் கூடத்திலே வாத்தியாரு வேலைக்கு வந்திருக்கிறயா?'' என்றான் ராமு விளையாடுவதை நிறுத்திவிட்டு.

''இல்லேடா குழந்தை! உங்களை யெல்லாம் பார்க்கிறதுக்குத்தான் வந்தேன். உங்களு டைய களையான முகங்களைப் பார்க்கிறபோது எனக்கு எவ்வளவு களிப்பாயிருக்கிறது, தெரியுமா? உன் பேரு என்ன? எந்த வகுப் பிலே படிக்கிறாய்?'' என்றார் பரமசிவம் அந்தப் பையனைப் பார்த்து.

''என் பேரு ராமமூர்த்தி. ஐந்தாவது வகுப்பிலே படிக்கிறேன். அதோ விளையா டிண்டிருக்கிறளே, அவள்தான் என் தங்கை சியாமளா. அவள் இரண்டாவது படிக்கிறாள். நீ யாரு தாத்தா?''

''நானு. . வந்து. . நான்தான் இந்தப் பள் ளிக் கூடத்தை முதல்லே ஆரம்பிச்சேன். உங் களைப் போலப் பிள்ளைகளெல்லாம் நன்றாகப் படித்து முன்னுக்கு வரணுமென்கிற ஆசை யிலேதான் இதைக் கட்டினேன்.''

''யாரு. . பரமசிவத் தாத்தாவா. . நீங்களா வந்திருக்கேள்? டேய் எல்லோரும் வாங்கடா. பரமசிவத் தாத்தா வந்திருக்கா'' என்று காட்டுக் கத்தலாகக் கத்தினான் ராமு.

விளையாடும் குழந்தைகளெல்லாம் சட் டென்று திரும்பினர். பரமசிவத்தின் கையைப் பிடித்துக் கொண்டு நிற்கும் ராமமூர்த்தி கூப்பிடுவதைக் கண்டதும் ஒன்றாக ஓடி வந்தனர். ஒரே கூட்டமாக அவரைச் சூழ்ந்துகொண்டு விட்டனர்.

பள்ளிக்கூடம் துவங்குவதற்கு அறிகுறியாக மணி கண கணவென்று அடித்தது.

''மணி அடிச்சாச்சுடோய்! வாங்கடா போகலாம். தாத்தா நாங்க வர்றோம்'' என்றான் ராமு.

ஆரவாரம் குறைந்து விட்டது. நிசப்தம் பரிபூரணமாகக் குடி கொண்டிருந்தது. கணீரென்ற குரலில் குழந்தைகள் ''பொன் னார் மேனியனே'' என்ற பாடலைப் பாடினர்.

பரமசிவம் நெக்குவிட்டு உருகினார். மழலை மொழியும், மணியான சொற்களும் ஒன்று கூடி அவர் காதில் தேவகானமாகப் பொழிந் தன. மெய்மறந்து நின்றார்.

பள்ளிக்கூடம் ஆரம்பமாகிவிட்டது. தம் முடைய கைங்கர்யம் ஏதோ இந்த அன்புக் குழந்தைகளின் படிப்புக்காவது பயன்பட் டதே யென்று பெருமைப்பட்டுக் கொண்டார்.

வாசலில் இரண்டு குழந்தைகள் கண்ணைக் கசக்கிக் கொண்டு நின்றன. அவர்களைக் கண்டவுடன் பரமசிவத்துக்கு என்னவோ போலிருந்தது. ''ஏன் இந்தப் பிள்ளைகளும் வகுப்புக்குச் செல்லவில்லை? எதற்காக அழுது கொண்டு நிற்கிறார்கள்?'' என்று எண்ணிய வராய் அவர்களிடம் சென்றார்.

''தாத்தா வராடா!'' என்றாள் பெண்.

பெரியவன் பரமசிவத்தை ஏறிட்டு நோக் கியபடி, ''ஏன் தாத்தா? நீங்கள்தானே இந் தப் பள்ளிக்கூடத்தைக் கட்டினீர்கள்? என்ன பிரயோசனம்? எங்களால் படிக்க முடியலே. சம்பளம் கொடுத்தால்தான் படிக்கலாமாம். எங்களிடம் பணம் ஏது? எங்கப்பாவோ கை நொண்டி. எங்கம்மாவோ எப்பொழுது பார்த்தாலும் கோவிச்சுக்கறா!'' என்றான் துயரம் நிரம்பிய குரலில்.

சிறு பெண் ஏங்கிய முகத்துடன் அண்ண னின் பக்கமாக ஒட்டினாள்.

பரமசிவத்தை உலுக்கி விட்டன, அந்தச் சிறுவனுடைய வார்த்தைகள். ''ஐயோ. . இன்னுமா குழந்தைகள் படிக்கும் வசதி யில்லாமல் திண்டாடுகின்றனர்! என்னுடைய முயற்சியும் வீண்தானா? குறும்பு பொங்க ஏழை குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதைக் கண்டு இந்த இரண்டு பிள்ளைகளும் என்ன பாடு பட்டிருக்கும்? பிஞ்சு உள்ளங்கள் எப் படித் தவித்திருக்கும்? இருவரையும் அரு கில் இழுத்துக் கட்டிக் கொண்டார்.

''ஏன் குழந்தை? உன்னை யாரு பள்ளிக் கூடத்திலே சேர்த்துக் கொள்ள மாட்டேன்னு சொன்னா? இதுவரையிலும் ஒரு வகுப்பிலே கூடப் படிக்கவில்லையா?''

''எப்படித் தாத்தா படிக்கிறது? சம்பளம் கொடுத்தால்தான் பாடம் சொல்லிக் கொடுப்பா? இலவசமாகப் படிக்கிறதுக்கும் பொசிக வேணுமாம்? சாப்பாட்டுக்கே கஷ்டப் படறபோது பொசிகக்கு எங்கே போறது? நாங்களும் ஒரு வருசமா இந்தப் பள்ளிகூட வாசல்லே நிற்கிறோம்? ஒருத்தராவது கவ னிக்க மாட்டேங்கறா. ஏன் தாத்தா? நீதானே பள்ளிக்கூடம் கட்டினே! உன் பொசிக இருந்தால் கட்டாயம் சேர்த்துப்பாளே!



கொஞ்சம் சொல்லு தாத்தா ஹெட்மாஸ்டரிடம்'' என்றான் அந்தப் பையன்.

''ஆமாம் தாத்தா, எங்களுக்கு உதவி செய்யறவா ஒருத்தருமில்லே, நீங்களாவது கொஞ்சம் கருணை செய்யுங்கள் தாத்தா!'' என்றாள் அந்தச் சிறுமி.

''நிச்சயமாய்ச் செய்கிறேன். உன் பெயர் என்ன அம்பி?''

''என் பெயர் ரவி. என் தங்கை பெயர் கோமளா.''

''ரவி! கோமளா! அழகான பேரு. வாங்க, தலைமை ஆசிரியரிடம் சிபாரிசு செய்கிறேன்'' என்று இருவரையும் அழைத்துக் கொண்டு பள்ளிக்குள் நுழைந்தார்.

தலைமையாசிரியர் வகுப்புகள் சரியாக நடக்கின்றனவா என்று கண்காணித்து விட்டுத் தம்முடைய அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

பரமசிவம உள்ளே எட்டிப் பார்த்தார்.

''யாரங்கே?'' என்ற குரல் அதட்டியது.

பரமசிவம் பின் வாங்கினர். குழந்தைகள் இருவரும் நடுங்கினர்.

பரமசிவத்துக்குப் பழக்கப்படாத புதிய குரல். தலைமையாசிரியர் எழுந்து வெளியே வந்தார். பரமசிவம் ரவியையும் கோமளாவையும் பிடித்துக் கொண்டு நிற்பதைப் பார்த்து, ''குழந்தைகளைப் பள்ளிகூடத்திலே சேர்க்க வேண்டுமா? வாருங்களேன் உள்ளே?'' என்றார் கரகமாக.

பரமசிவம் மகிழ்ச்சியுடன் அவரைப் பின் தொடர்ந்தார்.

''எந்த வகுப்பு?''

''இல்லே..இப்பொழுதுதான்..முதலிலே..; 'பள்ளிக்கூடத்தில் சேர்க்க வேண்டும்!''

''ஓகோ...பள்ளிக்கூடச் சம்பளம், பிரவேசக் கட்டணம் எல்லாம் செலுத்த வேண்டும். பணம் கொண்டு வந்திருக்கிறீர்களா? இருங்கள், 'ரைட்டர்' வந்து விடுவார். அவரிட சொல்கிறேன்.''

''வந்து...பணம் கொண்டு வரவில்லே. இலவசப் படிப்பிலே இவர்களைச் சேர்க்கிறதுக்கு உங்களிடம் சிபாரிசு...''

''சிபாரிசா....அடாடா....சார் நீங்கள் ரொம்பத் தாமதமாக வந்திருக்கிறீர்கள். இவ் வருஷத்துக்குக் கொடுக்க வேண்டிய இலவசச் சீட்டுகள் பூர்த்தியாகி விட்டன. அடுத்த வருஷம் வாருங்கோ, பார்க்கலாம்.''

''அப்படிச் சொல்லக் கூடாது. பெரிய மனசு பண்ணி இந்தக் குழந்தைகளை எப்படியாவது சேர்த்துக் கொள்ள வேண்டும். பாவம்! இல்லாக் கொடுமையினால் இவர்களுடைய கல்வி இதுவரையில் பாழாகிவிட்டது. அடுத்த வருஷக் கணக்கிலிருந்தாவது இரண்டு சீட்டுகள் கொடுக்க வேண்டும்.''

''அதெல்லாம் முடியாது. பேசிக் கொண்டிருப்பதில் பலனில்லை'' என்றார் கண்டிப்பாக.

''நான்தான் இந்தப் பள்ளிக்கூடத்தைக் கட்டினேன். அநேகமாக உங்களுக்கும் தெரிந்திருக்கலாம். என் பெயர் பரமசிவம். நான் சொல்கிறேன். இந்தக் குழந்தைகளை உடனே சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று. என்னை விடச் சிறந்த சிபாரிசு யார் இருக்க முடியும்?'' என்றார் பரமசிவம் சிறிது உஷ்ணமாக.

தலைமையாசிரியர் பரமசிவத்தை விறைப்பாகப் பார்த்தார். சுருக்கம் விழுந்த கன்னங்கள், உலர்ந்து தளர்ந்துவிட்ட உடல், நெற்றியில் பூசியிருக்கும் விபூதி எல்லாவற்றையும் கவனித்தார். கடகடவென்று சிரித்தார்.

''நீங்களே பள்ளிக்கூடத்தைக் கட்டியிருக்கலாம். அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. இப்பொழுது பள்ளிக்கூடம் ஜில்லா போர்டு நிர்வாகத்தில் நடக்கிறது. அதற்கு அடங்கியவர்கள் நாங்கள். போர்டு தலைவர் எவ்வளவு பேர்களுக்கு இலவசமாகக் கல்வி வசதி யளிக்கலாம் என்று உத்தரவிடுகிறாரோ, அவ்வளவுக்குத்தான் செய்ய முடியும். நீங்கள் யாரா யிருந்தாலும் ஒன்றும் நடக்காது; போங்கள்'' என்று கோபமாகச் சொல்லி விட்டுக் கிளம்பினார் தலைமை ஆசிரியர்.

ரவியும் கோமளாவும் கலங்கிய கண்களுடன் பரமசிவத்தைப் பார்த்தனர். பரமசிவம் இடிந்து போய் விட்டார்.

பலத்த ஏமாற்றத்தினால் அங்கிருந்த பெஞ்சியில் அமர்ந்தார் பரமசிவம். ரவியும் கோமளாவும் அவர் அருகில் உட்கார்ந்து கொண்டனர். அவருடைய சிந்தனை பழைய காலத்தை நோக்கி இழுத்தது.

★

திருமங்கலத்தில் பணக்கார வாழ்க்கை வாழ்ந்தவர்தான் பரமசிவம். நிலபுலனுண்டு,

துவளிக்கடை, தோப்பு, இன்னும் எத்த னேயோ அவருக்கு உடைமையா யிருந்தன. அதிகம் படிக்காதவர். வீட்டுப் படிப்பே அவ ருடைய வாழ்க்கை நடத்துவதற்குப் போது மான படிப்பாகி விட்டது. உலக அனுபவம் பெற்று விட்டார். ஆனாலும் ஊரிலிருக்கும் பிள்ளைகள் கல்வி வசதியில்லாமல், பக்கத் தூருக்கு நடந்து படிக்கச் செல்வதைக் கண்டார். வசதியுள்ளவர்கள்தான் பள்ளி யிருக்கும் ஊரில் குடித்தனம் போடலாம். எல்லோராலும் அவ்விதம் முடியுமா?

ஆரம்பப் படிப்புக்குக்கூட இரண்டு மைல் கள் நடந்தாக வேண்டும். சிறு குழந்தைகள், கார்களும், சைக்கிளும், வண்டிகளும் பறக் கும் ரஸ்தாவில் நடந்து செல்ல முடியுமா?

பிள்ளை குட்டியென்று பரமசிவத்துக்கு அதிகப் பிடுங்கல் கிடையாது. மனைவி விட்டுப் போன மலர்க்கொடி கமலம்தான் அவ ருடைய ஒரே பெண்; அழகு அவளுடன் உறவு பூண்டது. செம்மை அவளிடம் சரணடைந்தது. 'அவளுக்குக் கல்யாணம் செய்ய வேண்டிய பருவம். இனிமேல் படிக்க வைப்பது நன்றா யிருக்காது. ஆனால் மற்றக் குழந்தைகளுடைய இளமைப் பருவம் வீணாகி விடக் கூடாதே? கல்வி எல்லோருக்கும் அவசியம்தானே.'

பரமசிவத்தின் நெடுநாளைய ஆசை, கமலம் கல்யாணமாகிக் கணவன் வீட்டுக்குப் போன பிறகு நிறைவேறியது.

தம்முடைய ஆஸ்தி யெல்லாம் விற்று முதலாக்கினார். கமலத்துக்கு ஒரு சிறு பகுதி யைக் கொடுத்தார். மீதியிருந்த பெரும் பகுதியைப் பள்ளிக்கூடம் கட்டுவதில் செல வழித்து விட்டார்.

கட்டடம் கட்டி முடிவதற்குள் அவருக்கு இருந்தஉத்வேகம் கட்டுக்கடங்காமலிருந்தது.

பெரிய கட்டடம். ஆனாலும் ஆரம்பப் பள்ளிக்கூடமாகத் தானிருந்தது. ஏழாவது வகுப்பு வரையில் அடங்கி யிருந்தது. ஊர்க் குழந்தைகளெல்லாம் பரமசிவத்தின் பேருப காரத்தில் கல்வி பயின்றனர்.

காலையிலும் மாலையிலும் பள்ளிக்கூட வாச லில் வந்து நிற்பார் பரமசிவம். பெருகி வரும் படைவீரர்கள் போல், குழந்தைகளின் கூட்டம் அவருக்குப் பெருத்த மகிழ்ச்சி யூட்டும். சிறிதும் பெரிது மாக எத்தனை விதப் பிள்ளைகள். பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போவார். இந்தச் சம யத்தில் ஜில்லா போர்டு நிர்வாகம் இந்தப் பள் ளிக்கூடப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது.

பரமசிவத்துக்கும் வய தாகி விட்டது. ஆசை யும் பூர்த்தியாகி விட்டது. பள்ளிக்கூடச் சிறு குழந்தைகளைக் கண்குளிரப் பார்த்தாகி விட்டது. யாருக்காக உள்ளூரில் வாழ வேண்டும்? இருக்கும் வீட்டை விற்று விட்டு, ஜில்லா போர்டு, பள்ளிக்கூடக் கட்டடத்தை எடுத்துக் கொண்டதற்காகக் கொடுத்த பணத்துடன் மகளுடைய ஊருக் குச் சென்றார்.


மகள் கணவனுடன் சந்தோஷமாக இருப் பதைச் சில நாட்கள் அங்கிருந்து பார்த்துக் களித்துவிட்டு, பரமசிவம் க்ஷேத்திராடனம் செய்யக் கிளம்பினார்.


பன்னிரண்டு வருஷங்கள் கழிந்தன. அறு பது வயதில் திருமங்கலத்தை விட்டுக் கிளம் பியவர், கையிலிருந்த பணத்தை யெல்லாம் தர்மத்துக்கும், பல ஊர்களுக்குச் சென்று தரிசிப்பதிலும் செலவழித்துவிட்டு, எழுபத் திரண்டாவது வயதில் திரும்பவும் ஊருக்கு வந்திருக்கிறார். அவருடைய மனம் ஆண்ட வன் திருவடிகளை எப்பொழுதும் வருடிக் கொண்டிருக்கும் பக்குவமடைந்து விட்டது. திருமங்கலம் பழைய மாதிரியே இருந்தது. அவர் கட்டிய பள்ளிக்கூடமும் ஒருவித மாறு தலுமில்லாமல் அப்படியே இருந்தது. மனிதர் கள்தான் மாறி யிருக்கின்றனர்.

"ஏன் தாத்தா? எங்களுக்கு இடம் கிடைக்காதா?" என்றான் ரவி.

பரமசிவம் சிந்தனையிலிருந்து விடுபட்டார்: பக்கத்தில் வருத்தக் குரல் எழுப்பும் குழந்தை களைப் பார்த்தார். கோமளா பரமசிவத்தைப் பார்த்தபடி 'தாத்தா, நீ சொன்னால் சேர்த் துக் கொள்ளுவார்களோ என்ற ஆசையோடு இருந்தோம். அதுவும் பலிக்கவில்லை" என்றாள்.

"வேண்டாம், என்செல்வங்களா! நீங்கள் அழாதீர் கள். உங்களை எப் படியாவது படிக்க வைக்கிறேன். என் கண்மணிகளே! என்னுயிர் இருந்





தி பயனட் பென் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட்டின் உதவி விற்பனை மானேஜர் திரு டி. எஸ். வெங்கடேஸ்வரன் அவர்களுக்கும், திரு. ச. பாலசுப்ரமணியம் அவர்கள் புதல்வி சௌ. சீதாலக்ஷ்மிக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!

தும் பிரயோசனமில்லியே! உங்களுக்காக நான் வேலை செய்கிறேன். உடம்பிலே தெம்பிருக்கிறது. நான் உழைக்கிறேன்."

"தாத்தா... நிஜமாகவா?.."

"உண்மையாகத்தான். வாருங்கள், உங்கள் வீட்டிலே கொண்டுபோய் விடுகிறேன். நாளையிலிருந்து நீங்கள் இருவரும் பள்ளிக்கூடம் போகலாம். புஸ்தகம், பென்சில் வேண்டியதை வாங்கித் தருகிறேன்."

"இதோ எங்கள் வீடு" என்றாள் சிறுமி.

பரமசிவம் திடுக்கிட்டார். தம்முடைய வீடுமாதிரியல்லவா இருக்கிறது? அதை வாங்கியவர்கள் நொடித்துப் போயினரோ? பாவம்.

குழந்தைகள் உள்ளே விரைந்தனர். பரமசிவம் திண்ணையில் நின்றார். உள்ளே தாயார் குழந்தைகளை அதட்டும் குரல் கேட்டது.

"சனியன்களே! காலையில் எழுந்திருந்து எங்கே தொலைஞ்சு போயிட்டீங்க? உங்களுக்குப் படிப்பு ஒண்ணுதான் குறைச்சல்" என்று இரைந்தாள் தாயார்.

"அம்மா, குழந்தைகளைக் கோபிக்காதே, பாவம் சிறுசுகள். படிப்பதற்குத் துடிக்கின்றன. நாம்தானே எப்பாடுபட்டாவது அவர்களை முன்னுக்குக் கொண்டு வரணும்?" என்றார் பரமசிவம் ஆதரவோடு.

"நீங்க யாரு?" என்றாள் தாயார்.

"அம்மா.. நானு ஹா... கமலம்!.. ஐயோ! என்கண்மணி! உனக்கா இந்தக்கதி?"

"அப்பா!" என்று அலறினாள் கமலம்.

பரமசிவம் பெண்ணை அணைத்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதார்.

"தாத்தா. தாத்தா.." என்று குழந்தைகள் அவர் காலைக் கட்டிக் கொண்டனர்.

"அம்மா கமலம் உனக்கா இந்தக் கோலம்? மாப்பிள்ளை எங்கேயம்மா?"

"நீங்கள் எங்களையெல்லாம் மறந்து போய் விட்டீர்கள். அவருக்கு ஏதோ கையிலே ஒரு புண் வந்திருந்தது செப்டிக்காகி 'ஆப்பரேஷன்' பண்ணினால்தான் தேவலையாகும் போலிருந்தது. ஆப்ரேஷன் ஆயிற்று. கையும் போச்சு. வேலைசெய்ய வேண்டிய கை விதிவசத்தால் வலிமையிழந்து விட்டது. இருந்த வேலையும் போய்விட்டது. சொத்து கரைகிற வரையிலும் சுகமாக இருந்தோம். கஷ்டப்படுகிற காலத்திலே இந்தக் குழந்தைகளும் பிறந்தன.

"நாங்கள் அந்த ஊரை விட்டுக் கிளம்பி இங்கே வந்து சேர்ந்தோம். குடியிருக்க வீடு கிடைக்காமல் திண்டாடினோம். ஏதோ நம்ப பழைய வீட்டை வாங்கினவர்கள் கருணையோடு ஒரு பக்கத்திலே இருக்க இடம் கொடுத்தார்கள்" என்றாள் கமலம்.

"கமலம் குழந்தைகளை நிந்திக்காதே! ஆறுமுகத்தின் அருள்தான் இந்தச் செல்வங்கள். நானிருக்கிறேன் கவலைப்படாதே! என் கைகள் திடமாயிருக்கு. ஊருக்குப் பள்ளிக்கூடம் கட்டினவன், என் பேரப்பிள்ளைகளுக்கா படிக்க வைக்க மாட்டேன்! மாப்பிள்ளை எங்கே?" என்றார் பரமசிவம்.

"வேலை தேடத்தான் போயிருக்கிறார்; ஏதாவது வேலை கிடைச்சாலும் அரை வயிற்றுக்குச் சரியாயிருக்கு."

"கடவுளே" என்று கதறினார் பரமசிவம்.

குழந்தைகளுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. நாளையிலிருந்து பள்ளிக்குப் போகலாமென்று குதித்துக் கொண்டிருந்தனர்.

முதலில் பரமசிவம் ஊருக்கு வருமுன்னர் தன்னுடைய பழைய ஜவுளிக்கடையில் ஒரு குமாஸ்தா தேவையென்று முதலாளி சொன்னது ஞாபகம் வந்தது. கடை சொந்தமில்லாவிட்டாலும் கணக்குப் பிள்ளை வேலை கண்டிப்பாகக் கிடைக்கும் அந்த நம்பிக்கையில் அவர் உழைக்கத் துணிந்து விட்டார்.

வாசலில் யாரோ வந்திருப்பது போல் தோன்றியது. வெளியே வந்தார் பரமசிவம். தலைமை ஆசிரியர் நின்று கொண்டிருந்தார்.

"வாங்க. என்ன விசேஷம்?"

"என்னை மன்னிக்க வேண்டும். தெரியாமல் உங்களிடம் முறை தவறி நடந்து கொண்டு விட்டேன். இன்று ஜில்லா போர்டு தலைவர் வந்திருந்தார். உங்களைப் பற்றி வெகுவாகப் புகழ்ந்தார். அப்பொழுதுதான் நான் செய்த பெரும் தவறு புலப்பட்டது. உங்கள் குழந்தைகளை இந்த வருஷம் சேர்த்துக் கொள்வதென்று முடிவு செய்துவிட்டேன்."

"அப்பா....வடிவேலா....இதுவும் உன் செயலா? எப்படி எல்லாம் ஆட்டி வைக்கிறாய்? சற்றுமுன் எப்படிச் சமாளிக்கிறதென்று தெரியாமல் விழிக்க வைத்தாய்? பிறகு நீயே வழி காண்பித்தாய்!" என்று ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார் பரமசிவம்.

"சார்! என் பேரக் குழந்தைகள் இரண்டும் படிக்க இலவசமாக இடமளிக்க வேண்டியதில்லை. அந்த இடங்களில் வேறு இரு ஏழைக் குழந்தைகளுக்கு உதவி செய்யுங்கள்" என்று கூறினார் பரமசிவம். அந்தத் தள்ளாத வயதிலும் தன் பேரக் குழந்தைகளுக்காக உழைக்கப் போவதிலுள்ள ஆனந்தம் அவர் முகத்தில் நன்கு பிரதிபலித்தது. அதைக் கேட்டுத் தலைமை ஆசிரியர் திகைத்து நின்றுவிட்டார்.

'பரமசிவத்துக்குத்தான் எத்தனை பெருந்தன்மை! அவர் அன்புக் கடல்தான்!' என்று தலைமையாசிரியரின் வாய் முணுமுணுத்தது.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



ஆம், நாள்தோறும் நறுமணமுள்ள ரெக்ஸோனா உபயோகித்தால், உங்கள் மேனி அதிக சோபையும், புதுமலர்ச்சியும் பெற்றுவரும்! ஏனெனில், நறுமணமுள்ள ரெக்ஸோனா ஒன்றுதான் கேடில் கலந்த சோப். சரும எழிலுக்கான பற்பல எண்ணெய்களின் விசேஷக் கலவையே கேடில். ரெக்ஸோனாவின் இனிமையான நறுமணமும், செழிப்பூட்டும், மென்மையான நுரையும் உங்களுக்கு இன்பமூட்டுபவை; அழகு தரும் இந்த சோப்பை தினந்தோறும் உபயோகியுங்கள். ரெக்ஸோனா உங்கள் இயற்கை அழகை வெளிக்கொணரத் துணைபுரியும்!



–கேடில் கலந்துள்ள சோப் இது ஒன்றே

RP. 146-50 TM